சுதேசமித்திரன்

மார்ச் 6



ஒரு புராதன வைத்தியம்

இவ்விதமாகவே நல்ல செய்திகள் பரவுகின்றன. உட்வார்ட்ஸ் கிரைப் வாட்டர் குழந்தைகளை நன்கு பாதுகாக்கிறது

WOODWARD'S GRIPE WATER

keeps baby well

I-WW 111-111

W. WOODWARD LTD. LONDON, ENGLAND

ஜாதகம்! ★ ஆருடம்!!

இன்றே எழுதுங்கள் பிறந்த தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.



கட்டண விவரம்:—1 முதல் 3 உமது எதிர்கால கேள்விகட்கு ரூ. 2 3—க்கு மேல் கேள்வி 1—க்கு அணா 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35.

குறிப்பு: வெளிநாடுக்கு இரட்டிபபுகட்டணம்.

Lt. Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்—தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்கு திடீரென்று ரூ 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது

★

மானேஜர்,

வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ,

தெப்பக்குளம் P. O. (தென் இந்தியா)

விரோதி ௵

சாந்திர ஸௌரமான நேத்ர ஜீவாதி வடச்சேரி

சுத்த திருக்கணித சர்வ முகூர்த்த

பஞ்சாங்கம்

வாணியம்பாடி, வடச்சேரி ஸ்ரீ குரு பாஸ்கராச்சாரியார் ஜோதிஷர் V. K. சுப்ரமண்ய சாஸ்திரியார் குமாரர்

ஸ்ரீ K.S. ராமமூர்த்தி சர்மா கணித்தது.

சுதேசமித்திரன் வாசகர்களின் உபயோகத்திற்கென பிரத்யேகமாக வெளியிடப்படுவது. உள்ளூர் ஏஜண்டுகளிட்டம் கீழ் குறிப்பிட்டுள்ள விலைக்குப் பெற்றுக்கொள்ளும்படி நேயர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம். காப்பி கிடைக்காவிடில் தயவு செய்து உடனே ஆபீசிற்கு தெரிவிக்கவும்.

ஏஜண்டு மூலம் பிரதி ஒன்றுக்கு 2½ அணா
தபால் மூலம் „ „ 3 அணா

குறிப்பு: சந்தாதார்களுக்கு ஒரே ஒரு காப்பி மட்டும்தான் அனுப்பப்படும். அதன் கிரயம் கணக்கில் பற்றெழுதப்படும். தேவையில்லையெனில், கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:

சர்க்குலேஷன் மானேஜர்,

சுதேசமித்திரன் ஆபீஸ், விக்டரி ஹவுஸ், மவுண்ட்ரோட்

சென்னை.

"நூரேஜிஸம்" யூனானி டானிக் ஹல்வா.

25 வருஷங்களாக இந்த அற்புத டானிக்கை உபயோகித்தவர் இதன் ஆச்சரிய குணத்தை மெச்சாதவர் இல்லை. உபயோகித்த அன்றே அபார பசி ஆச்சரிய சக்தி வந்துவிட்டது புலனாகும். சகல விடமின்களும் நிறைந்த இது பாலர்கள் கர்பிணிகள் பிரசவித்த தாய்மார்கள், பல குறைவாய் உள்ளவர்கள், நரம்பு தளர்ந்தவர்கள், வியாதிக்கு பிறகு சக்தி குறைவாய் உள்ளவர்களுக்கு அபார சக்தியை கொடுக்கும். இதனால் அநேக பலஹீன வியாதிகள் பரக்கும் அபார ஜீவ சக்தியை உண்டாக்கும்—பத்தியமில்லை பரீக்ஷியுங்கள்

விலை 1 பவுண்டு 40-நாள். 80-வேளை. ரூ 16-0-0
½ பவுண்டு 20 „ 40 „ ரூ. 9-0-0

V P செலவு தனி

Dr. H. B. S. அத்திபழ ஹல்வா பேதி மருந்து இல்லாத பல சிக்கல் நிவாரணி பழைய பலங்களை அன்றாடம் கழிக்கும். அநேக வியாதிகள் இதனால் நிவர்த்தியாகும். வாய்வு திரேகிகளுக்கு ஏற்றது. கர்பிணிகளும், பிள்ளைகளும், உபயோகிக்கலாம். தின்பதற்கு ருசி. பத்தியமில்லை நினைத்தபோது சாப்பிடக்கூடியது.

விலை 1-பவுண்டு ரூ. 5-0-0 ½ பவுண்டு ரூ. 3-0-0

V. P செலவு தனி

யூனானி வைத்தியம்:—பல கஷ்ட சாத்திய வியாதிகளை பத்தியமில்லாத லேசான இட்காமுறைகளால் தீர்த்துக் கொள்ளலாம். நேரில் இலவச ஆலோசனை கேளுங்கள்.

RAHAMATH PHARMACY (ESTD 1925)
55. Parish Venkatachala Iyer St. G T. Madras.

"ரோட்டரி பேப்பர் கட்டிங் மிஷின்கள்"

சுதேசீய தயாரிப்பு.



மின்சார சக்தியினாலும், கையினாலும் ஓட்டக்கூடியது. ஒவ்வொரு அச்சகத்துக்கும், பைண்டிங் ஷாப்புகளுக்கும் இன்றியமையாதது சுத்தமானதும். உறுதியுமான வேலைப்பாடு. நமபிக்கையாகவும், நிடித்தும் உழைக்கக்கூடியது.

2 தினுசுகளில் எப்போதும் விற்பனைக்குத் தயார்.

கிடைக்கும் சைஸ்கள்: (18"X24") 18"X24" விலை விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதுக

SRI RAMAKRISHNA MILL STORES,
Mill Stores & Machinery Merchants,
6-B Errabalu Chetty Street. G.T., MADRAS.

சுதேசமித்திரன்

பொருளடக்கம்

		பக்கம்
வளையல்காரன்	'ஜெக சிற்பியன்'	5
தேர்த்தட்டு வார்த்தை	'வாரன்'	10
சொப்பன வாழ்க்கை (தொடர் கதை)	'ஆர்வி'	12
ரமாவைக் கேளுங்கள்!	'குங்குமம்'	19
கலாமண்டபம்	'சாண்டில்யன்'	23
பெரிய புராணம்	பி ஸ்ரீ.	29
விமலா (கதை)	எல் வி. எஸ். மணியன்	31
குற்றவாளி	'தில்லை வாசி'	35
பெண்மை அழகு	லக்ஷ்மி அம்மாள்	40
நாமொன்று நினைக்க...	ய. மஹாலிங்க சாஸ்திரிகள்	42
அன்பின் பரிசு (சிறுவர் கதை)	'மணி'	47

''மித்திரன்'' வாரப்பதிப்பில் தோன்றும், பெயர்கள், சம்பவங்கள் அனைத்தும் முற்றிலும் கற்பனையே. அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வாழிய செந்தமிழ்!

சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

வாழ்க நற்றமிழர்!

Vol. XX] ஸர்வதாரி௵ மாசிமீ 23உ ★ 1949-௵ மார்ச்மீ 6உ No. 5

சுமை ஏறுகிறது!

சென்ற வார இறுதியில் சென்னை சர்க்கார் வரவு செலவுத் திட்டமும் திங்களன்று மத்திய சர்க்கார் வரவு செலவுத் திட்டமும் வெளியாயின. இவை இரண்டிலும் மக்கள் குதூகலிக்கக்கூடிய அம்சம் இல்லை என்பது எடுத்த எடுப்பிலேயே துலங்கும். ஏற்கனவே வரிப்பளுவாலும், விலை வாசிகளின் ஏற்றத்தாலும் அலைலறப்படும் சாமானிய மக்களுக்கு, சர்க்காரின் வரவு செலவுத் திட்டங்கள் சிறிதும் ஆறுதலளிக்ககூடியவை அன்று. மாகாண சர்க்கார் வரவு செலவில் துண்டு விழுவதைச் சரிக்கட்ட, அன்றாட வாழ்வில் மக்களுக்கு அத்தியாவசியமாகவுள்ள பல இனங்களுக்கு 'தற்காலிக" என்ற பதப் பிரயோகத்துடன் அதிகமாக வரி விதிக்கப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்காரும் கார்டு, கவர் விலைகளை உயர்த்தி விட்டனர்.

சென்னை சர்க்கார் வரவு செலவுத் திட்டத்தைப் பொறுததவரையில், மாகாண நிதி மந்திரி செய்திருக்கும் நீண்ட பிரசங்கம் சமாதானத்தையோ, சாந்தியையோ தருவதாக இல்லை என்பது தெளிவு சுதந்திரம் பெற்றதன் பயனை எல்லாத் துறைகளிலும் பிரதிபலிக்கச் செய்வதுபோல் பேசியிருக்கிறார். நோக்கம் நல்லதுதான். ஊன்றிக் கவனிக்கும்போது ஒரே முடிவுதான் ஏற்படக்கூடும். சர்க்கார் மிகக் குறுகிய காலததில் அதிகம் சாதிக்கப்பார்க்கின்றனர். பலன் கிட்டுமா என்பது சந்தேகமே.

முன்பெல்லாம் கிராமாந்தரங்கள் மீது வரிப்பளு மிகுதியும் சுமத்தப்படுகிறது, ஆனால், வசதிகளோ நகரப் பிரதேசங்களுக்கே அதிகம்செய்யப்படுகிறது என்று குறை கூறினர். இப்போது போக்கு நேர் மாறாகத் திரும்பி விட்டதுபோல் தோன்றுகிறது மாகாணத்தின் பொதுவான செல்வ அபிவிருத்திக்கு இரு முறைகளும் உகந்தவையல்ல. ஒன்றைப் பாதித்து மற்றொன்றைக் கவனிப்பதென்பது என்றும் சரியான முறையாகாது. ருஜுவான முன்னேற்றமேற்படவும், அரசியல் சுதந்திரம் பெற்ற தன் பயனை நன்கு அனுபவிக்கவும், பொருளாதார ரீதியில் வரிப்பளுவை சரிசமமாக்க வேண்டும். அதற்கான முயற்சி ஏதும் செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

வரவு செலவு திட்டத்தில் துண்டு விழும் நான்கு கோடி எப்படி ஏற்படுகிறது? ஏதோ சில வருவாய் இனங்களைக் குறைத்தும் பல செலவினங்களைத் திருத்தியும் இந்தத் துண்டுத் தொகை காட்டப்படுகிறது சிந்தித்துப் பார்த்தால் உண்மையிலேயே பாக்கி விழுகிறதா என்ற சந்தேகம் ஏற்படும். உதாரணமாக, நடை வருஷத்தில் ஒன்பது மாத கணக்கைக்கொண்டே எதிர்பார்த்த துண்டுத் தொகையில் இரண்டு கோடிக்குமேல் குறைவு ஏற்பட்டிருக்கிறது அதிக ஜாக்கிரதையுடன் சீரான முறையில் திட்டத்தைத் தயாரிப்பது அத்தியாவசிமென்பதைக் காட்டவே இதைக் குறிப்பிடுகிறோம். இதைச் செய்வதுடன் சிக்கனத்தையும் உறுதியாகச் செய்தால் இந்த சொற்ப துண்டுத் தொகையைச் சரிக்கட்டியிருக்க முடியாதா?

அதை விட்டு நான்கு கோடியைச் சரிக்கட்ட புதிய வரிகள் போட யோசனை கூறப்பட்டுள்ளது. விலைவாசிகள் ஏற்றத்தால் ஜனங்கள் மிகுந்த அவதிப்படுகின்றனர் அவர்கள் தலையிலேயே புதிய வரிகள்மூலம் அதிகப்பளு சுமத்தப்படுகிறது நகரில் வசிப்பவர்கள், நிரந்தர மாதச் சம்பளம் பெறும் மத்தியதர வகுப்பினர் ஆகியோரின் குடும்ப வாழ்க்கை விலைவாசி உயர்வால் தத்தளித்து வருகிறது. ஏறிக்கொண்டே போகும் விலைவாசிகளைக் கட்டுப்படுத்தி அவர்கள் கஷ்ட நிவர்த்தி பெற வழி காணவில்லை. ஸ்ரீ கோபால் ரெட்டி இப்போது வெளியிட்டுள்ள வரி யோசனைகளோ அவர்களுக்கு இன்னும் அதிகக் கஷ்டத்தையே உண்டுபண்ணுமென்பதில் சந்தேகமில்லை புதிய விற்பனை வரிகள் பெரும்பாலும் உணவுப்பொருள்களையே பாதிக்கின்றன. வரி விதிப்பு தற்காலிகம் தான், இந்த வருஷத்திற்கு மட்டில்தான் இருக்கும் என்று கூறப்படுகிறது. இவ்வருஷத்திற்கு மட்டும்தான் என்று வைத்துக்கொண்டாலும், அடுத்த வருஷக் கடைசிக்குள் இதனால் ஏற்படக் கூடிய பலன் என்ன? ஏறகனவே சந்தேகத்திற்

—அடுத்த பக்கம்.



சென்னை வந்திருந்தபோது ஸர்தார் படேல் மாபெரும் கூட்டத்தில் பேசினார். பிரசங்கத்தை ஹிந்தியில் செய்வதா? இங்கிலீஷிலா? என்ற பிரச்னை எழுந்தபோது "தமிழில்!" என்று ஒரு பகுதியினர் கூறவே ஸர்தார் விலா வெடிக்கும்படி சிரித்தார்.

கும் சஞ்சலத்திற்கும் ஆளாகியுள்ள ஜனங்களின் நம்பிக்கை ஆட்டம் கண்டுவிடும்.

சர்க்காருக்கு அதிக வருமானம் கிடைத்துத் தான் ஆகவேண்டுமென்றால், அதற்கும் தற்கால நிலைமையில் அதிக நேர்மையான வழிகளைக் கண்டு பிடித்திருக்கலாம் மற்றவர்களுடன் ஒப்பிட்டால் நிலச்சுவான்தார்தான் இன்றைய நிலையில் அதிக வசதிபெற்றவர் கிஸ்தி மீது படிப்படியான விகிதத்தில் ஸர்சார்ஜ் விதிப்பதான யோசனையைத் தயாரிப்பது ஒரு கஷ்டமான காரியமல்ல. அவ்வகையில் இந்த நான்கு கோடி எளிதில் கிடைத்திருக்கும் நெல் விலை உயர்ந்துள்ள இந்நிலையில் நகரவாசிகளைப்போல் அவர்களுக்கு இந்த ஸர்சார்ஜ் ஒரு பளுவாகமாட்டாது சர்க்கார் வரி விதிப்பின் பலனைக் கவனித்தால் ஏழைகளே அதிகத துன்பத்திற்கு ஆளாக்கப்படுகின்றனரென்பது எளிதில் புலனாகும். அவர்கள் குடும்பச் செலவு இன்னும் அதிகரிக்கவேண்டியதுதான். பஸ் போக்குவரத்திற்கெல்லாம் அதிகக் கட்டணம் செலுத்தவேண்டும். குடியிருக்கும் வீட்டு வாடகை உயரும் ஆபத்தும் ஏற்படலாம்.

நகரங்களில் ஸ்தாவர சொத்து விற்பனை செய்வதாயின் அதில் கிடைக்கும் அதிகப் பணத்தில் 25 சத விகிதம் வரி போடப்படுகிறது. இது எவ்வளவு தூரம் நியாயம் என்பதை யோசிக்கவேண்டும். சொத்து விலை உயர்வு சம்பாதிக்கப்படாத வருமானம் எனக் கூறுவது நேர்மையல்ல பண வீக்கத்தினால் ரூபாய் மதிப்பு குறைந்து சொத்து விலை உயர்ந்தால அதற்குச் சொத்துடையவர்கள் ஜவாப்தாரியல்ல இப்போதுள்ள ரூபாய் மதிப்பில் அவ்விலை என்றே ஏற்படுகிறது இதில் சர்க்கார் பங்கு கேட்பது சரியல்ல தவிர இதில் மற்றொரு விஷயத்தையும் சென்னை சர்க்கார் கவனிக்கவேண்டும் சொத்து கைமாறுவதில் மூலதன லாப வரி என மத்திய சர்க்கார் ஒரு வரி விதித்திருந்தனர். அதேதுறையிலேயே சென்னை சர்க்காரும் கைவைப்பது சட்ட வரம்புக்குட்பட்டதா என்னும் சந்தேகம ஏற்படுகிறது

எனவே இந்த வரவு செலவுத் திட்டம் குறித்து சென்னை சர்க்காரைப் பாராட்டுவதற்கில்லை பலாபலன்களை ஆராயாமல் பல்வேறு யோசனைகளையும் அவர்கள் இழுத்துப் போட்டுக்கொண்டதை விட்டு வருமானத்திற்கு ஏற்ப செலவைத் தயாரித்திருப்பின் மேலாகவிருந்திருக்கும்.

வளையல் காரன்



ஜெகசிற்பியன்

பட்டப் பகல். சூரியனின் வெப்பத்தைத் தாளமாட்டாமல் ரோடிலுள்ள ஓதிய மரங்களின் இலைகள் யாவும் நெருப்பில் வாட்டியதுபோல வதங்கித் துவண்டு தலைகவிழ்ந்திருந்தன. 'தார்ரோடு' தளதள வென உருகி நிற்பதில் கார்கள் செல்லும்போது எழும் 'கர கர' ஓசை, அந்த நடுப்பகலை மிகைப்படுத்துவதாய் இருந்தது. 'வெயிலும், மழையும் எங்கள் உடன் பிறந்த தோழர்கள்' என்று சொல்வதைப் போல ரிக்ஷாகாரன் ஒருவன் அந்தக்கானல் அருவியில் நீந்தி உல்லாசமாகப் பவனி வந்து கொண்டிருநதான் மணி பன்னிரண்டாகிவிட்டதால் பள்ளிமாணவர்களும், மாணவிகளும் பரக்கப் பரக்க அவரவர் வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்தனர்.

வராந்தாவின் கட்டைச் சுவரில் உடகார்ந்தபடி தையல் வேலையில் ஈடுபட்டிருந்தேன். அடிக்கொருதரம் தெருவாயிலை நோக்கிக் கொண்டிருந்தன என் கண்கள். கூச்சலும் கும்மாளமுமாகச் சென்று கொண்டிருந்த பள்ளி மாணவர்களும் கலந்துசென்றுவிட்டனர். இன்னும் என் அருமைச் செல்வன் கோபு வரவில்லை. கோபுவை பள்ளியிலிருந்து அழைத்துவரச் சென்றிருந்த ரிக்ஷாகாரன் மீது எனக்கு அசாத்ய கோபம் வந்தது. மீண்டும் என் பணியில் ஈடுபடலானேன்.

"வளையலோ வளையல்! பச்சை வளையல், பால் வளையல்......"

குத்தின ஊசியை அப்படியே விட்டுவிட்டு குரல் வந்த திக்கை நோக்கினேன். எங்கள் வீட்டுக்கு வரும் வாடிக்கை வளையல்காரன் தான் அப்படிக் கூவிக்கொண்டு வந்தான். அவனை எனக்கு வெகு நாளாகத் தெரியும். சுமார் ஐந்தாண்டுகளாக எங்கள் குடும்பங்களின் பெண்கள் அத்தனை பேருடைய கைகளையும் அழகு செயபவன் அவன்தான் அவன் சிரிக்கச்சிரிக்கப் பேசி வளைமாட்டுவதே ஒரு தனி கவர்ச்சியாயிருக்கும் என்னென்ன புது வளையல்கள் வருகிறதோ அவ்வளவையும் முதன் முதலில் இங்கு கொண்டு வந்து விடுவான் தெரு வாசற்படியில் அவன் குரல் கேட்டதுமே என் கணவர் என்னைக் கேலிப் புன்னகையுடன் நோக்கி "பாரு! அதோ உன் தாத்தா வந்துட்டான் முதலிலே போய் உன் கையை அவனிடம் நீட்டு!" என்பார். அவனும் சர்வசுதந்திரமாக கூடத்தில் வந்து உட்கார்ந்து கொண்டு வளைகளைப் பரப்ப ஆரம்பித்து விடுவான் ஆனால் இன்று........"

மறுபடியும் குரல் கொடுத்துக் கொண்டே எங்கள் வீட்டு வாசற்படியின்மேல் ஏறி நின்றான் அவன். அவனைக் கண்டதும் துள்ளி ஓடும் நான், இன்று வழக்கத்துக்கு மாறாக இருந்த இடத்திலேயே அசைவற்று உடகார்ந்திருந்தேன். என் செயல் அவனுக்கு ஆச்சரியத்தை அளித்ததோ என்னவோ! அவனும் சற்றுநேரம் அசைவற்று அப்படியே நின்றிருந்தான். பின்னர் என்னை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, தயங்கிக் கொண்டே வந்த வழியே திரும்பி நடக்கலானான். என் நிலையை அவன் ஒரு விநாடியில் அறிந்து கொண்டான்போலும்! வயதின் முதிர்ச்சியாலும், வெயிலின் கடுமையாலும் வறண்டிருந்த அவனது கண்கள்கூட ஏனோ கலங்கிவிட்டன. வளையற்காரன் என்னைக்கண்டு திரும்பிச் சென்றது என் இதயத்தை வாளால் அறுப்பதுபோன்ற வேதனையை எனக்குண்டாகியது. துககத்தின் சோர்வால் பின்னாலிருந்த சுவரின் மீது அப்படியே சாய்ந்துவிட்டேன். சென்ற ஆண்டின் இறுதியில் என் வாழ்க்கைக் கனியில் திடீரென ஏற்பட்ட மாறுதல் நிகழ்ச்சி, என் மனத்திரையில் நெளிநதாடத் தொடங்கியது.

* * * *

தமிழ் வருஷப்பிறப்புக்கு முந்திய நாள் சுதந்திரமடைந்த முதல் வருஷப்பிறப்பானதால் எல்லோருமே ஒரு தனி குதூகலத்தோடுதான் அந்த நாளை எதிர்நோககிக்கொண்டிருந்தனர். என் கணவர் எனக்குத் தெரியாமலேயே அசோகச் சக்கரம் பதித்த இரண்டு ஜதை தங்க வளையல்கள் செய்துகொண்டுவந்து, அவர் கோட பாக்கட்டிலேயே வைத்துக் கொண்டிருந்தார். வீட்டு வேலைகளையெல்லாம் முடித்துக் கொண்டு, கையில் காபியுடன் அவர் அறைக்குச் சென்றேன். கோபுவை முதுகின்மீது ஏற்றிக் கொண்டு, 'யானை விளையாடடு' காட்டிக்கொண்டிருந்தார். என்னைக்கண்டதும் கோபு அவர் முதுகின் மீதிருந்து துள்ளிகுதித்து ஓடி வந்து என் கால்களைக்கட்டிப்பிடித்துக்கொண்டான்

"நன்றாயிருக்கிறது விளையாடடு! கோபுவுக்கு விளையாட்டு காட்டுகிறீர்களா? அல்லது கோபுவைப் போல் நீங்களிருந்த அந்த வயதின் நினைவு வந்து, விளையாட ஆரம்பித்துவிட்டீர்களா?" என்றேன் சிரித்துக்கொண்டே.

"ஏன்? உனக்கும் ஆசையாக இருந்தால் வந்து என் முதுகில்

உட்கார்ந்துகொள்...நாம் இரண்டு பேரும் யானை விளையாட்டு விளையாடலாம்!'' என்றார் அவர் கண்களைச் சிமிட்டிக்கொண்டே.

"போங்கள்! அழகுதான்." என்றேன். நான் எங்களிருவரின் சம்பாஷணையை அறிந்துகொண்டுதானோ என்னவோ, கோபு தன் முத்துப் பற்களைக் காட்டி கைகொட்டி நகைத்தான்.

"பாரு! உனக்கு முதல் சுதந்திர வருஷத்துக்கு ஒரு அழகிய பரிசு கொடுக்கப் போகிறேன்!'' என்று சொல்லிக்கொண்டே என் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு போய் கட்டிலின் மீது உட்கார வைத்துவிட்டு. அவர் கோட் பாக்கெட்டிலிருந்து ஒரு பொட்டணத்தை எடுத்து வந்து என்னிடம் நீட்டினார். ஆச்சரிய மிகுதியினால் நான் அப்பொட்டணத்தைப் பிரித்துப் பார்த்தேன். மூவர்ணக் கொடியின் நடுவில் பொறித்துள்ள அசோகச் சக்கரம் போன்று இரண்டு ஜதை தங்க வளையல்களின் நடுவில் சரம் கோத்தாற்போல் சிறு சிறு சக்கரங்கள் பதித்த வேலைப்பாடுள்ளதாய் அவை விளங்கின. எனக்கு ஆனந்தம் அளவுக்கு மீறி சென்றுவிட்டது. மலர்ந்த விழிகளுடன் அவரையே பார்த்துக்கொண்டிருந்தேன். அவர் சாவகாசமாக என் பக்கத்தில் வந்து உட்கார்ந்துகொண்டு. அந்த வளைகளை ஒவ்வொன்றாக என் கரங்களில் போட்டுக்கொண்டிருந்தார்.

இந்த சமயத்தில் வளையல் பல்லவியை இழுத்துக்கொண்டே வாயற்படியில் ஏறினான் எங்கள் வீட்டு வாடிக்கை வளையல்காரன்.

"பாரு! அதோ உன் தாத்தா வந்துவிட்டான் இதன் மேலேயே இரண்டு மெல்லிய சங்கு வளையல்கள் போட்டுக்கொள் அப்போதுதான் கைக்கு எடுப்பாக இருக்கும்." என்று சொல்லிவிட்டு மறுபடியும் கோபுவுடன் யானை விளையாட்டு விளையாட ஆரம்பித்துவிட்டார்.

நான் கூடத்திற்குப்போய் வளையல்காரன் எதிரில் உட்கார்ந்துகொண்டேன். பல்லில்லா வாயால் அவன் தொண தொணக்க ஆரம்பித்துவிட்டான்

"அம்மா! முந்தாநாள்தான் காஷ்மீரிலிருந்து இந்த 'ஜான்ஸி' வளையல் வந்தது. உங்கள் கைக்கு இதைப் போட்டால் சாட்சாத் மகாலட்சுமிபோல இருப்பீர்கள்.....இந்தவளையல் போன வாரத்திலே குஜராத்திலேயிருந்து வந்தது. பெயர் 'ஜான்ஸி ராணி வளையல்' இதிலே ஒரு ஜதை போட்டுக்குங்கோ!........'' என்று இன்னும் அவன் வளையல் மகாத்மியத்தை அளந்துகொண்டே போனான்.

அவன் கூறியபடியே அத்தனை புது தினுசுகளிலும் ஒவ்வொன்றைப் போட்டுக்கொண்டு கடைசியாக என் கணவர் சொன்னபடி சங்கு வளை ஒரு ஜதை போடச் சொல்லி அவனிடம் சொன்னேன்.

"ஆமாம்மா! உங்கள் கையழகைப் பார்த்தா உங்க அகத்துக்காரரே கண் போட்டுவிடுவார்! திருஷ்டிப் பரிகாரமாக சங்கு வளையல் ஒவ்வொன்று மாட்ட வேண்டியதுதான்''...என்று சொல்லிக்கொண்டே, என் கையில் சங்கு வளை ஒன்றை எடுத்து போட்டான். கொஞ்ச தூரம் சென்றதும் 'பட'பென உடைந்துவிட்டது அந்தவளையல்! மீண்டும் ஒன்றை எடுத்து மாட்டினான். அதுவும் உடைந்துவிட்டது! மறுபடியும் ஒருஜதை அதுவும் 'மளுக்' கென உடைந்து நொறுங்கியது! எனக்கு வளையற்காரன்மீது மிகுந்த பச்சாதாபமாகிவிட்டது. இப்படியே போடும வளையல்களெல்லாம் உடைந்துகொண்டு வந்தால் அவனுக்கு என்னிடம் வளையல்விற்ற லாபமெல்லாம் சரிகட்டியாகிவிடுமல்லவா?

வளையல்காரனின் நெற்றியில் துணுக்குறும் ரேகைகள் நெளிந்து மடிந்து விரிந்தன. குதூகலமான அவனுடைய முகத்தில் கவலை மேகங்கள் கவிந்துகொண்டன என் முகத்தை ஏனோ மிரள மிரளப் பார்த்தான் அவன்.

"தாதா! எனக்கு சங்கு வளையல் வேண்டாம். போட்டவரையிலும்

போதும். உடைந்து போன வளையல்களுக்கும் சேர்த்து கணக்கைச் சொல்லு!'' என்று சொல்லி, பணம் எடுத்து வர உள்ளே சென்றேன். இன்னும் அவன் என்னைப் பார்ப்பதிலிருந்து அசையவே இல்லை.

ரூபாயைக் கொண்டு வந்து அவ்னிடம் நீட்டினேன் போட்ட வளையல்களுக்குமட்டும் காசு எடுத்துக்கொண்டு பேசாமல் எழுந்து போய்விட்டான். 'சங்கு வளையல் மூன்றுதரம் கையில் போட்டு உடையக்கூடாது' என்று என் பாட்டி சொன்னது எனக்கு இப்போது ஞாபகம் வந்தது. இதற்காகத்தான் அந்த வளையல்காரன் அப்படி கவலைப்பட்டுக் கொண்டான் என்று, அவன் போனபிறகுதான் அறிந்துகொண்டேன். இது எனக்கு அப்போது வேடிக்கையாயிருந்தது.

சாப்பிட இலை போட்டுவிட்டு என் கணவரை அழைத்து வருவதற்காக அவர் அறைக்குச் சென்றேன். 'யானை விளையாட்டு' போய் இப்போது 'கண்ணாமூச்சி' ஆடிக்கொண்டிருந்தார்கள் கோபுவும் 'அவரும்'!

''விளையாடினது போதும்! சாப்பிட வாங்கோ!'' என்று அழைத்தேன்

விளையாட்டிலிருந்து விடுபட்ட அவர் என் கரங்களை அதிசயத்துடன் நோக்கினார். அவருக்கு என்ன தோன்றியதோ! கோபுவைத் தூக்கிக்கொண்டு ஓடிவந்து. என கரங்களைப் பிடித்து அவர்... ......கொடுத்தார்!

''கோபு! இதோ பாரு, உன் அம்மாவை அவளை உனக்கு அடையாளம் தெரியறதோ?!'' என்றார் கோபுவைப் பார்த்து.

''ஏம்பா! நம்ம அம்மா தானே...? எனக்கு நன்னா தெரியுமே!'' என்றான கோபு. அவன் குஞ்சுக் கரங்களை விரித்துக்கொண்டே.

* * * * *

மாலை மணி மூன்றாகிவிட்டது. காபி சாப்பிட்டதும் அவர் என்னிடம் வந்து, ''பார்வதி! கோபுவுக்கு புஷ் கோட்' தைக்கச் சொல்லி நௌரோஜிராவிடம் கொடுத்திருக்கிறேன். அதைப் போய் வாங்கிக்கொண்டு வந்து விடுகிறேன். பலகாரங்கள் செய்ய அதிகக் கஷ்டப்பட்டுக் கொள்ளாதே! வேலைக்காரியை வைத்துக் கொண்டு பார்த்துக்கொள். இதோ ஐந்து நிமிஷத்தில் வந்து விடுகிறேன்'' என்று சொல்லி வெளியே கிளம்பி விட்டார்.

* *

கனகாம்பரமும மல்லியும் சரம் கோத்த ஒரு 'சுமை' பூவும், கோபுவுக்கு சட்டையும் வாங்கிக் கொண்டு ஆறுமணிக்கு வீடுவந்து சேர்ந்தார் வந்ததும் வராததுக்காக, ''பாரு! எனக்குத்தலை வலிக்கிறது. தைலம் இருந்தால் கொஞ்சம் கொண்டுவந்து தேய்த்துவிடுகிறாயா?' என்று சொல்லிக் கொண்டே கட்டிலில்போய் படுத்துக்கொண்டார்.

நடந்துவந்த களைப்பால் தலைவலி ஏற்பட்டிருக்கலாம் என்று எண்ணி தைலம் கொண்டுவந்து தேய்த்து விட்டேன்.

பிறகு என் வேலைகளையெல்லாம் முடித்துக்கொண்டு, அவரை வந்து பார்க்கும்போது, படுத்தது படுத்தபடியேதான் இருந்தார். கட்டிலண்டைப் போய் அவர் போர்த்தியிருந்த கம்பளியை நீக்கிவிட்டு, நெற்றியில் கைவைத்துப் பார்த்தேன் நெருப்பு போன்று கொதித்துக்கொண்டிருந்தது அவர் தேகமெல்லாம்! பிரக்ஞையற்று புரண்டுகொண்டிருந்தார் அவர். எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

நேரமாக ஆக ஜுரத்தின் வேகம் உச்ச நிலையை எட்டிப் பிடித்துக்கொண்டிருந்தது வேலைக்காரர்களெல்லாம் வீட்டுக்குப் போய்விட்டதால் டாக்டரையோ மற்றவர்களையோ அழைத்துக் கொண்டுவர இயலவில்லை விடிந்ததும் நானே போய் அழைத்துவந்துவிடலாம் என்று மனதைத் தைரியப்படுத்திக்கொண்டு, இரவெல்லாம் அவர் பக்கத்திலேயே கண் விழித்து உட்கார்ந்துகொண்டிருந்தேன்

பொழுது புலாவதற்குள் ஜனங்கள் எழுந்து புத்தாண்டை வரவேற்க ஆரவாரம் செய்துகொண்டிருந்தனர். சிறுவர்களின் கூச்சலும் சப்தமும் காதை கிலுகிலுக்க வைத்தன கோபு இன்னும் படுக்கையிலிருந்து எழுந்திருக்கவில்லை.

காலை மணி ஆறு அடித்துவிட்டது

''பார்வதி...!'' என்று என் கணவர் கம்மிய குரலில் அழைத்தார். துடித்துப் பதறி எழுந்து அவரருகில் போய் நின்றேன்

''கோபு...?'' இப்படிச் சொல்லிக்கொண்டே என்னைப் பரிதாபமாகப் பார்த்தார். எனக்குத் துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது. 'கோ' வென கதறிக் கொண்டே கோபுவை எழுப்பி அவர் பக்கத்தில் உட்கார வைத்தேன். அடுத்த கணம் அவர் கண்கள் அப்படியேஅசையாமல் நின்றுவிட்டன!...நேற்று மத்தியானம் நடந்த அந்த வளையல் சம்பவம் என்கண்ணெதிரே வந்துநின்றது.

* * * *

''அம்மா!.........''

என் சிந்தனையிலிருந்து விடுபட்டு எழுந்து ஓடிப்போய், பள்ளியிலிருந்துவந்த கோபுவை வாரி அணைத்துக்கொண்டேன் கலங்கி நின்ற என் கண்களை கோபு, தன் தளிர் கரங்களினால் துடைக்கப் பிரயத்தனப்பட்டான் அதே சமயத்தில் வீதியின் கோடியில் சென்றுகொண்டிருந்த வளையல்காரன், நின்று ஒரு முறை என் வீட்டை நோக்கிவிட்டு மறுபடியும் நடக்க ஆரம்பித்தான்.





இந்தியாவின் உதவிப் பிரதமமந்திரி ஸர்தார் வல்லபாய் படேல் சென்னையில் சென்ற வாரம் தங்கியிருந்த 2 நாட்களிலும் சென்னைக் காங்கிரஸ்காரர்களுக்கும்; தொழிலாளர்களுக்கும் அரிய உபதேசங்களைச் செய்தார். அவை நமது மாகாணத்தின் பூர்விக கௌரவத்தை நிலை நாட்ட உதவக்கூடும். சென்னைக் கவர்னருடன் ஸர்தார், காங்கிரஸ் எம். எல். ஏ.,க்களுக்கும், காங்கிரஸ் வாதிகளுக்கும் உபதேசித்து விட்டுத் திரும்புகையில் எடுத்த படம். கவர்னர், கிண்டியில் அளித்த விருந்தில் ஸர்தார் படேல்.

''தர்மத்துக்காகக்கூடச் சிரிக்காதவர் ஸர்தார்' என்று சொல்லுவார்கள். சென்னையில் அவ்வபிப்பிராயத்துக்கு விலக்கேற்பட்டதென்பதை எதிரேயுள்ள படம் நிரூபிக்கிறதல்லவா?



தேர்த்தட்டு வார்த்தை

வாரன்

'குஞ்சரன்'

16
யோகமே சிறந்தது.

★

வேதம் பல கர்மாக்களைச் சொல்லும். செய்தால் இன்ன பலன் கிட்டும் என்பதையும் தெரிவிக்கும் அப்பலன்களைக் கொடுப்பவனோ ஈச்வரன் கர்மாவைச் செய்கின்றவனுக்கோ தனது நன்மைக்கிடமாக எந்தப் பலனைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதே நன்கு தெரியாது. எந்தப் பலன் நன்மை செய்யும்? எந்தப் பலன் தீமையைத் தனக்கு உண்டாக்கும்? என்ற விவேகம் ஒருவனுக்குச் சரியாக அமைந்திருந்தால்தானே உரிய பலனைக் கொடுப்பவனிடம் வேண்டத் தெரியும் ஒரு பலனைக் கோரி ஒருவனிடம் சென்றாலும் கொடுப்பவன் சென்றவனை மதிப்பதில்லை ஏழைக்குப் யாரிடம் எதைக் கேட்கவேண்டுப் என்பதும் நன்கு தெரிவதில்லை குபேரன் ஒரு ஏழையைக் கண்டு மனமிரங்கி உனக்கு வேண்டியதைக் கேள்' என்றான் அப்பொழுது ஏழைக்குத் தன் கிராமத்தில் தவிடு விலை ஏறிப்போய் தன்னுடைய காளைக்கன்றிற்குத் தவிடு வாங்குவதில் இருந்த கஷ்டம் ஞாபகத்திற்கு வந்தது உடனே 'குறுணித் தவ்டு கொடு' என்று குபேரனைக் கேட்டானாம். இது கற்பனைக் கதையானாலும் பலன் கருதிக் காமியகருமங்களைச் செய்யும் உலகினரின் மனோநிலையை உள்ளபடி எடுத்துக் காட்டும் கண்ணாடி என்றே சொல்லலாம்

தவிட்டுப் பஞ்சம் போனால். புல்லுப் பஞ்சம். அதுபோனால் பருத்திக்கொட்டைப் பஞ்சம் என்று மாறி மாறிப் புதுப் பஞ்சம் வரும். எல்லாவற்றையும் ஒரேயடியாக ஒழித்துக்கட்ட வேண்டிய பெரியபலன் ஒன்றைக் குபேரனிடம் பெறமுடியும் என்பதை அறியமாட்டாத ஏழையின் நிலைதான் ஜீவாத்மாக்களின் நிலையும். ஒருவன் தேகாரோக்கியத்தை வேண்டுவான்; மற்றொருவன் செல்வத்தைவேண்டுவான்: மற்றொருவன் பதவியை: மற்றவன் சுவர்க்கத்தை. இவற்றில் எதுவும் நிலையான திருப்தியை உண்டாக்கப் போவதில்லை. ஒன்றைவிட்டு ஒன்றையோ கிடைத்ததைச் சேர்த்து மற்றையதையோ பற்றவே தூண்டும். அதனால் பிறப்பு இறப்பாகிற பந்தம் வலுவடைந்து கொண்டே போகும் குழந்தைக்கு 'நன்மை எது? தீமை எது?' என்பது தாய்க்கேநன்கு தெரிவதுபோல்ஜீவாத்மாவுக்கு உரிய பலன்களின் விஷயம்அவற்றைக் கொடுக்கும் ஈச்வரனுக்கேநன்குதெரியும். 'அதைத்தா இதைத்தா' என்று தாயை நச்சரிக்காமல் அடங்கி இருக்கவேண்டிய உத்தமக் குழந்தையைப்போலவே ஜீவாத்மாவும் தனக்குரிய வரம்பில் இருக்கவேண்டும் அர்ஜுனா! அவ்வரம்பைத்தெரிந்துகொள்

கருமத்தே உன்தன் அதிகாரம்
கண்டாய்
வரும்அப் பயனில்அணு மன்றது—
ஒருமித்து
மற்றதனுக்கு ஏதுவா மன்னேல்;
கருமம்அலா
வெற்றமைவில் வேண்டா விருப்பு.

(இ-ள்) கருமத்தே உன்தன் அதிகாரம் கண்டாய் கருமம் செய்வதில் மாத்திரம் உனக்கு அதிகாரம் இருக்கிறது எனத் தெரிந்துகொள்; வரும் அபயனில் அணுபன்றது—உண்டாகும் அந்தப் பலனில் சிறிதளவும் (சம்பந்தம்) பொருந்தாது; அதனுக்கு ஒருமித்து—கருமத்திற்கும் அதன் பலனுக்கும் சேர்ந்து ஏதுவா மன்னேல்—காரணமாக ஆகாதே: கருமம் அலா வெற்றமைவில்—கருமம் செய்யாது சோம்பி இருப்பதில். விருப்பு வேண்டா—(உனக்கு) விருப்பம் கூடாது.

4
கர்மண்யே வாதிகாரஸ்தே
2 3
மாபலேஷு கதாசந
2 4
மாகர்ம பல ஹேதுர்பூர்மா தே
3
ஸங்கோஸ்த்வ கர்மணி.

(இ ள்) தே—உனக்கு. கர்மணி ஏவ—கருமம் செய்வதில் மாத்திரமே அதிகாரம் (இருக்கிறது). பலேஷு—பலன்களில் கதாசந—ஒருக்காலும், மா—வேண்டாம். கர்மபல ஹேது:—கருமத்துக்கும் பலத்துக்கும் காரணமாக. மாபூ:—ஆகாதே. அகர்மணி—கருமம்செய்யாமலிருப்பதில், தே ஸங்க:-உனக்குஸம்பந்தர்மாஸ்து-வேண்டாம். ஜீவாத்மாவின் உரிமையை அல்லது ஓரளவில் அதன் ஸ்வரூபத்தைச் சொல்ல வந்த இந்தச் சுலோகத்தில் நான்கு விஷயங்கள் அடங்கி இருக்கின்றன. (1) ஜீவாத்மா கருமம் செய்வதற்கு மாத்திரம் அதிகாரம் உடையது. (2) எப்பொழுதும் பலன்களில் அதிகாரமற்றது (3) ஸ்வரூபத்தைப் பார்த்தால் கருமம் பலன் இரண்டிற்கும் காரணமாக அருகதை இல்லாதது (4) கருமம் செய்யாமல் இருக்கவும் தகாதது

இச்சுலோகத்திற்கு ராகவேந்திரரும் ராமாநுஜரும் விரிவுரை தந்துள்ளார்கள் அவற்றின் ஸாரத்தையும் இதனுடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

(ராக) ஜீவனுக்குக் கருமம் செய்வதில் அதிகாரம் உண்டென்றதைக் கொண்டு பலன் அடைவதிலும் அதிகாரம் உண்டென்று நினைக்கக் கூடாது. செய்யும் கருமத்திற்குப் பலன் வழங்குவது பகவானின் இஷ்டத்தைப் பொறுத்தே இருக்கிறது ஞானி பலத்தில் ஆசையில்லாதவனாய் மோக்ஷ தசையில் அதிக ஆனந்தம் உண்டாகும்பொருட்டுச் செய்ய வேண்டிய சத் கருமங்களை எந்த ஜீவனும் செய்யாது விடத்தகுந்தவனல்லன் ஜீவன் தான் பலனையடையச் சுதந்திரன் என்று எண்ணாமல் பகவானை எஜமான் என்றும் தன்னைத் தாஸன் என்றும் எண்ண வேண்டும் தாஸன் என்று தன்னை எண்ணிப் பகவானோடு ஐக்கிய பாவனையை அறவே விட்டு ஈசுவர ஆராதனை ரூபமாகவே ஜீவன் கருமங்களைச் செய்ய வேண்டும்.

(ரா) ஜீவாத்மா பலத்தில் ஆசையில்லாமலும் தன்னைக் கர்த்தா என்று எண்ணி அகங்கார அபிமானங்களுக்கு ஆளாகாமலும் ஈசுவராதீனமாகக் கருமத்தைச் செய்ய

வேண்டும். அவ்வாறு செய்தால் அக்கருமத்திற்கு வேதத்தில் கூறப்படும் பலனை அடையாமல் மோக்ஷத்தை அடையலாம். ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தைப் பார்த்தால் அதற்குப் பொருத்தமாக அசெியம் ஈசுவராதீனமாகக் கருமம் செய்ய வேண்டியவனுகிருன். அதனுல் ஜீவாத்மாவுக்குக் கருமத்தைச் செய்யாமல் விடுவதற்கும் அதிகாரமில்லை. பலனைத்தரும் சக்தியோ கருமத்திற்கு இல்லை. அதில் ஆசை வைப்பதோ ஜீவாத்மாவிற்குத் தகாது. அதற்காகக் கருமத்தைச் செய்யாது விடுவதும் கூடாது. என்ருல் எல்லோரும் கருமத்தைச் செய்துதான் ஆக வேண்டும். அவ்வாறு செய்யும் பொழுது அசெியம் கொள்ளவேண்டிய மனேபாவமே யோகம் என்று அடுத்தபடியாக சொல்லப்படுகிறது.

பேறு இழவில் ஒத்தமைத்துப்
பேணு நசை துறந்து தேறிவரும்
யோகத்துச் சேர்ந்து நீ—ஆறி
அமைந்து இத்தகைவில் ஆம்கரு
மம் ஏந்துகநீ யோகம்தான்
ஒத்தல் என உரைப்பர் ஓர்ந்து.

(இ-ள்) நீ—, பேறு இழவில்—(பல) ஸித்தியிலும் அஸித்தியிலும், ஒத்து அமைத்து—(மனதைச்) சமமாகச் செய்து. பேணுநசை துறந்து—பழகிய ஆசையை விட்டு. தேறிவரும் யோகத்துச் சேர்ந்து—தெளிவோடு வரும் யோக நிஷ்டையைப் பெற்று, இத்தகைவிலாம் கருமம்—இவ்விதமான கருமத்தை, நீ ஏந்துக—நீ மேற்கொள்வாயாக; யோகம் தான்—யோகம் என்பது, ஒத்தல் என—ஸமமாயிருத்தல் என்று, ஓர்ந்து உரைப்பர்—(பெரியோர்) அறிந்து சொல்லுவர்.

3 3
யோகஸ்த: குரு கர்மாணி
3 4
ஸங்கம் த்யக்த்வா தனஞ்ஜய
3 4 3 4
ஸித்த்ய ஸித்த்யோஸ் ஸமோ
4 3
பூத்வா ஸமத்வம் யோக உச்யதே.

இ-ள்) தநஞ்ஜய— அர்ஜுனு!' ஸங்கம் த்யக்த்வா—பற்றை விட்டு, ஸித்ய ஸித்யோ:—(பல) ஸித்தியிலும் அஸித்தியிலும், ஸமோ பூத்வா ஸமமாயிருந்து, யோகஸ்த:—யோக நிஷ்டனுய் கர்மாணிகுரு—கருமங்களைச் செய்; ஸமத்வம்-ஸமமாயிருப்பதே யோக: உச்யதே—யோகமாகச் சொல்லப்படுகிறது.

சில வார்த்தைகள் தம் ஓசையினுல் கேட்போருக்குப் பயத்தை உண்டுபண்ணும். ஸாமானியரால் எளிதில் புரிந்து கொள்ள முடியாத' மிகச் சிக்கலான பொருளை விவகரிக்கும் விஷயம். என்று ஓசையினுல் மருளவும் பண்ணும். ஆப்பரேஷன் என்னும் ஆங்கில வார்த்தை தனது ஓசையினுல் நோயாளியைத் திகில் அடையப்பண்ணி வந்ததாம் அதைக் கேட்ட மாத்திரத்திலே கூரிய கத்தி முள், கத்திரி, ரத்தப் முதலியவற்றை நோயாளி எதிரே தோற்றுவித்து, வீணன பயத்தால் மரணத்தை அதுவே உண்டாக்குகிறது' என்று ரண சிகிச்சைக்கு அப்பெயரையே மாற்றி விட வேண்டும் என்று ஒரு மனேதத்வ சாஸ்திரி சொன்னராம். அவ்வாறே யோகம்' என்பதும் சாமானியரால் விளக்கிக் கொள்ள முடியாததும் பயிலவே முடியாததுமான ஒரு பெரிய சாஸ்திரம். ஒன்றிரண்டு பிரசங்கங்களில் அதைத் தெரிந்து கொள்ளவே முடியாது' என்று எல்லோரும் நினைக்கிற ஒரு வார்த்தையாகவே கீதை தோன்றிய இந்நாட்டிலும் இருந்து வருகிறது.

ஆனுல் கீதையில் கண்ணன் யோகத்தை எல்லோரும் வெகு எளிதில் புரிந்து கொள்ளக்கூடியதாகவே சொல்லுகிருர். எல்லோரும் நிலையான நன்மையைப் பெற விரும்பினுல் பற்றுதற்கு உரிய ஸாதனம் யோகம் அன்றி வேறு இல்லை என்கிருர். ஸித்தியை அடையினும் அடையாவிடினும் ஸமமாய் (மனச் சலனமின்றி) இருப்பதே யோகம். என்று இதைவிட த்தெளிவாய்ச் சுருக்கமாய்க் கூறமுடியுமா? இதைக்கண்டு தெளிந்து வாழ்விலே பயின்ற பெரியோர் பலர் இந்நாட்டில் இருந்தனர் அவர்களே யோகிகள் என்று கொண்டாடப்படுகின்றனர். நம்முடனே வாழ்ந்து மறைந்த மஹாத்மாவின் பெருமைக்கும் காரணமாயிருந்ததும் இந்த யோகமே. இந்த யோகத்தை மஹாத்மா தான் பயின்று யோகியாக மாத்திரம் இருந்துவிடவில்லை தன்னை அண்டினவர்களும் பயிலவேண்டும் என்று பிரார்த்தனைக் கூட்டங்களில் இப்பகுதியை அடிக்கடி உபதேசிக்கவும் செய்தார்.

இச்சுலோகத்தில் வரும் 'ஸித்ய ஸித்யோ:' என்ற தொடருக்கு கீதார்த்த தீபிகையில் 'பலனுகிய ஞானஸித்தியை அடைந்தாலும், அடையாவிட்டாலும்' எனப் பொருள் செய்யபபட்டிருக்கிறது அது அறிவுடையோர் சிந்தனைக்குரியது.

'கருமத்தை யோகபாவனையோடு தான் செய்யவேண்டும்' என்ருலும் அதில்லாமலே பலனில் இச்சையோடு பெரும்பாலோர் கருமங்களைச் செய்கிருர்களே ஏன்? என்று அர்ஜுனன் ஆலோசித்தான் அப்பொழுது கண்ணன் சொலகிருர்.

தக்கமரும் புத்தியோகத்தில் தனஞ்
அக்கருமம் தூர அவரங் [சயனே
காண்— ஒக்கவரும் புத்திக்கே நிற்
கும் புகல்விரும்பு புல்லியர்காண்
அத்தித்தே செய்யும் அவர்.

(இ-ள்) தனஞ்சயனே!—அர்ஜுனு, தக்கமரும் புத்தியோகத்தில்—ஸமநிலை வாய்ந்த புத்தியோகத்தோடு வரும் கருமங்களைவிட, அக் கருமம்—அந்தக் காமிய கருமமானது, தூர அவரம் காண்—மிகவும் இழிவானதெனத் தெரிந்துகொள்; ஒக்கவரும் புத்திககே நிற்கும் புகல்—தகுதியாக வரும் யோகத்திலே நிலைக்கும் உபாயத்தை, விரும்பு—(அடைய) விரும்பு, அத்தித்தே செய்யும் அவர்—(காமிய பலனின்)ஆசை கொண்டு கருமம் செய்பவர். புல்லியர்காண்—(ஸம்ஸாரத்திற்காளாகி) இழிந்தவராவர் என்று அறி.

3
தூரேண ஹ்யவரம் கர்ம
3 3 4 3 4
புத்தி யோகாத் தனஞ்ஜய
3 3 4 2
புத்தௌ சரணமந்விச்ச
2
க்ருபணு: பலஹேதவ:

(இ-ள்) தநஞ்ஜய—அர்ஜுனு!, புத்தியோகாத்—ஸமத்வ புத்தியுடன் கூடிய கருமத்தைக் காட்டிலும், கர்ம—(காமிய) கர்மமானது, தூரேண ஹ்யவரம்—மிகவும் இழிவானது, அத:-ஆகையால். புத்தௌ—ஸமபுத்தியோடு கூடிய யோகத்தில், சரணமந்விச்ச—(புகல்) உபாயத்தை விரும்பு, பலஹேதவ:—பலத்துக்குக் காரணமானவர்கள், க்ருபணு: (ஸம்ஸாரிகளாகி) இழிந்தவராவார்.

ஸமத்வ புத்தியோடு செய்யப்படும் கருமம் துன்பத்திற்கிடமான பந்தத்தைப் போக்கி மோக்ஷத்தைத் தருகிறது. பலனில் இச்சைகொண்டு செய்யப்படும் காமிய கர்மமோ பந்தத்தை மேலும் உண்டாக்கி இழிவான ஸம்ஸார நிலையில் தள்ளித் துன்பத்தை மேலும் மேலும் தருகிறது. ஆகவே காமிய கருமம் பலர் செய்யினும் மிக இழிவானது. அர்ஜுனு! இவ்வுண்மையை உணர்ந்த நீ நிஷ்காமகருமயோகத்தையே அடை' என்பது உபதேசம்.

இச்சுலோகத்தில் வரும் (1, 'க்ருபணு:' என்ற சொல் பாடலில் புல்லியர்' என்று பொருள் கொள்ளப்பட்டது (2) 'புத்தௌ சரணமந்விச்ச' என்ற தொடர் பாட்டில் 'புத்திக்கே நிற்கும் புகல்விரும்பு' என்று கொள்ளப்பட்டது. இதுபற்றி உரையாசிரியர்கள் வெவ்வேருன அபிப்பிராயம் கொண்டுள்ளனர். அதுவும் அறிவுடையோர்தாமே சிந்திக்கவேண்டியது (1) க்ருபணு: சங்கரரும் ராமாநுஜரும் 'பிறப்பு இறப்பாகிற 'துக்கத்தை அடைவார்கள்' என்று பொருள் கூறினர் ராகவேந்திரர் 'ஈசுவர ஐக்கிய ஞானத்தை விரும்புவோர் அந்தகாரத்தில் செல்வார்கள்' என்ருர். (2) புத்தௌ சரணமந்விச்ச:—(சங்) பரமார்த்த ஞானத்தைப் புகலாக அடைவாயாக, (ராமா) 'காமிய கருமம் பந்தத்திற்குக் காரணம்; நிஷ்காம கருமம் மோக்ஷத்திற்குக் காரணம்' என்னும் அறிவை அடைவாய்.

பானுமதியின் முகம் நாணத்தினால் சிவந்தது. காதல் விவகாரங்களைப்பற்றிப் பேசினாலும் புத்தகங்களில் படித்தாலும் மனசுக்கு ரம்மியமாய், சுவாரஸ்யமாய் இருப்பது உண்மைதான். ஆயினும் தான் ஒருவரால் காதலிக்கப்படுவதும், தானே ஒருவரைக் காதலிப்பதும் இவ்வளவு சோதனை தரும் விஷயம் என்று அவள் கற்பனையிலும் எண்ணவில்லை. அப்பொழுது பேசும் பேச்சுக்களுக்கு ஏதாவது அர்த்தமுண்டா? அதில் பொருள்தான் இல்லையே, பின் இந்த நாணம்தான் எங்கிருந்து குதித்துக்கொண்டு வருகிறது அந்த நாணத்தினால் இவ்வளவு இன்பம் மனசில் பெருகி ஓடுவானேன்! அந்த இன்பத்தில் இவ்வளவு மயக்கம் தரும் போதை எங்கே கலந்திருக்கிறது? அப்பப்பா! அந்தப் பார்வை, அந்தப் பேச்சு, அந்தச் சேஷ்டை - இதெல்லாம்தான் காதலா? விழிகளை விழுங்கி விடுவதுபோல ஒரு பார்வையா? பேசவே திணறிக்கொண்டு ஒரு பேச்சா? மூச்சு முட்டும்படி ஒரு குறும்புத்தனமா?

'ஆர்வி'

மலரன்ன இதழ் இதழ்கள் இப்படி வென்று துடிக்கின்ற நெஞ்சாமே? களாமே! மலரின் யா சுறுசுறுகும்! பஞ்சு போ இப்படிப் பாறையாகவா கனக்கும்! கிள்ளையின் மென்மொழிகளாமே? கிள்ளைக்கு இப்படி வாய் எங்கேயாவது குழறித்திக்குமோ?

பானுமதிக்குக் கார் சவாரி செய்வது இந்த எண்ணங்களினால் சொர்க்கத்துக்குச் செல்வதுபோல இருந்தது. சிலுசிலுத்த காற்றிலே சிலும்பிக்கொள்கிறவள்மாதிரி விசுவத்தினருகில் மெல்ல நெருங்கி வந்து உட்கார்ந்துகொண்டாள். கையோடு கை லேசாக உராயவதற்காக எவ்வளவு திருப்பங்கள் வந்தாலும் தேவலைபோலிருந்தது. எவ்வளவு குளிராக இருந்தாலும் தேவலைபோலிருநதது. எத்தனை தூரம் வேண்டுமானாலும் போகலாமபோலிருந்தது.

அடர்ந்து மரங்கள் சூழ்ந்த ஒதுப்புறமான ஓர் இடத்தில் கார் வந்து நின்றது. விழிப்பு நிலையிலிருந்து தெளிந்தவளைப்போல அவள் விசுவத்தின் முகத்தைப் பார்த்தாள். அவன் முகத்தை மரக் கிளைகளின் நிழல் வெளிச்சம் விழாமல் மறைத்தது. 'ஏன் இங்கே நிறுத்தி விட்டீர்கள்?' என்றுகேட்க



விரும்பினுள் அவள். அவ்வளவு வார்த்தைகளை எப்படிப் பேசமுடியும் ?

சுருக்கமாக, "இறங்கவேணுமா?" என்ருள் மெதுவாக.

கார் வந்த வேகத்தினுலோ அல்லது குளிர் அதிகமாய் இருந்ததனுல்தாளுே என்னவோ அவன் நெஞ்சு படபடத்தது.

"வேண்டாமே...வண்டியிலேயே கொஞ்சம் உட்கார்ந்திருந்துவிட்டுப் போவோமே அதற்குள் வீட்டுக்குப்போய் என்ன செய்யப் போகிருேம்?" என்ருன் அவன் அவனுக்கு வீட்டில் வேலையில்லாமல் இருககலாம அவளுக்கு—? யோசனை செய்யாமல் அவன் இப்படிப் பன்மையாகவே பேசினுன். அவள் முகத்தை வேறுபுறம் திருப்பிக்கொண்டு, "குளிர் அதிகமாய் இல்லை ?" என்று கேட்டாள்

"ஆமாம்; இருக்கட்டுமே !"

"இந்த இடத்தில் வெளிச்சமே இல்லையே—"

"அதனுல் என்ன, இருக்கட்டுமே !"

"சரி ; இருக்கட்டும்"—பானுவுக்கு மேலே பேச்சு ஓடவில்லை. குளிருக்கு அடக்கமாகப் போட்டுக்கொண்டிருந்த கம்பளிச் சட்டைக்குமேலே தலைப்பை இழுத்துப் போர்த்துக்கொண்டு கைகளைக் கட்டியவாறு ஸீட்டில் சாய்ந்துகொண்டாள். மௌனத்தின் அமைதியிலே இரண்டு பெருமூச்சு அலைகள் சீறிவிட்டுச் சென்றன வண்டியின்பிடியில் கையை வைத்துக்கொண்டு பாதையின் ஏற்றச் சரிவைப் பார்த்துக்கொண்டிருந்தான் விசுவம். இந்தக் குளிரில் வாயையும் கெட்டியாக மூடிக்கொண்டு இப்படி உட்கார்ந்திருக்காவிட்டால் என்ன மோசமாகப் போய் விடுமாம்! இதுதான் பானுவுக்குப் புரியவில்லை. அவனுக்காவது புரிந்திருக்குமோ என்னமோ அதுவும் அவளுக்குத் தெரியவில்லை. திடீரென்று விசுவம், "பானு ! நான் என்னமோ இன்று இந்தஇரவு முழுவதும் இப்படியே உட்காரச் சொன்னாலும் சரிதான், உட்கார்ந்திருப்பேன்" என்ருன். "உட்காரச் சொன்



ணுல்தானே ?"

"ஏன், இதிலென்ன கஷ்டம் என்கிருய் நீ ?"

"கஷ்டமா? இப்பவே இந்தக் குளிரினுல் உங்களுக்குப் பேச முடியாமல் இறைக்கிறது ஓடிவந்தவன்மாதிரி. எனக்குச் சொல்லவே வேண்டியதில்லை. உங்கள் பிடிவாதத்துக்காக...''.

விசுவம் கற்பனை உலகில் இதுவரை சஞ்சரித்துக்கொண்டிருந்தான். பானுவின் வார்த்தைகள் அவனைச் சுய உணர்வுக்குக் கொண்டுவந்தன. அவள் சற்றும் எதிர்பாராத சமயத்தில் அவள் கைகளை எடுத்துத் தன் கைகளுக்குள் வைத்துக்கொண்டு, "இதில் கஷ்டமென்ன பானு, இதில் கஷ்டமென்ன?" என்று அர்த்தமில்லாமல் திருப்பித் திருப்பிக் கூறினுன்.



பானுவின் கைகள் விடுவிடுவென்று நடுங்கினதை உணர்ந்து, "உனக்குப் பயமாய் இருக்கிறதா, பானு?" என்று மெல்லிய குரலில் அருகில் வந்து கேட்டான்.

அவள் மெதுவாகத் தன் கைகளை அவன் பிடியிலிருந்து விடுவித்துக்கொண்டு, "சரி; நாம் போகலாம்—நேரமாகிறதே...போகவேண்டாமா?" என்ருள்.

திடீரென்று சாயங்காலத்திலிருந்தே இவ்விதம் தான் ஏதோ அசட்டுத்தனமாக ஒவ்வொரு காரியமாகச் செய்துவருவதாக அவனுக்குத் தோன்றியது. பதில் பேசாமல் வண்டியை ஓட்ட ஆரம்பித்தான். நிதானமாக அவன் இரண்டு நாட்களாக நடந்ததை யோசித்துக்கொண்டே போவதுபோல வண்டியின் வேகமும் நிதானமாகவே இருந்தது. வண்டி ஒரு திருப்பத்தில் சரட்டென்று திரும்பியது. பானுவின் சரீரமே அவன் மீது சாய்ந்து விழுந்தது. எதிரே, பக்கத்தில் ஒரு ரிக்ஷா—கொஞ்சம் தவறினுல் வண்டி மோதிவிடும் அப்புறம் வண்டியிலிருப்பவர்; 'அடே இதென்ன, சுவாமியா வண்டியில்-எங்கே ரிக்ஷாவில் கிளம்பிவிட்டான் இவன்? பெட்டி, படுக்கை, ஓ! ஊருக்குப்போகிறேன் என்ருனே? நல்லவேளை பணத்தைக் காலையிலேயே கொடுத்தது!'

பானுமதி சமாளித்துக்கொண்டு எழுந்துவிட்டாள்.-விசுவத்தினுல் நிலைமையைச் சமாளிக்க முடியவில்லை. அண்ணுவை நேருக்கு நேர் பார்த்துச் சுவாமிக்கு வழக்கமில்லை; தைரியமுமில்லை. முகத்தைத் திருப்பிக்கொண்டுவிட்டான். பிறகு கார் நேராகப் போவதில் தடையென்ன ?

ஒரு திருப்தி: பானுவுக்கு இவையொன்றும் தெரியாது, தம்பி என்பதும் தெரியாது; தான் சிறிது தடுமாறினதும் தெரியாது. இல்லாவிட்டால் கார் இவ்வளவு வேகமாக இப்போது எப்படிப்போகும்? ஐந்து நிமிஷங்கள் கூட ஆகவில்லை. பானுமதியின் வீட்டு வாசலில் கார் வந்து நின்றது.

விசுவம் கீழிறங்கி வந்து அவள் பக்கத்துக் கதவைத் திறந்துவிட்டான் வெல்வெட்டு மிதியடி அணிந்த மெல்லிய பாதத்தில் முன் பக்கத்து துணி சிக்கிக்கொண்டு லேசாகத் தடுத்ததால் கையைப் பிடித்து அவளைக் கீழே இறக்கிவிட்டான். சிறிது தயங்கினுன். அடுத்தபடியாக விடைபெற்றுக்கொண்டு போகவேண்டியதுதானு? "சரி; அப்புறம்?" என்று மெதுவாக வாய்திறந்து கேட்டான்.

பானு ஒரு புறம் திரும்பி நெளிந்தாள் "வாசலிலிருந்தபடியே போகப் போகிறீர்களா, என்ன? வீட்டுககுப் போய்த்தான் உங்களுக்கு ஒரு வேலையுமில்லையே?" என்ருள்.

அவளுடைய தோற்றத்திலே இருந்த ஒய்யாரத்தைக்கண்டு அவன் பிரமித்துப் போனுன் அவள் கேள்வியிலே இருந்த ஆதரவான பரிவு அவனை மெய்ம்மறக்கவே செய்துவிட்டது.

'இல்லை...வருகிறேன். ஆனுல் உனக்கு வேலையிருக்குமோ என்னமோ?" என்ருன் விசுவம். தன்னை வற்புறுத்தி இருக்கும்படி சொல்கிருளா

என்று பார்ப்பதே அவன் நோக்கம். மனசுக்கு அடியிலே கனியும் அக்கினியை அவள் தன் கண்களால் ஒரு தடவை ஊதிவிட்டாள். அணையும் பொறி கனன்றது. அது மனம் முழுவதையும் பற்றிச் சர்வ லோகத்துக்கும் பரவிவிடக்கூடியதாய் இருக்குமோ என்று விசுவத்தின் நெஞ்சு திடுக்கிட்டது. அவன் மனசிலே எரியும் நெருப்புக்குக் காற்றும் பொருளுமாயத் தான் இருப்பதைச் சற்றும் உணராத பானு கலகலவென்று விஷயமே இல்லாமல் சிரித்துக் கொண்டு, "இங்கே பாருங்கள்! உங்கள் மனைவி உங்களை எப்படிப் பெயரிட்டு அழைப்பாள், சொல்லுங்களேன் சற்று" என்றாள்.

மனைவி என்ற வார்த்தையைக் கேட்டதுமே விசுவத்தின் முகம் சுண்டிவிட்டது. அவன் பானுவின் விளையாட்டுக் கேள்விக்குப் பதில் அளிக்காமல் சோபாவில் போய் உட்கார்ந்துகொண்டான்.

பானுவோ தன் கேள்வியை விடவில்லை. "உங்களைத்தான் கேட்கிறேன்!" என்றாள் மீண்டும்.

"இப்படித்தான் அவள் என்னை அழைப்பது,"

"ஓ, பெயரைச் சொன்னால் உங்களுக்குக் கோபம் வந்து விடுமாக்கும்!"

அவன் பேச்சை முடிக்கக் கருதி, "ஆமாம்" என்றான்.

"நான் உங்களை அண்ணா என்று கூப்பிட்டால் என்ன? முறை ஒன்று சொல்லிக் கூப்பிடாமல் எப்படி ஒருவருடம் பேசுவது, பழகுவது? அண்ணா என்றே கூப்பிடட்டுமா?"

விசுவம் அதற்கு உடனே ஏதோ பதில் சொல்ல விரும்பினான். ஆனால் அந்தப் பதில் புதிதாகச் சிநேகம் கொண்ட ஒரு பெண்ணிடம் ஒரு புருஷன் சொல்லக்கூடியதல்ல என்று உடனேயே தோன்றியது மனைவியிடம் மனஸ்தாபம் கொண்டிருந்த போதிலும் அவன் கிருகஸ்தன். அவன் அவளிடம் பழகும் விதத்துக்கு அண்ணா என்ற முறை ஒருவேளை பொருந்தாததாக இருக்கலாம் அவன் கொண்டிருந்த பழக்கத்திற்கு இன்னும் அவளுக்கே ஒரு முடிவு ஏற்படவுமில்லை. இருவர் மனசும் அறிந்த அந்த உண்மை வாயைவிட்டுப் பரிமாறிக்கொள்ளும நிலையை யடையாவிடினும் அந்த அண்ணா முறை அபத்தமானது என்று அவன் குறிப்பிட விருமபினானே என்னவோ! பானு பேச்சை மாற்றிவிட்டாள்

"உங்கள் மனசில் நிம்மதியில்லை. எதற்காகவோ கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள். இதோ பாருங்கள்! நான் சொல்வது உண்மைதானே!

"அது முற்றிலும் உண்மைதான்."

"பார்த்தீர்களா, எனக்கு இதெல்லாம் கண்டு பிடிக்கத் தெரியும். இன்னொன்றும் சொல்லுகிறேன், அந்தக்கவலையைப் போக்கும் மருந்து என்னிடம் இருக்கிறது இருக்கிறது என்கிறீர்களா, இல்லை என்கிறீர்களா?

"இருக்கிறது என்கிறேன்."

"அப்படியானால் என்ன மருந்து சொல்லுங்கள்—"

"உன்னிடம் மருந்து இருப்பது என்னமோ உண்மை. ஆனால் நீ நினைத்துக்கொண்டிருப்பது மருந்தாக இருக்கமுடியாது என்பதை நிச்சயம் நான் சொல்லமுடியும்."

பானு இந்தச் சம்பாஷணையின் போக்கைக் கண்டு உத்ஸாகம் கொண்டாள்.

"ஆண்களுக்கே சந்தேகமாய் இருந்தால்கூட எல்லாமே நிச்சயம் என்றுதான் தோன்றும்."

"அதெப்படி உனக்குத் தெரியும்?"

"ஊஹூம். அந்தமாதிரிதான நான் கேள்விப்பட்டிருக்கிறேன். நான் நினைத்துக்கொண்டிருப்பதைத்தான் சொல்லுங்களேன் பார்க்கலாம்!"

விசுவம் சிறிது நேரம் அவள் முகத்தையே கூர்ந்து பார்த்தபடி மௌனமாய் இருந்தான். மனசுக்குள் ஒரு பூகமபமே ஏற்பட்டுக் கலக்கிக் கொண்டிருந்தது துணிந்து அந்த ஒரு வார்த்தையைச் சொல்லிவிட அதிக நேரம் ஆகாது. சாதாரணமாகச் சொல்ல ஒரு துணிவும் வேண்டியதில்லை. ஆனால் இந்தத் துணிவுக்கு போர்முனையில் தன்னை முன்னால் நிறுத்திக்கொள்ளும் போர்வீரனின் துணிவெல்லாம் எந்த மூலை?

இதுவரை அவள் மனசை வெகுதூரம் அறிந்து கொண்டிருப்பதாக அவன் கருதிவந்தான். வெறும் காகிதத்தை தஸ்தாவேஜுபோல எடுத்துப் போவதற்கு அவள் இணங்கினாள். தனியாகத் தன்னுடன் பக்கத்தில் அமர்ந்து காரில் சுத்திவரவும் இணங்கினாள் ஆசையுடன் கொடுத்த அல்வாத் துண்டை விழுங்கினாள். அன்புடன் தன் வீட்டுக்கு வரும்படி அழைப்பும் அனுப்பினாள். ஆனால்—

"நீ நினைத்துக்கொண்டிருப்பதைச் சொல்வேனோ, மாட்டேனோ! ஆனால் அந்த மருந்தைச் சொல்லிவிட்டு நான் உடனே போய்விடுவேன். சம்மதந் தானா?"

"சரி."

"பானு—இதெல்லாம் என்ன விளையாட்டு!...... எனக்கு நேரமாகிவிட்டது நாம் பிறகு இதைப்பற்றிப் பேசிக்கொள்வோமே" என்று கூறிக்கொண்டே அவன் எழுந்தான்.

பானு இதை எதிர்பார்க்கவில்லை. வேகமாக அவன் அருகில் வந்து கைகளைப் பற்றிக்கொண்டு, "முடியாது; சொல்லிவிட்டுத்தான் போகவேண்டும். இல்லாவிட்டால் ஒன்றும் சரிப்படாது..." என்றாள் பிடிவாதம் செய்யும் குழந்தையைப்போல.

தன்னுடைய உறுதிவாய்ந்த கைகளைப் பற்றிக் கொண்டிருக்கும் தளிர்க் கரங்களின் பேதமையைக் கண்டு அவனுக்குச் சிரிப்புத்தான் வந்தது. "இதென்ன பிடிவாதம் பானு, அதைச் சொல்ல இது சமயம் அல்ல. சொன்னால் நீ இல்லை என்று ஒரேயடியாகச் சாதிப்பாய்" என்று கூறினான்.

"அதெல்லாம் மாட்டேன். சொல்லிவிட்டுப் போய்விடுங்கள். வேண்டாம் என்று சொல்லவில்லை."

அவள் கண்களை நோக்கித் தன் பார்வை செல்லச் செல்ல அவள் கன்னங்களில் ஒரு செவ்வரி தோன்று வதை அவன் கண்டான். மது அருந்திய உதடுகள் துடிப்பதுபோல அவள் அதரங்கள் துடித்தன. கைப்பிடி நழுவிவிட்டது. கண்மூடித் திறக்கும் நேரத்துக்குள் அவன் குனிந்து அவள் முகத்தை ஆவேசத்துடன் நிமிர்த்தி, "சொல்லட்டுமா? உம்..." என்ருன். அவள் பதில் சொல்லவே அசக்தையா யிருந்தாள்.

சற்றுப் பொறுத்து அவன் காரில் ஏறி உட்கார்ந்த தும் அவள் "இதோ பாருங்கள்-முன்பு எழுதியபடி காலையில் நீங்கள் வரவேண்டாம்" என்ருள் தன் முகத்தைத் துடைத்துக்கொண்டே.

10

அடுத்த நாள் காலையில் விசுவம் அவள் கூறியதற் கிணங்க அங்கு சென்ருனே என்னவோ, சரி யான நேரத்தில் ஆபீஸில் காணப்பட்டான். வழக் கம்போல வேலைகள் யாவும் ஒழுங்காக, ஜரூராக நடந்துவந்தன. இரண்டு மூன்று நாட்களாக அமைதியின்மையால் வருந்திய அவன், வேலையில் ஒரேயடியாக ஆழ்ந்துவிட்டான். எப்போதாவது ஒரொரு சமயம் பானுவின் சிவந்த முகமும், துடிக் கும் உதடுகளும் "காலையில் நீங்கள் வரவேண்டாம்' என்ற ஆற்ருமைச் சொற்களும் அவன் நினைவுக்கு வரும். அந்தமாதிரிச் சந்தர்ப்பங்களிலெல்லாம் மாடியில் படுக்கைக்கு எதிர்புறத்தில் தொங்கும் குங் குமம் தீற்றிய சுசீலாவின் புகைப்படம் அவன் மனக் கண்முன் தோன்றத் தவறுவதில்லை——

ஏதோ ஓர் உணர்ச்சி. பானுவிடமும், சுசீலாவிட மும் அவன் தவறுதலாக—முறைதவறிக்கூட நடந்துகொண்டு விட்டதாகத் தோன்றி அவனை உள்ளூற வருத்திக்கொண்டேயிருந்தது. கவலையோ, மனச்சாட்சியோ தீவிரமாகத் தாக்குவதைப் பொருட்படுத்தும் சுபாவமில்லை அவனுக்கு. அந்த இயற்கையான சுபாவத்தினுல் அவன் யாவையும் மறந்து தன் வேலையில் சுலபமாக ஈடுபட்டு விட் டான்.

சாதாரணமாக ஒரே மாதிரியாக நடைபெற்று வந்த அவன் வாழ்க்கையில் இந்த இரண்டு, மூன்று வாரங்களுக்குள் பலவித மாறுதல்கள் ஏற்பட்டு விட்டன. இந்த மாறுதல்கள் எப்படி முடியும, எங்கேபோய் முடியும் என்ற நிச்சயமில்லாமல் அவ னைச் சதா கலக்கிககொண்டேயிருந்தன. அன்று இரவு பானுவைப் பிரிந்து வந்ததிலிருந்து அவன் கலக்கம் ஒரு முடிவே இல்லாமல் அவனைப் பற்றிக் கொண்டது. ஆயினும் அதன் பிறகுதான் அவன் தன் வேலைகளில் வெகு மும்முரமாக ஈடுபட்டதெல் லாம்.. மனச்சாட்சி இல்லாதவனென்றும் கொடூர சித்தம் கொண்டவனென்றும் தன்னைத்தானே அவன் நிந்தித்துக்கொண்டான். நாட்கள் செல்லச் செல்ல, ஏதோ ஒரு குற்றம் பெரிதாக வளர்ந்து வரு வது போலவும் அந்தக் குற்றத்தைத் தவிர்க்க எந்த விதப் பிரயாசையும் தான் எடுத்துக்கொள்ளாததால் அது தீவிரமாகப் போய்க்கொண்டிருப்பது போலவும் அவனுக்குத் தோன்றிவந்தது. அதற்குப் பதிலாக முழு மூச்சுடன் ஆபீஸ் வேலைகளில் ஈடுபட்டதால் பல நாட்களாக முடியாமல் இருந்த வேலைகளும் திட் டங்களும் உருவாகி முடிந்து வந்தன. இந்த ஆறு தலில் அவன் தன் மனசைத் திருப்தி செய்துகொண்டு விட முயன்ருன் ஒரு வாரம் சென்றும் அந்த முயற்சி யில் வெற்றி தோல்வி தெரியவில்லை.

திடீரென்று ஒருநாள் காலையில் தொழிற்சாலையி லிருந்து அவனுக்கு அழைப்பு வந்தது. தொழிற் சாலை மேஸ்திரிக்கும் இன்ஸ்பெக்டருக்கும் ஏற்பட்ட அபிப்பிராய பேதத்தினுல் காலையில் வேலை தொடங் காமல் தொழிலாளர்கள் நின்று விட்டனர். இன்ஸ் பெகடருக்கு உதைப்பு. உடனேயே இதில் தலை யிட்டு வேண்டியதைச் செய்யும்படி விசுவத்துக்கு ஆளனுப்பிக் கேட்டுக்கொண்டார். அவரிடம் விசுவத்துக்கு நல்ல அபிப்பிராயம் உண்டு ஆயி னும் கொஞ்சம் முன்கோபக்காரர் அவர் என்று அவனுக்கு ஒரு நினைப்பு இருந்து வந்தது. வேலை யில் கண்டிப்பாக இருந்தால்மட்டும் போதாது; கொஞ்சம் கருணையுடன் நடந்துகொள்ளவேண்டும் என்ற கொள்கையுடையவன் அவன். செய்தி காதில் விழுந்ததும் அவன் கீழே இறங்கிவந்து சமையலறைப் பக்கம் வந்தான். சமையல் ஆகியிருந் தால் சாப்பிட்டுவிட்டே போய்விடலாம் என்று நினைத்தான். அங்கே அவனுடைய அத்தை கண் களை மூடிக்கொண்டு புகையும் அடுப்பை ஊதிக் கொண்டிருந்தாள்.

"நீ என்ன செய்கிருய் அடுப்படியில் உட்கார்ந்து கொண்டு—சமையல்காரி எங்கே போய்விட்டாள், உன்னை இந்த வேலையைச் செய்யும்படி விட்டு விட்டு?" என்ருன் விசுவம் கொஞ்சம் கடுமையாக. சமையலறையில் சமையல் தயாரான அறிகுறியை யே காணேும்.

"சமையல்காரி போய்விட்டாள். அவள் பெண் பிரசவத்துக்கு............"

"இதை ஏன் என்னிடம் முன்னுடியே சொல்ல வில்லை? வேறு ஒருத்தியை நியமித்திருப்பேனே—"

"இன்றைக்குத்தான் எனக்கே தெரியும். ஒருநாள் இல்லாவிட்டால் ஒருநாள் அவள் இப்படி எதை யாவது சாக்கிட்டுக்கொண்டு போய்விடுவாள் என்று எனககு ஒரு வாரத்துக்கு முன்பே தெரியும்......"

விசுவத்துக்குச் சுருக்கென்றது. ஒரு வாரம் என் பது எதிலிருந்து என்பதை அவன் உடனே ஊகித் துககொண்டுவிட்டான். எனவே அத்தையை மேலே பேச விடாமல், "நீயும் கிளமபப்போகிருயா?" என்ருன்.

அத்தையின் கண்களில் சற்றைக்கெல்லாம் கண் ணீரே பெருக்கெடுத்துவிட்டது. நிச்சயம் அது புகைச்சலினுல் அல்ல என்பது அவனுக்குப் புரிந் தது ஆயினும் அவன் தன் வெறுப்பைக் காட்டிக் கொள்ள, "இந்த வீட்டிலிருந்து அஷ்ட லட்சுமியும் போனுலும் சரிதான் ஒரு வேலையும் நிற்காது இங்கே, புரிந்ததா? உன் மாட்டுப்பெண் இல்லாவிட்டால்

உலகமே அஸ்தமித்துப்போய்விடும் என்று எண்ணிக்கொள்ளாதே! இன்றைக்குச் சாயங்காலமே வேறு ஒரு சமையல்காரி வருவாள். அவள் வந்து இப்படிக் கண்களைக் கசக்கிக்கொண்டு உட்கார்ந்திருக்கமாட்டாள் சொல்லாமல் கொள்ளாமல் போகமாட்டாள். ஆனால் பெண்ணுக்குப் பிரசவம் பார்க்கப்போனவள் சம்பளம் கூட வாங்கிக் கொள்ளவில்லையே...அவள் எப்படிப்போனாள் இங்கிருந்து?'' என்றான் விசுவம்.

அந்தக் கிழ அத்தை பதில் ஒன்றும் பேசாமல் தன் வேலையில் முனைந்தாள்.

"நான் மத்தியானம் சாப்பிட வரமாட்டேன்" என்றான் விசுவம் வெளியில் புறப்பட்டுக்கொண்டே. அவன் வார்த்தைகள் எங்கோ கிணற்றுக்குள்ளிருந்து பேசுவதுபோல அத்தையின் காதில் விழுந்தன.

தொழிற்சாலைக்குச் செல்லுகையில் தான் மட்டும் ஒரு கட்சியென்றும் மற்றவர்கள் அனைவரும் ஒரு கட்சியென்றும் அவனுக்கு ஓர் எண்ணம் உதித்தது. என்றைத் தினம் பானுவை அவன் காண நேர்ந்ததோ அன்று முதல் அவனைத் துரதிருஷ்டம் பிடித்துக்கொண்டதுபோல உணர்ந்தான். எந்த நிமிஷத்திலும் அவன் அந்தப் பந்தத்தை அறுத்துக்கொண்டு விட முடியும். பானுவின் நட்பு அவ்வளவு அவசியமானதென்று சொல்வதற்கு இல்லை. யோசித்துப் பார்த்தால் அவனுக்கும் பானுவுக்கும் இருந்த தொடர்பிலும் ஒரு சௌஜன்ய நிலை ஏற்படவில்லை. ஆனால் அதன் விளைவோ தன்னைத்தானே வெறுத்துக்கொள்ளும் நிலைமையில் வளர்ந்துவருகிறது. ஆகவே எப்படியும் அமைதியைக் குலைக்கும் இந்தப் புதுத் தொடர்பிலிருந்து தான் விடுபடவேண்டும் என்ற தீர்மானத்துடன் அவன் தொழிற்சாலைக்கு வந்து சேர்ந்தான்.

இன்ஸ்பெக்டரின் பரிகாசமான முகத்தைப் பார்த்ததும் இவர்களையெல்லாம்விட தான் எவ்வளவோ மேல் என்று மனசில் பட்டது. மேஸ்திரி கொஞ்சம் வயதானவன்; அநுபவஸ்தன். தன்னைப்போன்ற பல அதிகாரிகளை அவன் ஆயுட்காலத்தில் பார்த்தவன். அவனுடைய பார்வையும் நடவடிக்கையும் தன் உத்தியோகத்திற்குத் தகுந்த முறையில் மரியாதையானவை என்று சொல்லமுடியாவிட்டாலும் அவன் என்றும் நிதானம் தவறுவதில்லை. உத்திரவுக்குக் கீழ்ப்படியாமலும் இருந்ததில்லை. என்னவோ மேலாகப் பார்க்கும்போது அவன் வணங்கா முடியாக இருப்பானோ என்று ஒரு தப்பபிப்பிராயம் விசுவத்துக்கு இருந்தது. அவனிடம் விசுவம் நெருங்கிப் பேச ஆரம்பித்ததும்தான் அந்த அபிப்பிராயம் தவறானது என்று தெரிந்தது.

சச்சரவுக்குக் காரணமான விஷயமோ மிகவும் அற்பமானது. தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளி ஒருவன் சாப்பாடு எடுத்துவரும் வேலைக்காரிக்குப் பணம் கொடுக்காமல் கெடு சொல்லி ஏமாற்றிவந்தான். அவள் வாசலில் அவனை மறித்துக்கொண்டு கூச்சல் போடலானாள். இன்ஸ்பெக்டர் இதைக் கண்டு பணத்தைக் கொடுத்துவிட்டு உள்ளே வேலை செய்யும்படி சொல்லிவிட்டார். அந்தத் தொழிலாளி வராவிட்டால் அவன் வேலை செய்கிற 'பிளான்ட்'டை நிறுத்திவிடவேண்டியதுதான். வேலை முடியவேண்டிய அவசரத்தைச் சிறிதும் உணராமல் இன்ஸ்பெகடர் தன்னிடமும் கலந்து கொள்ளாமல் ஒருவனுடைய சொந்த விஷயத்தில் தலையிட்டது பிசகு என்றும் உடனடியாக அவனைத்தொழிற்சாலைக்குள் அனுப்பவேண்டும் என்றும் மேஸ்திரி கூறினான்....

நியாயம் யார் பங்கில் வேண்டுமானாலும் இருக்கட்டும்; விஷயம் பெரிதாக வளருவதை யாரும் விரும்பவில்லை. விசுவம் நடந்ததை விசாரிக்கும்போதே அவர்களுக்குள் ஒரு சமரசம் ஏற்பட்டுவிட்டதைக் கண்டான். தொழிலாளர் தம் தம் பகுதியில் நுழைந்து வேலையைத் துவக்கினர்.

தொழிற்சாலையிலிருந்து காரியாலயத்துக்குத் திரும்பும்போது விசுவத்தின் மனம் வேதனையால் தவித்தது. தனி வாழ்க்கையிலும் ஒரு மனிதன் நியாய விரோதமான காரியத்தைச் செய்வது எத்தகைய கேவலம்! மனைவியிடம் வீம்புப் பிடித்துக்கொண்டு வேறொருத்தியின் நட்பைப் பெறும் செயல் கேவலமானது மட்டுமல்ல; துரோகமானதுங்கூட. தன் மனம் இருக்கும் நிலையில் தன்னையோ சுற்றுப்புறத்தையோ அவன் அலட்சியம் செய்துவிடும் நிலை ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று அவன் நடுங்கினான். ஏனெனில் அவன் மனம் தன்னைத் தானே ஏமாற்றிக்கொண்டு வந்தது.

பானுவின் சகோதரன் சிறுபிராயத்தில் தன்னோடு படித்தவன். ஒரே ஊர். இங்கே தொழிற்சாலையிலும் அவன் மின்சாரப் பகுதியில் உதவி எஞ்சினீயராக வேலைசெய்து வந்தான். திடீரென்று ஒருநாள் அவனுடைய முடிவைக் கேட்போம் என்று விசுவம் கனவிலும் நினைக்கவில்லை. அவனையே ஆதரவாகக் கொண்டு இருந்த தாயையும் விவாகமாகாத சகோதரியையும் விட்டு விட்டு அவன் மூன்றுநாள் ஜுரத்தில் இறந்துபோய் விட்டான். விசுவம் மேலே ஆகவேண்டியவற்றைக் கவனிப்பது தன் கடமை என்று எண்ணினான். வேண்டிய வசதிகளைச் செய்து தொழிற்சாலையிலிருந்து கிடைக்கவேண்டிய பணத்தை உடனே சேர்ப்பிக்கச் செய்ததோடு அவன் நின்றிருக்கலாம். நின்றிருந்தால் யாவும் எப்பொழுதும்போல் இருந்திருக்கும். பானுவின் சௌந்தரியத்தில் தன் மனம் சபலம்கொண்டு விடவில்லை என்று சொல்லிக்கொண்டே அவள் வீட்டுக்கு அடிக்கடி சென்று அவள் குடும்ப நிலையைக் கவனிப்பதில் அக்கறை காட்டினான். அந்த அக்கறையில் எவ்வளவு சுயநலம் இருந்தது என்பதை நம்பவே அவன் மறுத்தான். பார்க்கப்போனால் அது சுயநலமே அல்ல போலவும் தோன்றியது பானுவின் திருப்திக்காக, அவளுடைய விருப்பத்துக்காக அவள் கொண்டுள்ள அன்புக்காகச் செய்யும் தியாகம் போலவே அவன் எண்ணிக்கொண்டான் தனக்கு மனைவி ஒருத்தி இருப்பதே அவனுக்குத் திடீரென்று மறந்துபோய்

விட்டது அப்படி ஒருநாளும் அவன் சுசீலாவை மறந்துவிடவில்லை என்று தன் மனசையே ஏமாற்றிக்கொள்வதற்காக அவன் பானுவிடமிருந்து வீட்டுக்கு வந்ததுமே மனைவியிடம் பன்மடங்கு அன்பு பெருக உரையாடுவான். அவனுடைய அன்பில் ஒரு புது மோகத்தின் வேகம் இருப்பதைச் சுசீலா உணர்ந்து நாணமுற்றாள்

"பைத்தியமே...நமக்கென்ன குழந்தையா, குட்டியா? நாம் இரண்டு பேரும்தான் குழந்தைகள்" என்று கூறிக் குலாவினான். தன்னவ்வளவு உத்ஸாகத்துடன் அவளால் தன்னிடம் அன்பு காட்ட முடியவில்லை என்று ஒவ்வொரு சமயம் குற்றமும் சாட்டினான் அதனால் அவர்களுக்குள் ஒரு பொருத்தமின்மை இருப்பதுபோலவும் அதை மறைக்கவே பானுவிடம் பேசிவிட்டு வருவதாகவும் தனக்குள் சமாதானம் கூறிக்கொண்டு வந்தான். ஆனால் எந்த விதச் சமாதானம் சொன்னாலும் நம்ப முடியாத ஒரு நிலையில்தான் அகப்பட்டுக்கொள்வோம் என்று அவன் எண்ணியதில்லை. பானு சிறு குழந்தையைப்போலப் பழகினாள். பேசினாள், விளையாடினாள் கள்ளங் கபடற்ற பழக்கம் போல்வும், பேச்சு போலவும் விளையாட்டுப்போலவும் அவனுக்கு யாவும் தோன்றின. இருவர் மனசிலும் ஆட்சி புரிந்த அந்த மோகத்தை வித்தியாசமற்ற ஒரு வெகுளித்தன்மை என்று பெயர் சூட்டிக் கொண்டாடினார்கள். கடைசியாக ஒரு விருந்தின்போது இவர்கள் தனியாகப் பேசி விளையாடுவதைக்கண்டு அதை வெகுளித்தனம் என்று ஒப்புக்கொள்ள சுசீலாவின் மனம் மறுத்துவிட்டது விசுவத்துக்கு அப்போது சுசீலாவின இந்தக் குறுகிய மனோபாவம் சிறிதும் பிடிக்கவில்லை. ஆக்ரோஷத்துடன் அவன் வெகுண்டெழுந்தான். தங்களுடைய யதார்த்தமான பழக்கத்தை ஒப்புக்கொள்ளாத உலகத்தையே எதிர்க்கத் தயாராகிவிட்டான் அவன் தன்னுடைய கோபம் எவ்வளவு நேர்மையற்றது, எவ்வளவு பலஹீனத்திலிருந்து எழுந்தது அது என்பது அன்று இரவுதான் அவனுக்குத் தெரிந்தது.

'காலையில் நீங்கள் வரவேண்டாம்' என்று பானு ஏன் தன் முகத்தைத் துடைத்துக்கொண்டே சொல்ல வேண்டும்? என்ன நடந்துவிட்டது அவர்கள் இருவர் மனசுக்கும் தெரியாமல். அவள் கோபித்துக்கொண்டு ஒரு நாளும் அப்படிச் சொல்லவில்லை அந்த வார்த்தைகளில் கோபமும் இல்லை. பின் ஏன் அவன் பானுவைப் பார்க்கச் செல்லவில்லை? வேலை அதிகமா? வெறுப்பா? இரண்டும் இல்லை தன் செய்கையை நினைத்துக்கொள்ளும் போது ஏற்படும் வெட்கமாக இருக்கலாம். விசுவம் தன் மனசில் தோன்றுகிற இந்த எண்ணத்தைக் கண்டு சீற்றமடைந்தான். தன் மனசே எதை எண்ணினாலும் அவனுக்கு வேலை அதிகமாய் இருப்பதுதான் அவளைப் பார்க்கப் போகாததற்குக் காரணம் எனபது நிச்சயம் என்று பட்டது.........

அந்தத் தீர்மானத்துடன் இருந்தவனுக்குத் தொழிற்சாலை சம்பவத்தினால் ஞானோதயம் உண்டான ஒரு கணத்தில் தன் தவறு மிகப் பெரிதாகத் தோன்றியது—அந்த எண்ணம தோன்றியதுமே அவன் நடுக்கம் சிறிதும் குறையவில்லை. காரியாலயத்தில் அவனுக்காக ஒரு கடிதம் காத்திருந்தது.

"லீவு விட்டிருந்தால் சுவாமியை இங்கே ஒரு மாசம் இருக்குமபடி அனுப்பு" என்று அவன் தந்தை எழுதியிருந்தார்.

'அப்படியானால் சுவாமி ஊருக்குப் போகவில்லையா? ஊருக்குப் போகாமல் வேறு எங்கே போய் விட்டான்?' என்று விசுவத்துக்கு மலைப்பாய் இருந்தது கடைசியில் ஒருகால் அவன் சென்னையில் இறங்கியிருக்கலாம் என்ற ஞாபகம் வந்தது. 'ரொம்ப நல்லதாய்ப்போயிற்று - மெதுவாகப் போய்க்கொள்ளட்டும் அங்கே!' என்று எண்ணிக் கொண்டு தன் வேலையில் நிம்மதியுடன் ஈடுபடலானான்.



ராமய்யங்கார்:—என்னப்பா! இனிமே குழாலே தண்ணி குறைச்சலாத்தான் வரும். பால் கொஞ்சம் 'திக்'கா இருக்கும்னு நினைக்கிறேன்!

பால்காரர்:—இனிமே அரைப்படிதான் ஊத்த முடியும். இன்னொரு அரைப்படிக்கு வேறே எங்கே யாவது அரேஞ்சு' பண்ணிடுங்க!

(தொடரும்)

9

அன்புள்ள கீதாவுக்கு !

என்னுடைய தீர்க்க தரிசனத்தைப்பற்றி யோசிக்கும்போது எனக்கே சில சமயங்களில் ஆச்சரியம் தாங்கமுடிகிறதில்லை. அன்று பெரிய அத்திம்பேர் சொன்னமாதிரி நான் எங்காவது துப்பறியும் இலாகாவில் சேர்ந்திருந்தால் எனக்குப் பிரமாத புகழும் பிரக்யாதியும் ஏற்படுவதுடன் அந்த இலாகாவுக்கே பெரிய கௌரவமும் கிடைத்திருக்கும் என்பது இப்படிப்பட்ட சமயங்களில்தான் தெரிகிறது.

அப்பொழுது எனக்கு ரொம்ப சின்ன வயசு. பெரிய அத்திம்பேர் தலை தீபாவளிக்கு வந்திருக்கிறார். கலியாண தினத்தன்றே, ரொம்ப நாள் பழகிய தம்பதிகள் மாதிரி தோளில் கையைப் போட்டுக் கொண்டு மெத்தைப் படிகளில் தம் தம் என்று ஏறிச் செல்வதும், எதையாவது நாலு வார்த்தைகள் பொரித்துக் கொட்டிவிட்டுக் கட்டிடமே அதிர்ந்து விழுகிற மாதிரி கலகலவென்று சிரிப்பதும், மாடி அறையில் பேசிக் கொண்டிருக்கும் தம்பதிகளை ஔபாஸனத்துக்குப் புரோகிதர் சென்று அழைத்தால் ஐந்து நிமிஷம் கழித்து வாருங்கள் என்று பதில் சொல்லி அனுப்புவதும் மாலையில் ஆசீர்வாதத்துக்கு கலியாணப்பெண்ணையும் பிள்ளையையும் காணோமே என்று தேடிக்கொண்டிருக்கையில், பத்து நிமிஷத்துக்குமுன்புதான் காரில் வெளியே போனார்கள் (கத்தரித்து விடப்பட்ட சுருள் மயிர்கள் காற்றில் அழகாகப் பறந்துகொண்டிருக்க, மனைவி மோட்டாரை ஓட்டிச் செல்வாள். கணவன் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு முத்து உதிர்கிறமாதிரி மனைவி பேசும் பேச்சுக்களைக் கேட்டு 'ஹி ஹி' என்று முப்பத்திரண்டு பற்களும் தெரியும்படி சிரிப்பான்) என்று பதில் கிடைப்பதுமான இந்தக் காலமல்ல அது.

மடம், நாணம், அச்சம், பயிர்ப்பு என்று பெண்களுக்குள்ள லட்சணங்கள் பற்றிப் பழம் புத்தகங்களில் சொல்லியிருக்கிறார்களே, அதெல்லாம் கொஞ்சத்துக்குக் கொஞ்சம் இருக்கிற மாதிரி நாலு பேருக்காகவாவது 'நடித்த' காலம் அது. அத்திம்பேர் மாடி அறையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். வரும்போது கூடவே எடுத்துக்கொண்டு வந்திருந்த இங்கிலீஷ் நாவல் ஒன்றை வைத்துக்கொண்டு படித்துக் கொண்டிருந்தார்—நாவலைப் படிக்கவில்லை. அக்காவைப்பற்றித்தான் படித்துக்கொண்டிருந்தார். இதென்ன அப்படிச் சொல்கிறாயே என்று கேட்கிறாயா? உங்கள் அகத்துக்காரரை வேண்டுமானால்கேட்டுப் பாரேன். அப்படிப் பட்ட சமயங்களில் எந்த புத்தகத்தையோ, பத்திரிகையையோ எதை எடுத்துப் படித்தாலும் அதிலுள்ள ஒவ்வொரு எழுத்தும், வாக்கியமும் தங்கள் மனைவிகளைப் பற்றிய சித்திரமாகவேதான் காட்சியளிக்குமாம். எங்களவருக்கு அப்படித்தான் இருந்ததாம் அம்மா!

'கட்டுப்பெட்டிகள். யார் அப்படியாவது கைக்குப் பாரமாக ஒரு புத்தகத்தை வைத்துக் கொண்டு கொட்டாவி விட்டுக் கொண்டிருக்கச் சொன்னார்கள்! யாராவது பிறத்தியாரா? அவனாயிற்று. அவன் மனைவியாயிற்று. தாராளமாகக்கூட உட்கார வைத்துக்கொண்டு பேசுகிறதுதானே! தொடை நடுங்கிகள்! அசடுகள்' என்றுதான் இந்தக் காலத்துப் பசங்கள் அவர்களைப் பற்றிப் பரிகாசம் செய்யுங்கள். காட்டி மறைப்பதில் உள்ள ஆனந்தம் வேறெதிலும் கிடையாதென்று நாம் சொன்னால் ஒத்துக் கொள்ளுங்களா என்ன? உம்! அது ஒருகாலம்!

சிறிசுகளுடைய மனோபாவம் அம்மாவுக்கும் தெரியுமோலியோ! மத்தியானம் அத்திம்பேருக்கு ஒரு தட்டில் பட்சணத்தையும், காபியையும் அக்காவின் கையில் கொடுத்து மாடியறைக்கு அனுப்பினாள் அம்மா. அக்காவுக்கு அத்திம்பேரிடம் ஆசை எப்படி இருந்ததோ எனக்குத் தெரியாது. அத்திம்பேர் என்ற ரீதியில் அவரிடம் எனக்கிருந்த ஆசையைச் சொல்லி முடியாது 'அத்திம்பேர்! அத்திம்பேர்!' என்று ஒரு நிமிஷங்கூட அவரை விட்டுப் பிரிந்திருக்க மாட்டேன் தொண தொணவென்று ஏதாவது கேள்விகள் கேட்டுக்கொண்டு நச்சரித்து அவர் பிராணனை உண்டு இல்லை என்று செய்துவிடுவேன். காப்பியை நான்தான் அத்திம்பேருக்குக் கொண்டு கொடுப்பேன் என்று பிடிவாதம் பிடித்தேன். கடைசியில் அம்மா என்னைச் சமாதானம் செய்து, கீழேயே இருக்கச் செய்து அக்கா கையில் கொடுத்தனுப்பினாள். அக்கா மாடிக்குப் போன சிறிது நேரத்துக்கெல்லாம் நானும் அங்கே போய்ச் சேர்ந்தேன். அக்கா தட்டை மேஜைமேல் வைத்துவிட்டு வாசற்படிப் பக்கம்

வந்து தயங்கித் தயங்கி புடவைத் தலைப்பைத் திரித்துக்கொண்டு நின்றுகொண்டிருந்தாள். 'பேய் பிசாசு இல்லை. வரலாம வா' என்று அத்திம்பேர் எழுந்து வந்து அக்காவின் தோளில் கையைக் கொடுத்து தன்னுடைய இடத்துக்கு அழைத்துக் கொண்டு போகிறார். அந்த சமயத்தில்தான் திடுதிப்பென்று நான் அங்கு போய்ச் சேர்ந்தேன்.

"......தட்டில் காப்பி டிபன் எடுத்துக்கொண்டு......"

உடனே, அக்கா, ஏதோ தகாத காரியம் நடந்துவிட்டமாதிரி குடு குடு வென்று இடத்தை விட்டு எழுந்து ஓடி வந்தாள்.

'யார்? ரமாவா! பரவாயில்லையே! நான் கூப்பிட வேண்டுமென்றிருந்தேன். நல்ல வேளை. நீயே வந்து சேர்ந்துவிட்டாய். இந்தா இந்த எட்டணாவை எடுத்துக்கொண்டு, பக்கத்துக் கடைக்குப் போய், கால் பவுண்டு பிஸ்கட்டும் சாக்லேட்டும் வாங்கிக் கொண்டு வா' என்றார்.

தெரியும், தெரியும், எட்டணாவை செலவழிப்பதுடன் என் காலையும் எதற்காக அத்திம்பேர், ஜோதா அடிக்கிறீர்கள்! இதோ நான் கீழே போய்விடுகிறேன்' என்று குடு குடு வென்று கீழே இறங்கிப் போய் விட்டேன்.

ராத்திரி சாப்பிட்டுக்கொண்டிருக்கும் போது 'ரமா பெரியவளானால் அவளுக்கு எங்காவதுஒரு லீ ஐ டி. உத்யோகம் பார்த்துக் கொடுத்தால் ரொம்ப நன்றாக இருக்கும்' என்றார் அத்திம்பேர்.

இதெல்லாம் எதற்காகச் சொல்ல வந்தேனென்றால் சின்ன வயசிலிருந்தே எனக்கு எதையும் முன் கூட்டித் தெரிந்து கொள்கிறசக்திரொம்ப அதிகம் என்பதற்காகத் தான். ஒவ்வொருவருடைய மனது, அவர்களுடைய போக்கு எல்லாவற்றையும் அவர்களைப் பார்த்தமாத்திரத்தில் தெரிந்து கொண்டு விடுவேன். இப்பொழுது பாரேன், வஸந்தாவைப் பற்றி நான் நினைத்ததெல்லாம் சிறிது கூடப் பிசகாமல் அப்படியே நடந்திருக்கிறது.

மாமனார் வந்தார். 'பட்டண்ணா' என்று கூப்பிட்டார்.

'பட்டண்ணா ஆஸ்பத்திரிக்குப் போயிருக்கிறான். வஸந்தா ஆஸ்பத்திரியில் இருக்கிறாளாமே உங்களுக்குத் தெரியாதோ?' என்றாள் பெரிய நாத்தனார்.

'வஸந்தா ஆஸ்பத்திரியில் இருக்கிறாளா? எனக்குத் தெரியாதே! ஏன்? என்ன ஸமாசாரம்?' என்று பரபரப்புடன் கேட்டார்.

'அதென்னமோ. எங்களுக்கும் காரணம் இன்னதென்று தெரியவில்லை. வஸந்தாவைக் காணோமே என்று தெருவில் நின்று பேசிக்கொண்டிருந்தோம். திடீரென்று பட்டண்ணா ஒரு டாக்ஸியில் வந்து 'வஸந்தாவை ஆஸ்பத்திரியில் அட்மிட் செய்திருக்கிறார்களாம். கிளம்புங்கள் சீக்கிரம்' என்றான். பக்கத்தகத்து பத்மஜாவும் வஸந்தாவும் பீச்சுக்குப் போயிருந்தார்களாம். அங்கே வஸந்தாவுக்கு நல்ல காயமாம். அம்மா, மன்னி, அத்தை எல்லோரும் அந்த டாக்ஸியிலேயே ஆஸ்பத்திரிக்குப் போயிருக்கிறார்கள்' என்றாள் பெரிய நாத்தனார்.

'பைத்தியக்காரப் பசங்கள். தனியாக பீச்சுக்குப் போகவேண்டாம், போகவேண்டாம் என்று சொன்னால் கேட்டால்தானே? காயம் படுவதற்கு என்ன செய்தார்களாம். நல்ல காயமாமோ' என்று மாமனார் கேட்டுக் கொண்டிருக்கையில் தெருவில் டாக்ஸி வந்து நின்றது.

இவர், மாமியார் மன்னி, அத்தை எல்லோரும் டாக்ஸியிலிருந்து இறங்கினார்கள்.

'என்னடா இது! வஸந்தாவுக்கா காயம்? எப்படியிருக்கிறது?' என்று கேட்டார் மாமனார்.

'பரவாயில்லை. பத்மஜாவின் நிலைமைதான் மோசமாக இருக்கிறது. வஸந்தாவுக்குப் பரவாயில்லை கொஞ்சம் தவறியிருந்தால் உயிருக்கே மோசம் வந்திருக்கும்,' என்றார் இவர்.

'ஏன்!என்னவாம்?' என்று மாமனார் கேட்டுக் கொண்டிருக்கையில், பெரிய மைத்துனர் ஒரு ரிக்ஷாவில் வந்து இறங்கினார். அவசர அவசரமாக உள்ளே வந்து கண்ணன் (சிறிய மைத்துனர்) இருக்

கிருனே இங்கே?' என்று கேட்டார்.

'இல்லையே. ஏன்? எதற்கு?' என்று கேட்டார் மாமனார்.

'பசங்களை காலா காலத்தில் கண்டிக்காமல் அதுகள் மனசு போனபடி விட்டுவிட்டதின் விபரீதம் இப்பொழுதல்லவோ தெரிகிறது. வெளியில் தலைகாட்ட முடியவில்லையே? என்ருர்.

'சரிதான்! வஸந்தாதான் ஒருத்தி ஆஸ்பத்திரியில் இருக்கிருள் என்ருல் இவன் வேறு ஒரு தகராருே? நன்ருகத்தான் இருக்கிறது! பக்கத்து வீட்டிலும், எதிர் வீட்டிலும் ஏமா ஏதோ இல்லாததையெல்லாம் சொல்லி அதனுல் குடும்பத்துக்கே ஒரு பெரிய அவமானம் வந்துவிட்டதாக மூலைக்கு ஒருவராக முணு முணுத்துக்கொண்டிருந்தீர்களே! இப்பொழுது தெரிகிறதோ இல்லியோ அதன் பலன்! புருஷப் பையன் எப்படியாவது ஒழிந்துபோகிருன். ஒரு பெண் பிள்ளையை இவ்வளவு தலைக்கு ஏறவிட்டது ரொம்ப அக்கிரமம்' என்ருள் பெரிய நாத்தனர்.

'ஆமாண்டி அவள்தான் ஒருத்தி (என்னைத்தான்) இதை இதைத்தான் இன்னின்னரிடம் சொல்லலாம் இது இதைச் சொல்லக் கூடாது என்பதுகூடத் தெரியாமல் நம் குடும்ப விஷயங்களையெல்லாம் வெளியில் சொல்லி வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிருளே. நீவேறு அவளுக்குச் சிபார்சுக்குப்போ. போதும், போதும். குடும்பம நன்ருக உருப்பட்டாற்போலத்தான்' என்ருள் மாமியார்.

'அவர்களெல்லாம் பெரிய மனுஷிகள். உலகவிஷயம் தெரிந்தவர்கள். உலகத்தையே கடைத்தேற்ற வந்திருக்கிறவர்கள் என்று சொல்லிவிட்டு, 'என்னடி உலகத்தில் நடக்காத சம்பவம் நடந்துவிட்டது? அப்படித்தான் நடந்ததாகவே இருக்கட்டும் வீட்டோடு ரகசியமாக இருப்பதா? நாலுபேரறிய டமாரமடிப்பதா? அதோ நாலாவது வீட்டு நாகசாமியின் பெண் நாகரத்தினத்தைவிடவா 'அடங்காப்பிடாரிகள்' இந்த உலகத்தில் இருக்கப்போகிருர்கள்? அவளுடைய மன்னியும்தான் இங்கு நாள் தவருமல் வருகிருள் அதைப்பற்றி ஏதாவது ஒரு 'பொறசல் விட்டிருக்கப் போகிருளா! கலியாணமாகியிருந்தாலும் பரவாயில்லை. கலியாணமாகாத பசங்களைப்பற்றி இப்படியெல்லாம் பொறுப்பு இல்லாமல் சொல்வதினுல் எவ்வளவு விபரீதம் என்பது தெரிந்தால் இப்படியெல்லாம் சொல்லத் தோன்றுமா?' என்ருள்

"............சொந்தப் பெண்டாட்டியுடன் பேச சங்கோஜப்பட்டு............"

நாத்தனரை நோக்கி அத்தை.

'இதென்ன அத்தை! இதுவா சமயம அதற்கெல்லாம், என்று சொல்லிவிட்டு 'ஆமாம். மைத்துனரைப்பற்றி (கண்ணன்) என்னமோ சொன்னீர்களே! என்ன ஸமாசாரம்?' என்று தன் அகமுடையானைக் கேட்டாள் மன்னி.

ஆனுல் மன்னியின் இந்த ஒரு பெரிய சாமர்த்தியத்தைக் கண்டு என்னுல் ஆச்சரியப்படாமலும் இருக்க முடியவில்லை. சமயத்தில் எவ்வளவு சாதுரியமாகவும் சாமர்த்தியமாகவும் நடந்துகொள்கிருள் பார். குடும்பத்தில் தனக்குதான் மிகுந்த பொறுப்பு மாதிரியும், மீதிபேர்களுக்கு இல்லைபோலவும், இந்த வெட்டிப் பேச்சு எதற்கு? மைத்துனரைப்பற்றியல்லவோ இப்பொழுது கவனிக்கவேண்டும்?' என்று தெரியப்படுத்துகிற மாதிரியும் அல்லவோ இதற்கு அர்த்தம். இதெல்லாம் கற்றுக்கொண்டு வரக்கூடியதல்ல. சுபாவத்திலேயே ஏற்பட்ட சாமர்த்தியங்கள்.

உனக்கும் எனக்கும் என்னதான் வருவதாக இருந்தாலும் இந்த மாதிரி சொல்லத் தெரியுமா? நாம் என்ன சொல்வோம் தெரியுமா? 'சொன்னதைக் கேட்டால்தானே நன்ருக வேண்டும். வந்ததை அனுபவிக்கட்டும்' என்றுதான் சொல்லுவோம். அதெல்லாம் 'மாயாவி'களுக்குத்தான் தெரியும்.

'என்னடா! கண்ணன் என்ன செய்தான்?' என்று மாமனர் கேட்டுக் கொண்டிருக்கையில் தெருவில் ஒரு போலீஸ் வான் வந்து நின்றது.

மற்றவை அடுத்த கடிதத்தில்.

உன் அன்புள்ள

ரமா

அட்டைப்படம்

கற்பனையும், கவலையும்

★

உதவி நாடி வருபவர்களுக்கு இல்லையென்று சொல்லாமல் அள்ளி அள்ளிக் கொடுகக வேண்டுமென்ற வேட்கை மிகுதியோடு சிறந்த ஆணழகன் ஒருவன் காடுகளையும், மலைகளையும் கடந்து செல்ல நேரிடுகிறது. இவவளவு சிரமங்களையும் அனுபவிப்பானேன்? தான் வருந்திய போதிலும் தன்னை அண்டி வந்து யாசிப்பவர்களுக்கு தயை கூர்ந்து உதவி செய்வதில் அவனுக்கு எல்லையில்லாத மகிழ்ச்சி. இரப்பவருக்கு கை நிறையக் கொடுப்பதில் மன நிறைவு ஏற்படுகிறது அவனுக்கு இந்த நோக்கத்தோடு வெளிபபோந்த தன்னுடைய நாயகனின் பிரிவால் வருந்தும் தலைவி எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணியெண்ணி கற்பனைகளைச் செய்து வாடுகிறாள்; கவலையுற்றும் நொந்து புழுங்குகிறாள். கற்பனை கலந்த இவவேதனையில் நாட்டையும், காட்டையும் கடந்து போகும் தன் தலைவனுக்கு நேரிடக்கூடிய அபாயங்களெல்லாம் தலைவியின் மனத்திடை ரூபம் பெறுகின்றன.



தலைவன் தாண்டிச்செல்ல வேண்டியது மிக்க கொடிய காடு புதிதாக அவ்வழியே செல்லுபவர்களுக்குத் திக்குத் திசை தெரியாது அங்கு கொடிய ஆண் புலியொன்று ஒரு யானையைக் கொன்று ரத்தம் தோய்ந்த பகுதியிலிருநது, காலை வளைத்துத் தாவி தனக்கேற்பட்ட வெற்றிச்செருக்குடன் சீறி, உறுமி அட்டகாசம் செய்கிறது அதன் கோர உறுமல் மலைப் பிராந்தியத்திலே இடிமுழக்கமென எதிரொலி செய்கிறது. இதைத்தவிர எங்கும் ஒரே காட்டு மரங்கள். குறுக்கே மலை வழிகள். இவற்றையெல்லாம் சமாளித்துக்கொண்டு எப்படித் தான் தலைவர் சென்றாரோ என்று ஏங்கித் துவண்டு போகிறாள் தலைவி. அவள் தன்னைத் தேற்றும் தன் தோழியிடம் பின்வருமாறு சொல்கிறாள்:—"என்னைப் பலவாறு அன்புடன் பாதுகாத்தும், மிகுந்த காதலோடு எப்பொழுதும் என்னைவிட்டு நீங்காமலுமிருந்த என் தலைவர், இப்பொழுது நான் தனித்திருக்க என்னைப் பிரிந்து துன்பம் மிக்க கொடிய காட்டு நெறியிற் சென்றாராதலால் நான் கவலையின்றி இருப்பது எவ்வாறு?" மேற்படி கருத்துக்களுடன் சொல்வதாகவுள்ள அகநானூறு பாடல்:—

"..................................வல்வேல்
வான வரம்பன்
நன்னாட் டும்பர்
வேனில் நீடிய வெங்கடற் றடைமுதல்
ஆறு செல் வம்பலர் வேறு பிரிந்தலறக்
கொலை வெம்மையின் நிலை பெயர்ந்துறையும்
பெருங்களிறு தொலைச்சிய இருங்கேழ் ஏற்றை
செம்புல மருங்கிற் றன்கால் வாங்கி
வலம்படு வென்றியொடு சிலம்பகஞ் சிலம்பப்
படுமழை உருமின் முழங்கும்
நெடுமர மருங்கின் மலையிறந்தோரே.

—நக்கீரனார்"

கலா மண்டபம்

சினிமாவும் கதாசிரியரும்

சாண்டில்யன்

படம் பிடிக்கும் வேலையில் மிகச் சிறியவர் என மதிக்கப்படுபவர் கதாசிரியர்தான். படத்தைப் பிடிக்குமுன்பு எந்தக் கதையைப் பிடிக்கப் போகிறோம் என்று யோசிக்கும் படமுதலாளிகள் மிகக் குறைவு. எந்த நக்ஷத்திரத்தை 'புக்' செய்யலாம்? எந்த டைரக்டரை அமர்த்தலாம் என்ற யோசனை தான் முதன் முதலில் முதலாளிக்கு ஏற்படுகிறது. ஒரு நக்ஷத்திரத்தைப்பார்த்து "இந்தாங்க! ரெண்டு படத்துக்காக கையெழுத்துப் போடுங்க" என்று கேட்கிற முதலாளி உண்டு ஆனால் கதாசிரியரைப் பார்த்து அந்த மாதிரி கேட்கிற முதலாளியே கிடையாது தமிழ் நாட்டில் முக்கால் வாசிப் படங்கள் 'பிளாங்கி' யாவதற்கு இதுதான் காரணம். அஸ்திவாரமில்லாத மாளிகைகள் நிர்மாணிக்கப்படுகின்றன. மேலே என்ன வர்ண வேலைகள் செய்தாலும் அஸ்திவாரம் அசைந்து கொடுப்பதால் மாளிகை இடிந்து முதலாளியின் தலைமேல் விழுகிறது.

ஜனங்கள் ஒரு படத்தை ஏன் பார்க்கப் போகிறார்கள்? இன்னார் நடிக்கிறார் என்பதற்காகவும் படம் பார்க்கப் போவது உண்டு. ஆனால் படம் பார்க்கப் போகும் ஜனங்களில் 100-க்கு 100-பேர் என்ன சொல்லிக்கொண்டு போகிறார்கள்? குறிப்பிட்ட அம்மாவைப் பார்க்கப்போகிறேன், குமாரியைப் பார்க்கப்போகிறேன், ஐயாவைப் பார்க்கப்போகிறேன், அப்பாவைப் பார்க்கப் போகிறேன் என்று சொல்கிறார்கள்? கிடையவே கிடையாது. ஆதித்தன் கனவைப் பார்க்கப் போகிறேன், சக்ரதாரியைப் பார்க்கப்போகிறேன், சந்திரலேகாவைப் பார்க்கப் போகிறேன் என்றுதான் சொல்கிறார்கள். "மதன காம ராஜன் கதை போடறான் ஐயா பார்க்கலாம் வாரீங்களா?" என்று கேட்பதுதான் சகஜம். ஏன்? கதைதான் படத்திற்கு அஸ்திவாரம். நடிப்பு அதற்கு சோபையைக் கொடுக்கிறது இம்மாதிரி அஸ்திவாரத்தைத் தயாரிக்கும் கதாசிரியன்

[தொடர்ச்சி அடுத்த பக்கம்]

அஜித் பிக்சர்ஸ் ஹிந்தி 'குண சுந்தரி'யில் அற்புதமாக நடிக்கும் நிருபராய். இதை ஒட்டிதான் தமிழில் 'என் கணவர்' எடுக்கப்பட்டது.

சினிமாவும் கதாசிரியரும்

[முன் பக்கத் தொடர்ச்சி]

சினிமா வட்டாரங்களில் இரண்டாம பக்ஷமாகவே கருதப்படுகிறான். வர வர இவனும் சுயமரியாதையை இழந்து அங்கிருக்கும் புத்திசாலிகளுக்கு சமானமாகச் சிரிக்கவும், சிரித்து தயவை சம்பாதிக்கவும், தயவை சம்பாதித்து முதலாளிகள் மனப்போக்கின்படி கதை எழுதவும். அதனால் ஜனங்களிடம் அசட்டுப் பட்டம வாங்கவும் துணிந்து வருகிறான் தமிழ்நாட்டு சினிமாக் கலைக்கு அபாயம் உண்மையாக இந்த இடத்தில்தானிருக்கிறது,

கதாசிரியன் பட்டினி கிடப்பதால் தவறு இல்லை. அதனால் ஒரு விஷயந்தான் நடக்கும். எற்கனவே பணப்பஞ்சம ஏற்பட்டிருக்கும் சினிமாத் துறையில் அறிவுப் பஞ்சமும் ஏற்பட்டுவிடும். இதனால் கதாசிரியனுக்கு அதிக நஷ்டம் இல்லை. சினிமா முதலாளிகளுக்குத்தான் நஷ்டம். ஆனால் காற்றுள்ளபோதுதான் தூற்றிக்கொள்ள வேண்டும் என்று அகப்பட்ட 'சான்ஸி'ல் நுழைந்து மனசாட்சிக்கு விரோதமாகக் கதை எழுதும் கதாசிரியன் தன் கையில் தாண்டவமாடும் சரஸ்வதிக்குத் துரோகம் செய்கிறான் தன் கற்பனைக்கே இறுதியில் உலை வைத்துக்கொள்கிறான்.

சினிமாவில் சேரும் கதாசிரியர் கற்பனை எப்படிக் கெட்டுப் போகிறது என்பதைச் சொல்கிறேன் முதன் முதலாக சினிமாக் கம்பெனி படிக்கட்டை ஏறும் கதாசிரியர் சோப்புபோட்டு, அன்று தோய்த்த ஷர்ட்டைப் போட்டுக்கொண்டாலும், கிழிந்த அங்கவஸ்திரத்தைப் புதிதாகத் தைத்துப் போர்த்திக்கொண்டிருந்தாலும் துல்யமான அறிவுடன்தான் சினிமாக் கம்பெனிக்குள் நுழைகிறார். அங்கு நுழைந்தவுடன் அவர் தெரிந்துகொள்வதென்ன? தான் சினிமாவுக்கு அவ்வளவு முக்கியமல்லவென்பதை முதலில் தெரிந்துகொள்கிறார் இரண்டாவதாகத் தனக்குக் கதை எழுதத் தெரிந்தால் மட்டும் போதாது, வைத்தியமும், மாந்திரீகமும் ஓரளவு தெரியவேண்டும்என்பதையும் உணர்ந்துகொள்கிறார்.

நமது கதாசிரியரை சினிமாக் கம்பெனிக்குள் அழைத்துச் செல்லும் நண்பர் உள்ளே நுழைந்ததும் "முதலாளி இருக்கிறாரா?" என்று விசாரிக்கிறார். 'நம்ப தஞ்சாவூர் அம்மாவோடு பேசறாருங்க'' என்று பதில் கிடைக்கிறது. நண்பர் கதாசிரியரை ஹாலில் உட்காரச் சொல்லிவிட்டுத் தானும் உட்கார்ந்து கொள்கிறார். சிறிது நேரம் ஆகிறது. இதற்குள் நண்பர் அங்கு மிங்கும் போய்வரும் கம்பெனி குமாஸ்தாக்களையும் பியூன்களையும் பார்த்து அடிக்கடி தலையாட்டியும சிரித்தும் 'என்னடா' என்று சகஜமாக சம்பாஷித்தும் தனக்கு அந்தக் கம்பெனியிலுள்ள செல்வாக்கை கதாசிரியருக்குக் காட்டுகிறார். இப்படி இவர்கள் முன் ஹாலில் தபஸ் செய்கையில் இவர்கள் கண் முன்பாகவே அநேகம் பேர் முதலாளி அறைக்குள் நுழைகிறார்கள். இவர்களைக் கவனித்துக்கொண்டிருக்கும் கதாசிரியர் முதலாளி அறைக்குள் கூட்டம் அதிகமாகிவிடுவதைக் கவனிக்கிறார். "ஏன் நாமும் போகலாம் போலிருக்கிறதே" என்றாலோ நண்பர் அலட்சியமாக நாற்காலியில் சாய்ந்துகொண்டு "இவங்க தொலையட்டும்னு, நாம நிதானமாப் பேசிவிட்டுப் போகலாம்'' என்று சொல்லி கண்களை மூடிவிடுவார்.

முதலாளி தரிசனம் கடைசியாகக் கதாசிரியருக்குக் கிடைக்

[தொடர்ச்சி அடுத்த பக்கம்]

ஸ்டுடியோக்களில் என்ன நடக்கிறது?

சினிமாவும் கதாசிரியரும்

[முன்பக்கத் தொடர்ச்சி]

கும்போது கதாசிரியர் உத்ஸாகம் எல்லாம் காற்ருகப் பறந்துவிடும் இவர் கதையைப்பற்றிப் பிரஸ்தாபித்தவுடனே அதை அமரிக்கையாகக் கேட்டு அதன் தராதரத்தைப் பரிசீலிக்கக்கூடியவர்கள் யாருமிருக்கமாட்டார்கள். வேறு ஜோலிகளில் மண்டை குழம்பியிருக்கும் முதலாளி "கதையைக் குடுத்து விட்டுப் போங்க. நான் சொல்லியனுப்பறேன்" என்று சொல்லிவிடுகிருர். கதையைக் கொடுத்துவிட்டு வந்தால் கதையும் திரும்பி வராது திரும்பத் திரும்பக் கம்பெனிக்கு நடந்தால் முதலாளியைப் பார்க்கவும் முடியாது.

இது கிடக்கட்டும். கதாசிரியருக்குப் பலத்த சிபார்சு இருந்து சான்ஸே கிடைத்துவிட்டதென்று வைத்துக்கொள்வோம். பின்பு அவருக்குத் தெரியவேண்டியது சிறிது வைத்தியம், சிறிது மாந்திரீகம். இது இரண்டும் தெரியாவிட்டால் கற்பனையாவது அளவுக்கு மீறி இருக்கவேண்டும். ஏனென்ருல் கதையை விரிவாக எழுதுமுன் பிரதான நடிகரும் நடிகையும யாரென்று முதலாளி கதாசிரியருக்குச் சொல்லுவார், 20 வயது ராஜகுமாரனையும் 17 வயது ராஜகுமாரியையும் மனதில் வைத்துக்கொண்டு கதை எழுதியிருக்கும் கதாசிரியர் தனது கதையின் பிரதம பாத்திரங்கள் அவ்வளவு பால்யமல்ல வென்பதைத்தெரிந்துகொள்வார் 50வயது ஹீரோவையும 40-வயது ஹீரோயினையும் அவர் மீண்டும் வாலிபத்துக்குக் கொண்டு வர வைத்தியம், மாந்திரீகம் தெரிந்தால் அவற்றைக் கையாளலாம அல்லது தமது கற்பனைசக்தியால் இந்தத் தலை நரைத்த குழந்தைகளையே வாலிபஸ்தர்கள் என்று அகக் கண்ணில் கண்டு களிக்கலாம் ஒரு

[தொடர்ச்சி அடுத்த பக்கம்]

ஹிந்தி 'மங்கம்மா'

ஜெமினி ஸ்டுடியோவில் ஒளவையாருக்கு அடுத்தபடியாக நாலுபடங்களை எடுக்க ஏற்பாடு செய்துகொண்டிருக்கிருர்கள் 'சந்திரலேகா'வில் வெற்றியைக் கண்ட பிறகு 'மங்கம்மா'வையும் ஹிந்தியில் எடுக்க ஏற்பாடு நடந்து வருகிறது ஸ்ரீ வாஸனை நான் முன்பு பார்த்தபொழுது ஹிந்தி மங்கம்மாவையும் வஸுந்தராவை வைத்தே பிடிப்பதா என்பதைத் தீர்மானிக்கவில்லை என்று சொன்ஞர். ஆனல் இப்பொழுது உலாவும் வதந்திகளிலிருந்து 'ஸ்வர்க்கஸீமா'வில் பிரக்யாதி பெற்ற பானுமதியே ஹிந்தி மங்கம்மாவாகத் தோன்றுவார் எனத் தெரிகிறது.

[தொடர்ச்சி அடுத்த பக்கம்]

அரசனை எப்படி கைக்குள் போட்டுக் கொள்ளலாம்' என்று சூழ்ச்சிப் பார்வை பார்க்கிருர் பானுமதி வெலிங்டனில் ஓடும் 'ராஜமுக்தி'யில்.

சினிமாவும் கதாசிரியரும்

[முன் பக்கத் தொடர்ச்சி]

விஷயம் மாத்திரம் கதாசிரியர் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஆளுக்குத் தகுந்த கதையை இவர் எழுதவேண்டுமேயொழிய இவர் கதைக்குத் தகுந்த ஆளை யாரும் பொறுக்கமாட்டார்கள். இந்த நிர்ப்பந்தத்தோடு மட்டுமல்லாமல் கதையில் இன்னும் என்னென்ன சீன்கள் வர வேண்டும் என்பதையும் முதலாளி சொல்லிக்கொடுப்பார். "இந்தாங்க கதையிலே கொஞ்சம் எண்டர்டைன்மெண்டு வேணுங்க" என்பார். அதாவது நாட்டியம், பாட்டு வேணும என்று அர்த்தம். ஆகையால் கதாநாயகன் தற்கொலை செய்துகொள்ளும்போதும் அதனால் கதாநாயகி துன்புறும் போதும் ஆளுக்கொரு பாட்டுப் பாடிககொண்டு அந்தக் காரியங்களைச் செய்வது அவசியமாகிறது. ராஜா, தர்பாரில் வரும் சமயத்திலெல்லாம் நாட்டியத்தைப் போட மறக்காதீர்கள். ஹீரோ தாசி வீட்டுக்குப் போக நேரிடுமாகையால் அந்த தாஸி அவனை ஒழுங்காக வரவேற்கட்டும். நாலு சேடிகளை விட்டு நாட்டியமாடச் சொல்லி, முதலாளி ஏற்கனவே 'புக்' செய்திருக்கும் நபர்களை விட்டுப் பாட்டுக் கச்சேரி செய்யச் சொல்லி வரவேற்கும்படி செய்யுங்கள் இல்லாமற் போனால் உங்கள் கதையை எந்தக் கம்பெனியும் வரவேற்காது

இப்படிப் பாதிக் கதையை டைரக்டரும், முதலாளியும் தயார் செய்துவிட்டு கதை கெட்டுப் போனதற்கான பழியைமட்டும் கதாசிரியர் மேல் போடுகிறார்கள். இப்படியெல்லாம் செய்துவிட்டு "ஏன் ஐயா படத்தை இப்படி எடுககிறீர்கள்" என்று கேட்டால் "கதை கிடைக்கலையே, என்ன செய்வது?" என்கிறார்கள்.

தவிர கதாசிரியர்கள்மேல் முதலாளிக்கோ, டைரக்டருக்கோ பூரண நம்பிக்கைகிடையாது. அடிக்கடி ஹாலிவுட் படங்களை அவர்கள் போய் பார்ப்பதன்றி "அந்த ஷாட்டை நம்ம கதையில் போட்டுக்கொள்ளலாமா, இந்த ஐடியாவைக் கதையில் புகுத்தலாமா" என்று சதா சர்வ காலமும் அபிப்பிராய தஸ்கர வித்தையில் முனைகிறார்கள். இங்கு கதை எழுதுபவனிடம நம்பிக்கைக் குறைவாயிருப்பதாலும், அவன் பழைய பஞ்சையாகவே காலத்தைக் கழிப்பதாலுமே தமிழ்நாட்டில் நல்ல படங்கள் வெளிவருவதில்லை. சில டைரக்டர்களிடம் நான் பழகியமட்டில் ஒரு அனுபவம் உண்டு. சொந்தமாக நான் ஒரு அபிப்பிராயத்தைச் சொன்னால் அவர்கள் ரஸித்ததில்லை. ஆனால் என் சொந்த அபிப்பிராயத்தையே டால்ஸ்டாய் சொன்னார், ஷேக்ஸ்பியர் சொல்கிறார் என்று சொன்னால் இவர்கள் 'ஆகா' வென்று பிரமிப்பதைப் பார்த்திருக்கிறேன். ஷேக்ஸ்பியரும், டால்ஸ்டாயும் சாமான்யமானவர்களல்ல ஆனால் அவர்களை எல்லாக் காரியத்துக்கும் கொண்டு மாட்டுவது நியாயமல்ல. நமது தமிழ்நாட்டுக் கதாசிரியன் அப்படி ஒன்றும் மட்டமானவனல்ல. அவனை நம்பிப் படம் பிடிப்பதால் எந்த முதலாளிக்கும் நஷ்டம் வராது. அஸ்திவாரத்தைப பலமாக வைத்துக் கொள்வதில் என்ன நஷ்டம்?

முதலாளி கதாசிரியரிடம் முதலில் கதையை வாங்கட்டும், படித்துப்பார்த்து, திருப்தியாயிருந்தால் பிறகு படம் பிடிக்கட்டும். அப்படிப் படம் பிடிக்கும்போது கதாசிரியனுக்கு நிறைய பணம கொடுக்கட்டும. ஒரு நடிகைக்கு ஒரு படத்துக்கு ஒரு லட்ச ரூபாய் கொடுக்கும்போது கதாசிரியனுக்கு ஏன் 25000 ரூபாயாவது கொடுக்கக்கூடாது?

ஆனால் அந்த மனோபாவம் இன்னும் தென்னிந்திய படமுதலாளிக்கு ஏற்படவில்லை. சினிமா விளம்பரங்களைப் பார்த்தாலே இந்த உண்மை தெரியவரும். எல்லா விளம்பரங்களிலும் நடிகர், நடிகை, டைரக்டர், இவர்கள் பெயர்கள் இருககின்றன அசேதனமான ஸ்டூடியோவின் பெயர் கூட இருக்கிறது அஸ்திவாரமான கதாசிரியன் பெயர் இல்லை அஸ்திவாரமில்லாத தளுக்குக்கட்டிடமாக தென்னிந்திய சினிமாத் தொழிலில் இன்னும் ஆடிக் கொண்டுதான் இருக்கிறது.

ஸ்டூடியோக்களில் என்ன நடக்கிறது ?

[முன் பக்கத் தொடர்ச்சி]

இன்னொரு கதை டைரக்டர் ஆச்சார்யாவின் கைவசத்திலிருக்கிறது. இதற்கு இன்னும் பெயர் கொடுத்தபாடில்லை. ஆனால் அலெக்ஸாண்டர் டூமாஸின் கார்ஸிகன் பிரதர்ஸை ஞாபகத்தில் வைத்துக் கொண்டீர்களானால் போதும். இந்தக்கதையும் அநேகமாக அதைத் தழுவித்தான் இருக்கும் என்று கேள்வி.

இன்னும் இரண்டு கதைகள் திரைக்கு உதவும்படி அமைக்கப்பட்டுவருகின்றன. சினிமா பாஷையில் சொல்ல வேண்டுமானால் 'ஸ்கிரிப்ட் ரெடியாகிறது' என்று சொல்லலாம் 'சக்ரதாரி'யில் நல்ல வெற்றியைக் கண்ட ஸ்ரீ வாஸன் கபீர்தாஸின் சரித்திரத்தையும், நாகையாவை வைத்துப் பிடிக்கவேண்டுமென்று யோசித்து வருகிறாராம்.

நவ ஜீவனம்

டைரக்டர் நாகபூஷணம் ஜெமினியில் தயார் செய்துகொண்டிருக்கும் சமூகச் சித்திரமான 'நவஜீவனம்' பூர்த்தியாகும் தருவாயிலிருக்கிறது. இதில் நாகையா, கண்ணாம்பா முதலிய பிரபல நடிகர்கள் நடிக்கிறார்கள்.

கன்னியின் காதலி

தலைப்பைப் பார்ப்பவர்கள் ஏதோ தவறாக எழுதிவிட்டேன் என்று நினைக்கும்படித்தான் இருக்கும். ஆண் பிள்ளைக்குத்தான் காதலியிருக்கமுடியும்? பெண்ணுக்குக் காதலியிருக்க முடியுமா? என்று சந்தேகிப்பது சகஜம. ஆனால் ஷேக்ஸ்பியரின் 'டுவெல்த் நைட்' நாடகத்தைப் படித்தவர்கள் அந்தமாதிரி சந்தேகிக்க வேண்டிய அவசியமில்லை. காமிராமான் ராம்னாத் ஜூபிடருக்குக் கொடுத்துள்ள மூன்று கதைகளில் கன்னியின் காதலிதான் முதன் முதலாக வெளிவரும். 'கண்ணம்மா என் காதலி'க்கு அடுத்தபடியாக ராம்னாத் தன் பெயரில் எடுக்கும் படம் 'கன்னியின் காதலி'தான் இப்படம் கோவை சென்ட்ரல் ஸ்டூடியோவில் தயாராகிறது.

சிறு விளம்பரங்கள்

ப்ராங்கைடிஸ் இரவு இருமல்

மற்றும் இதர மார்பு & சுவாசப்பை தகராறுகளுக்கு

பெப்ஸ் சிறந்தது

ஒரு நல்ல ருசியுள்ள பெப்ஸ் வில்லையை உட்கொள்ளுங்கள் அது கரைந்தவுடன் சுவாசத்துடன் அதன் மருந்து சத்துக்கள் சுவாசப்பைக்குள் சென்று, சீக்கிர நிவாரண மளிக்கும். பெப்ஸ் இருமலை நிறுத்தி, புண்ணுகிய உறுப்புகளுக்குச் சமனமூட்டி, குணமாக்கி சளியைத் தளரச்செய்து அடைப்பை நீக்கும்.

ஏஜண்டுகள்:— மெஸர்ஸ். தாதா & கம்பெனி, பி. டி. மதராஸ்



பெப்ஸ் மருந்து சத்துக்கள் ஒவ்வொரு சுவாச உறுப்புக்கும் போவதை குறிக்கும் படம்.

PEPS

கிருமி நாச

தொண்டை & மார்பு வில்லைகள்

தொண்டை, மார்பு, சுவாசப்பை தகராறுகளுக்கு சிறந்த பயனளிக்கவல்ல நிவாரணி.

லெப்பர் க்யூர்

18 வகை குஷ்டங்கள், வெண் குஷ்டம், மேகதழும்புகள், திமிர். முதலிய சரும வியாதிகளுக்கும் சவாய், கனேரியா, முதலிய வற்றிற்கும் உத்தரவாத சிகிச்சை.

ரிஜிஸ்டர்

விவரங்களுக்கு

லக்ஷ்மி & கோ
ரிஜிஸ்டர்ட்

H.O.
வால்டேர்
R.S.
போஸ்ட்

2/135
கிராட்டல்
OF
PE. No. 137
மதராஸ்

அறிவிப்பு

கீழே கொடுத்துள்ள விலாசதாரரை எமது தினசரி, வாரப் பதிப்புகளுக்கு ஏஜண்டாக நியமித்துள்ளோம். அன்னவரிடம் சந்தா செலுத்தி சந்தாதாரர்களாகப் பதிவுசெய்து கொள்ளுமாறு கோருகிறோம்.

கொழும்பு

ஸ்ரீ ஆர். தியாகராஜன்,
29, மிட்சோஸ் சந்து,
பேட்டா. கொழும்பு.

●

சர்க்குலேஷன் மானேஜர்,
சுதேசமித்திரன், விக்டரி ஹவுஸ்,
மவுண்ட்ரோட், சென்னை.

குகன்

சோப்புகள்

சுதேசி தயாரிப்பு
சலவைக்கு மிகவும் சிறந்தது.

குகன் இண்டஸ்ட்ரீஸ்... திருப்பூர். S.I.

இப் பக்கத்தில் விளம்பரம் செய்யுங்கள்

★

2" X 2" அளவுக்கு கட்டணம் ரூபாய் பத்தே தான்.



சென்றமாதம் 22-ந்தேதி டில்லிக்கருகிலுள்ள லடோசராயிலுள்ள கிராம சேவா ஸ்தாபனத்தின் ஆதரவில் நடந்த கஸ்தூரிபா காந்தியின் 5-வது சிரார்த்ததின கொண்டாட்டக் கூட்டத்தில் கவர்னர் ஜெனரல் ராஜாஜி செய்த பிரசங்கத்தை ஸ்ரீ தேவதாஸ் காந்தி மொழிபெயர்த்துக் கூறினர். தேவதாஸ் அருகில் ஸ்ரீமதி ராமேஸ்வரி நேருவும், ராஜாஜி அருகில் ரெவரண்டு டாக்டர் பாஸ் வெஸ்ட் ஸ்காட்டும் காணப்படுகின்றனர்.



ராஜ்காட்டிலுள்ள மகாத்மா காந்தி சமாதியில் ஐக்கிய நாடுகள் உணவு-விவசாய ஸ்தாபன டைரக்டர் ஜெனரல் மிஸ்டர் நாரிஸ் ஈ. டாட் சமீபத்தில் புஷ்பமாலை சூட்டி மரியாதை செலுத்தியபோது எடுத்த படம்.



மெய் விளங்கிய அன்பர்கள்

பெரியபுராணப் பூங்கோயிலில்

பி.ஸ்ரீ.

41

சேரியில் பக்தி வெள்ளம்

★

நந்தனருக்குப் பைத்தியம் போக வேண்டுமென்று சேரியில் பூசை போடும் காட்சிதான் எவ்வளவு ரஸமாகவும் அர்த்தபுஷ்டியுடனும் சித்திரிக்கப்படுகிறது கொம்பு தம்பட்ட முழக்கங்களுக்கிடையே புலையர் எழுந்து நின்று.

'எல்லைப் பிடாரியே !
எதிராக வந்தெமைக்
கொள்ளடி உன்காவலாய்க்
கொள்ளடி'

என்றார்.

அப்பொழுது நந்தனர்,

'சொல்லினும் அடங்காத
சோதிபர மானந்தத்
தில்லைநா யகன் காவல்
தெளியீரோ ?'

என்றார்.

தில்லைநாயகன் காவலில் எல்லைப் பிடாரி என்ற சிறு தெய்வம் ஆக்கிரமிப்புச் செய்ய முடியாதென்று நந்தனர் சொன்னதும், புலையர். தில்லைத் தாண்டவராயருக்குப் போட்டியாக நொண்டிவீரப்பன் என்ற தங்கள் தெய்வத்தைக் காட்டுகிறார்கள். முடிசூடி உலகாளும் மன்னவன் போல் நொண்டிவீரப்பன் முண்டாசு கட்டித் தன் குடிகளைப் பயமுறுத்திக் காணிக்கை பெற்றுக்கொள்கிறானும்:

'முண்டாசு கட்டி வரும்
நொண்டிவீரப்பனைக்
கொண்டாடிப் பூசைகளைக்
கொள்ளுவீர்' என்றார்.

என்றார்.

உடனே அந்த 'முண்டாசு'க் கொள்கையை மறுத்து நந்தனர்,

'அண்டங்கள் பதினாலுக்கு
அப்பாலும் இப்பாலும்
நின்றார்க்கு முண்டாசு
நிலைக்குமோ?'

என்றார்.

பிறகு சேரிவாசிகள் நந்தனரை லட்சியம் செய்யாமல், மகாவிஷ்ணுவுக்குப் போட்டியாகத் தாங்கள் படைத்திருக்கும் கறுப்பண்ண சாமிக்குப் பலிபோட வேண்டும் என்கிறார்கள்:

'கச்சைஅரி வாள்வைத்த
கறுப்பண்ண சாமியை
இச்சையுடன் வேண்டி
இடும்பலிகள்'

என்றார்.

நந்தனர் வருத்தத்துடன்.

'பச்சிலையும் பூவும்
பாதத்தில் இட்டவுடன்,
இச்சையெல்லாம் தந்தருளும்
என்தெய்வம்'

என்றார்.

சேரிவாசிகளுக்கோ ஆடு, கோழி பலி கொடுக்கவேண்டுமென்றும், காரசாரமான கள்ளை உள்ளே தள்ள வேண்டுமென்றும் ஆசை அதிகப்படுகிறது:

'நேரம்அறி கோழியும்
நிதம்மூன்று சாவலும்
தீயகள்ளும் வைத்துத்
தெரிசிப்போம்'

என்றார்.

நந்தனரோ,

'வாயாலே சிவமென்றால்
வாழ்த்தினல் எப்போதும்
தாயாரைப் போலவே
தழுவிவரும்'

என்றார்.

இதற்குமேல் வாக்குவாதத்தை வளர்த்துக்கொண்டே போக விரும்பவில்லை சேரிவாசிகள். அவர்களும் எவ்வளவோ மனவருத்தத்துடனும் அனுதாபத்துடனும்,

'பித்துப் பிடித்திருக்கும்
பேயனும் நந்தனுக்குச்
சித்தம் தெளிந்திடவே
செய்குவீர்!' என்ருர்.

நந்தனுருக்காகச் சேரிவாசிகள் கூக்குரலிட்டுச் செய்யும் இந்தப் பிரார்த்தனை எவ்வளவு ரஸமாயிருக்கிறது பாருங்கள்! மூடபக்தியையும், ஞான பக்தியையும் முரண்பட வைத்திருப்பது அவரவர் குணுதிசயங்களுக்குப் பொருத்தமாயிருக்கிறதல்லவா? அவர்கள் கெட்டுப்போகிருர்களே என்று நந்தனுர் நினைப்பதுபோல் இவர் தாமும் கெட்டுச் சேரியையும் கெடுக்கிருரே என்று அவர்களும் வருந்துகிருர்கள். இவர் அவர்களிடம் அன்புகொண்டிருப்பதுபோல் அவர்களும் இவர்மீது அனுதாபம் கொண்டிருக்கிருர்கள்.

நாளடைவில் சேரியில் நந்தனுரைப் பின்பற்றுவோரும் காணப்பட்டதாகக் கூறுகிருர் கோபாலகிருஷ்ண பாரதியார். நந்தனுரின் கொள்கை புதுமையாகவும் புரட்சிகரமாகவும் சேரிவாசிகளுக்குத் தோன்றியதால், சேரிப் பெரிய கிழவன் தவிர நந்தனுரின் மற்றச் சீடர்களெல்லாம் சிறு பிள்ளைகள் என்றே கோபால கிருஷ்ண பாரதியார் குறிப்பிடுகிருர்.

எல்லோரும் வாருங்கள்
சுகமிருக்குது பாருங்கள்

என்று இனத்தாரையெல்லாம் நந்தனுர் கூவியழைத்தும், இவர் உபதேசத்தால் திருந்திப் புது வாழ்வு பெற்றவர்கள் பெரும்பாலும் இளைஞர்கள் என்பதே கீர்த்தனை ஆசிரியரின் கருத்து 'சிறு—பயல்களுக்கே உபதேசம்; நீர் பண்ணி வைத்ததெல்லாம் மோசம்!' என்று தானே பெரிய கிழவன் தான் திருந்துவதற்கு முன் ஏசிக்காட்டுகிருன்?

நிலத்தைப் பண்படுத்திக்கொண்டிருந்தவர்களுக்கு உள்ளத்தைப் பண்படுத்தும் சிவநெறியையும் காட்ட விரும்பினுர் நந்தனுர் என்று கீர்த்தனை ஆசிரியர் கற்பனை செய்வது நந்தனுரின் பக்தியுள்ளத்திற்கும் செந்நெறியாகிய சிவநெறிக்கும் பொருந்துவதுதான்.

அரஹரா என்று ஒரு குழி நட்டால்
ஐங்கலம் விளையும்

என்று நந்தனுர் சேரி வாசிகளை நோக்கிச் சொன்னுராம். இதனுல் இவர், கடவுள் நம்பிக்கை இந்த லோகத்திலும் பலன் தரும் என்று உபதேசித்ததாய்க் கொள்வதுடன் மறுமைக்கு வேண்டிய விவசாயத்திலும் இப்போதே ஈடுபடும்படி அவர்களைத் தூண்டினுர் என்றும் கருதலாம்.

சீடர்களில் சிலர் சில சமயங்களில் கேள்வி கேட்டதுபோலவும், நந்தனுர் அவர்களுக்குத் தெரிந்த உபமான வாயிலாகவே விஷயத்தை விளக்க முயன்றதுபோலவும் இந்த ஆசிரியர் கற்பனை செய்திருப்பதும் உண்டு. சேரியிலுள்ள ஒருவன் நடராஜ் தரிசனம் தனக்கு எப்படிச் சித்தியாகுமென்று கவலையோடு கேட்பதாக வைத்துக்கொண்டு, அந்தக்கேள்விக்கு நந்தனுர் வலைபோட்டு மீன் பிடிக்கும் உபமானத்தைக் கொண்டே விடை கூறி ஆறுதல் அளிப்பதாய்க் கருதலாம்

பக்தி வலை வீசிப்
பார்த்திடும் போதினிலே,
தத்திக் குதித்திடும்
தாண்டவம் மைந்தா!

என்று நந்தனுர் கூறுகிருரல்லவா?

வேருெருவன் நந்தனுரைப்பார்த்து 'விஸ்தாரமான இந்த அண்ட கோடிகளெல்லாம் உம்முடைய ஈசனிடத்தில் எப்படித்தான் அடங்கி இருக்கின்றனவோ?' என்று கேட்டானும். அதற்குள் நந்தனுர்

வித்துக்குள் விருட்சம்
அடங்கிய வாறுபோல்
சத்துக்குள் அண்ட
சராசரம் மைந்தா!

என்று பதில் சொன்னுராம். 'ஸத்' என்ற உண்மைப்பொருள் எங்கும் தங்கியிருக்கிறது என்று சொன்னுல் கூட, 'சிறுபொருள்களும் மனித இதயமும் பரம்பொருளை எப்படிப் பொறுத்துத் தாங்க முடியும்?' என்ற சந்தேகம் ஏற்படக்கூடும். ஆகவே நந்தனுர் அந்த மெய்ப்பொருளுக்கும் எல்லாம் அடங்கிக் கிடக்கிறதென்று சொல்லிக் கவலைபோக்கி ஆறுதல் அளிக்கிருர்,

இப்படியெல்லாம் உபதேசம் செய்த நந்தனுரைச் சீடர்கள் கண்குளிர நோக்கி,

சீலமுள்ள நல்ல செய்தி
சொன்னுயே—உந்தன்
காலுக்குக் கும்பிடு.

என்று தங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிருர்கள்.

இப்படி நந்தனுர் சேரியில் தமது கொள்கையை விதைத்து உயர்தர விவசாயம் செய்வதாகவும், அந்த விவசாயம் வீணுகவில்லையென்று கண்டு மகிழ்வதாகவும் காட்டுவது சரித்திரக் கீர்த்தனையின் சிறப்பியல்புகளில் ஒன்ருகும்.

சேரித்தெய்வங்களையும், பூஜை போடும் பயபக்தியையும் நோக்கினுல், சேரியில் பக்தி வெள்ளம் இல்லையென்று சொல்ல முடியுமா? ஆனுல் திருப்புன்கூரில் 'மட்டை ஊறும் குட்டை'யைக் குளமாகச் செய்த நந்தனுர் சேரியிலும் மூட பக்திக் குட்டையை நல்ல பக்திக் குளமாக வெட்ட விரும்பினுரென்பது கீர்த்தனை ஆசிரியரின் கவியுள்ளம்.



விமலா

எல். வி. எஸ். மணியன்

விமலா தான் கட்டிய மூட்டைகளை அவிழ்த்தாள். டிரங்குகளை இருந்த இடத்திலேயே வைத்தாள். சோப்பு சீப்பு கண்ணாடி முதலியவைகளை முன்னிருந்தபடியே வைத்துவிட்டு ஒன்றுமே நடக்காததுபோல செய்துவிட்டாள் மறுநாள் பொழுது விடிந்ததிலிருந்து. முதல் நாள் ஒன்றுமே நடக்காததுபோல, நடிக்க ஆரம்பித்தாள்.

நாடகமா, சினிமாவா நடிக்க? எத்தனை நாள் நடிப்பது, விளையாட்டுப்போல ஒருவாரமாய் விட்டது கூலிக்கு நடிக்கும் நடிகைக்குக்கூட ஒரே நாடகத்தை சேர்ந்தாற்போல பத்து நாள் நடித்தால் சப்பென்று போய்விடுகிறது! விமலாவால் நடிக்க முடியுமா? "பேசாமடந்தை" போல எவ்வளவு நாளிருப்பது? சந்திரநாதன்மேல் என்ன குற்றம்? கண் காணாமல் தொலைந்து போங்கள் என்று கூப்பாடு போட்டவள் இவளல்லவோ? அப்படியிருந்தும் "பேசுவோமா? பேசுவோமா?" என்று அவன் வருவதையும், மறுபடியும் மனதைக் கட்டுப்படுத்திக்கொண்டு வாயை அடக்கிக்கொண்டு போவதையும் இவள் பார்க்கவில்லையா! ஏதாவது பேசினால் 'வள்' என்று விழுவாளோ என்று நாதன் ஒதுங்கி, ஒதுங்கிப்போகிறான்.

என்னயிருந்தாலும் அவன் ஆண்பிள்ளைதானே? கொஞ்சமாவது 'ரோஷம்' இல்லாமலா போய்விடும்? பெண்தானே இவள். சிறிது தணிந்து கொடுத்துப்போய் பேசினால் என்ன குடி முழுகிப் போய்விடும்? "பத்திரகாளி"யாய் தன் சுய ரூபத்தைக் காட்டினது இவளல்லவா? தப்பு இவள்மேல்தான் அதிகம் எழுபத்தைந்து சதவிகிதம்! ஏன்? தொண்ணூறு சதவிகிதம் கூட தவறு இவளதே! என்று விமலாவின் மனம் இடித்துக் காட்டியது

வளைந்த மூங்கில் பல்லக்கு ஆகி அரசனையோ, ஆண்டவனையோ சுமந்து பெருமையடைய வளையாது, வணங்காது நிற்கும்மூங்கில் கூத்தாடியுடன்தான் வாழ வேண்டியிருக்கிறது பார்த்தாயா? அதுபோல பெண்ணான நீ தணிந்து போவதால் குறைந்து ஒன்றும் போய்விடமாட்டாய். குன்றா விளக்காகத்தான் திகழ்வாய். சுய மரியாதை, கௌரவம், மண்ணாங்கட்டி, தெருவுப் புழுதி, என்று பிதற்றிக் கொண்டு, பிடிவாதமாய் இருந்தாயானால் பின்னால் நீ கட்டாயம வருந்துவாய் என்று அவள் உள்ளம் உடைத்துச் சொல்லிற்று.

தன் தப்பு தெரிந்ததும் இருப்புக்கொள்ளவில்லை விமலாவிற்கு மணி நாலுதான ஆகியிருந்தது குழாயடிக்குப் போய் முகத்தை பரபரவென்று அலம்பிக்கொண்டாள் தலையை வாரி, நாதனுக்கு மிகவும் பிடிக்த இரட்டைப் பின்னலை பின்னிக்கொண்டு, ஒரு கால் பின்னலை முன்னாடி எடுத்துவிட்டுக்கொண்டு, புகைக்கண்ணாடியையும் "ஜம்" என்று எடுத்துப் போட்டுக்கொண்டு ரிக்ஷாவைக் கொண்டுவரச் சொன்னாள். ரேஸ் ஸுக்குக் கிளம்பும் சினிமா ஸ்டார் போல 'ஜில்' லென்று காட்சிகொடுத்தாள் விமலா அப்போது இவள் வெளியில் கிளம்ப ஆயத்தம் செய்வதைப்பார்த்து பால்காரன் வந்ததும் காப்பி கலந்துகொடுத்து விடுகிறேன் என்று தங்கம்மாள் சொன்னதையும், காதில் வாங்கிக்கொள்ளாமல், ரிக்ஷாவில் ஏறிக்கொண்டு சீக்கிரமாக ஐயாவின் கண் ஆஸ்பத்திரிக்குப போகும்படி கோவிந்தனை விரட்டினாள். என்றுமில்லாத 'அம்மா'வின் படபடப்பையும், உத்திரவையும் பார்த்து ஒன்றும் தோன்றாமல் கோவிந்தன் 'ரிக்ஷா' இழுத்துக்கொண்டு ஓடினான்! பறந்தான் வந்து நின்றது ஆஸ்பத்திரி வாசலில் ரிக்ஷா.

"ஆபீஸ் ரூம்" "டிஸ்பென்ஸரி" "ஸ்பெஷல்வார்ட்" "ஜெனரல் வார்ட்" முதலிய இடங்களில் தேடிவிட்டு "லெபரெட்டரி"யில் சந்திரனைப்பார்த்தாள் விமலா. "சட்டைக்காரி"யோடு அவன் பேசிக்கொண்டிருந்தான். அவன் முகத்தில் தாண்டவமாடும் ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை! அந்த சிறுக்கியும அவன் பக்கத்தில், இடித்துக் கொள்ளாதது அணைத்துக் கொள்ளாதது ஒன்றுதான். அவ்வளவு அருகில் நின்று சிரித்து சிரித்துப் பேசி அவனை மயக்கிக் கொண்டிருந்தாள?

"இன்றுதான் என் வாழ்விலேயே சுதினம்" என்று சந்திரன் சொன்னான்

"ஆமாம்! ஆமாம்! அந்தக் கள்ளி பல்லைக் காட்டிக்கொண்டிருக்கும் நாளெல்லாம் சுதினம் தான் உங்களுக்கு" என்று உறுமினாள் மறைவிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த விமலா.

"மேடம் குர்ரி' என்ற படத்திற்குப் போகலாமென்று பார்க்கிறேன் அவசர காரியமொன்றுமில்லாவிட்டால். நீங்களும் வாருங்களேன் ஜாலியாக போய் விட்டு வருவோம்."

"எனக்கும் ரொம்ப நாளாகப் போகவேண்டுமென்று. இன்றைக்குத்தானே "லெபரெட்டரி"யில் வேலை முடிந்தது. இனி இப்போதைக்கு அவசர ஜோலியில்லை,

போவோம்'' என்று கிளம்பினுள் சட்டைக்காரி.

"இது எவ்வளவு நாளாக? இந்த சினிமா போகும் பழக்கம்? நாலு பேர் கூடும் இடங்களுக்குக்கூட வெட்கமில்லாமல் "ஜாலி''யாக "ஜோடி''யாகக் கிளம்ப ஆரம்பித்துவிட்டாப்போல இருக்கிறது. "பேஷ்தான்!'' என்று எண்ணிய விமலாவிற்கு துக்கம் துக்கமாக அடைத்துக்கொண்டு வந்தது. தலை 'கிர்' என்று சுற்றியது கீழே விழாமல் இருப்பதற்காக சுவரைப் பிடித்துக்கொண்டாள், அவள் கையிலிருந்த புகைக் கண்ணுடி நழுவிக் கீழே விழுந்தது

"அந்த சீசாவை எங்கே வைத்திருக்கிறீர்கள்? அதை ஜாக்கிரதையாக வைக்கவேண்டும். அதற்கும் 'ஜகந்நாத தைலத்''திற்கும் வித்தியாசம் தெரியாது கம்பௌண்டர் ஜகநாத தைலத்திற்குப் பதிலாக இதை எடுத்துக் கொடுத்துவிட்டால ஆபத்து. கண பார்வை போய்விடும் என்னுல் கூட குணமாக்க முடியாது,'' என்ருன் சந்திரநாதன்.

சட்டைக்காரி உடனே ஒரு மருந்து சீசாவை எடுத்து 'இதோ பார்த்தீர்களா? இங்கே வைக்கிறேன். நீங்கள் காலையில் வீட்டில் கொண்டுபோய் இதை வைத்து விடுங்கள். இங்கு இருக்க வேண்டாம்'' என்று சொன்னுள். பிறகு நாதனும், அவளும் சென்று விட்டார்கள்.

கணப்போது, அவர்கள் சென்ற திக்கையே பார்த்துக் கொண்டிருந்தாள். விமலா தேங்கி நின்ற கண்ணீரில் ஒரு சொட்டு வழிந்தோடியது அவள் முகத்தில். "நான் இருக்கவேண்டிய ஸ்தானத்தில் இன்று அந்த அமெரிக்காக்காரி! ஊம்! பழைய நாதனு இது? சிரித்துக் குலாவிக்கொண்டு, வெட்கம், அச்சமில்லாமல் செல்கிருனே! என் பெண்மையைப் பார்த்து, தான் படைத்த பெண்ணைக் கண்டே மயங்கிய பிரம்மனைப் போல, தான் திறந்துவைத்த என் கண்களைக் கண்டு பூரித்துப் போன அந்த ஆண்மகனு, நாணம், மானம் ஒன்றுமில்லாத ஒருஜாதிககாரியோடு செல்கிருன்? முன்னைப் போலவே நான் குருடியாய் இருந்திருககக்கூடாது? இந்தத் துரோகச் செயல்களையெலலாம் கண்ணுல் பார்க்காமல் நிம்மதியாயிருந்திருக்கலாம். கண் பார்வையைப் பெற்றுவிடடதாலல்லவோ, இத்துரோகிகளின், நன்றிகெட்ட செய்கையைப் பார்க்க நேரிடுகிறது? இந்தப் பாழாய்ப் போன உலகிலே கண் தெரியாமல் இருப்பதே பல காரணங்களுககுநல்லது. அக்கிரமும், அநீதியும், வஞ்சகமும், துரோகமும், மலிந்து கிடக்கும் இக்கபோதி உலகத்தில்கபோதியாக இருப்பதுதான் சால சிறந்தது. கண் நன்ருகத் தெரிவதால்தானே 'தகாத' அடாத செய்கைகள் கண்களில் படுகின்றன. நாம் மனம் புழுங்கவேண்டி வருகிறது'' என்று பலவாருக சுவரில் சாய்ந்த வண்ணம் சிந்தித்துக்கொண்டிருந்தவள்''... .... கண் பார்வை போய்விடும். என்னுல் கூட குணமாக்க முடியாது'' என்று நாதன் சொன்னதும், அந்த வெள்ளைக்காரி அந்த மருந்து சீசாவை வைத்த இடமும மனத்திரையில் தோன்றி நின்றன. உடனே முடிவுக்கு வந்தாள்.

"மூன்று வருடமாக கண் பார்வையைப் பெற்றிருந்து, அதனுல் அடைந்த சுகம் போதும், இந்த ஜன்மம் முழுவதும் போதும். கண்டதே காட்சி கொண்டதே கோலம்'' என்று நினைத்ததெல்லாம், வாழ்நாளெல்லாம் மறக்காது அவைகளை எண்ணி எண்ணி சந்தோஷப்பட்டுக் கொண்டிருநதாலே குறைநாளையும் கழித்துவிட லாம்! என்று தீர்மானித்து, சற்றும் தயங்காமல் விடு விடு என்று "லெபரட்டரி'' உள்ளே நுழைந்தாள். அந்த 'பாட்டில்'லை எடுத்து, இரு கண்களிலும், ஒன்று மாற்றி, ஒன்றில், அதிலிருந்த மருந்தை கவிழ்த்துக் கொண்டாள். அரைவினுடியில் உலகம் இருண்டு விட்டது விமலாவிற்கு. நிரந்தரமாக அந்தகாரம் அவளைச் சூழ்ந்து கொண்டது.

சீசாக்கள் உருளும் சப்தம் கேட்டு 'நர்ஸ்' 'ராமன்' ஓடி வந்தான் உருண்டுவிழுந்த சீசாக்களை விட 'விமலா'வை அங்கே கண்டது அவனைத் தூக்கிப் போட்டது' தடவிககொண்டே விமலா தட்டுத் தடுமாறிக்கொண்டிருந்தது அவனுக்கு திகைப்பைக் கொடுத்தது.

"உங்களுக்கு என்ன அம்மா? ஏன் இப்படி தடுமாறுகிறீர்கள்? இங்கே எப்போது வந்தீர்கள்? என்ன நேர்ந்தது? என்று என்னென்னமோ கேட்டான் ராமன்.

"ராமன்தானே நீ? நான் "குருடி'' இப்போது ராமா?

"குருடியா?''

"ஆமாம்! ராமா! நித்தியக் 'குருடி'' "நிரந்தரக்குருடி''!

எப்போதுமே குருடி நான் இனி மேல்!''

"ஐயோ! எனனம்மா சொல்கிறீர்கள்? எனக்கு ஒன்றுமே புரியவில்லையே!''

"உனக்கு ஒன்றும் புரியாது! இது நயவஞ்சகக்காரர்கள் நிறைந்த உலகம் ராமா! உன் எஜமானரைப் போய்க்கேள்! உண்மை தெரியவரும். போ! சீக்கிரம் ஓடு! அவர் சந்தோஷத்தால் துள்ளிக் குதிப்பார்! 'மேடம் குர்ரி'க்கு போயிருக்கார். அந்த 'மினுக்குக் காரி'யோடு! போ! ஓடு! சீக்கிரம் அவரிடம் சொல்'' என்று விமலா ஒரு பேய்ச் சிரிப்பு சிரித்தாள்.

ராமனுக்கு ஒன்றுமே ஓடவில்லை. லெபரட்டரிக் கதவை இழுத்துத்தாளிட்டுக்கொண்டு சைக்கிளில் 'எலிபின்ஸ்டன்' தியேட்டருக்கு காற்றினும் வேகமாகச் சென்றான். அப்போதுதான் துவங்கியிருந்தது காட்சி. சைக்கிளை ஸ்டாண்டில் கூட வைக்கத் தோன்றவில்லை. ராமனுக்கு! 'டக்' என்று அப்படியே போட்டுவிட்டு 'டாக்டர்' 'டாக்டர்' என்று உரக்கக் கூப்பிட்டுக்கொண்டு முதல் வகுப்பு இருந்த பக்கம் ஓடினான் ராமன.

"நம் ராமன் குரல்போலிருக்கிறதே என்று சந்திரநாதன் உள்ளே இருந்து வெளியே வந்தான்

"அம்மா கண் போய்விட்டது டாக்டர்!'' என்று அலறவே அலறினான் ராமன்.

"பதட்டமில்லாமல் சொல் ராமா. எந்த அம்மா கண்? எப்படிப்போயிற்று.

"எஜமானி அம்மா கண் டாக்டர்!''

"விமலாவின் கண்களா?''

"ஆமாம் டாக்டர்''

சந்திரநாதனுக்கு விஷயம் ஒன்றும் விளங்கவில்லை அவன் வெளியே வந்ததும், பின்னாலேயே எழுந்துவந்த "சட்டைக்காரி'' யோடும் ராமனோடும் ஆஸ்பத்திரிக்குக் காரில் வந்தான்.

விமலாவை, "லெபரெட்டரி'' யில் பார்த்ததும் கீழே, அந்த சீசா கிடப்பதையும் கண்டதும், எல்லாம் விளங்கிவிட்டது சந்திரநாதனுக்கு.



"ஐயோ! என்ன காரியம் செய்தாய் விமலா?'' என்று அவளைக் கட்டிக்கொண்டான்.

"உங்கள் நன்மைக்குத்தான் செய்தேன் நீங்கள் கொடுத்த பார்வையே உங்களுக்கு இடைஞ்சலாக இருப்பானேன்? அவைகள் இருந்ததால்தான் உங்கள் நடத்தையை நேரில் காணமுடிந்தது. பொறுமைக்கும் துவேஷத்திற்கும் ஏதுவாக அந்தப் பார்வையை வைத்துக்கொண்டிருப்பானேன் என்றுதான் போக்கிக் கொண்டுவிட்டேன்.''

"விமல்! புதிர் போடாமல் விளக்கமாகச் சொல்'' என்றான் சந்திரநாதன்.

"புதிர் என்ன புதிர்?'' என்று அவள் அங்கு வந்தது முதல் விளக்கமாக எல்லாவற்றையும் கூறிவிட்டு "தீட்டிய மரத்திலேயே கூர்மை பார்க்க முற்பட்டது இத்துரோகிக் கண்கள், கண்களைத் திறந்தவர் என் "தெய்வம்'' அவருக்கே உன்னை "அர்ப்பணம்'' செய்துவிடுகிறேன்' என்று என் பார்வையை அர்ப்பணித்துவிட்டேன்.

"இல்லை விமலா! நன்றாக யோசித்து சந்தேகத்தை ஆற அமர கேட்டு தெளிவாகத்தெரிந்து நிவர்த்தி செய்துகொள்ளாமல்,

உன் வீண் பொருமைக்கும், துவேஷத்திற்கும் ஆத்திரத்திற்கும், அகங்காரத்திற்கும் உன் பார்வையை வீணுக 'பலி' ஆமாம் 'பலி' கொடுத்துவிட்டாய். இந்த மாதரசி உன் சந்தேகத்திற்கும், பொருமைக்கும், துவேஷத்திற்கும் காரணமான இந்த ஸ்திரீ, யார் தெரியுமா?'' ஆயுர்வேத சிகிச்சையில் ஆர்வங்கொண்ட ஒரு அமெரிக்க வைத்திய நிபுணர் "ஹென்றி'' என்பவர் நம் நாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்து வருகிருர் என்று சொன்னேனே அவரின் மனைவி இவர்.''செவிடு''க்காக புதிய மருந்தைக் கண்டு பிடிக்க நான் பரிசோதனைகள் செய்து வந்தது உனக்கு ஞாபகம் இருக்குமே நீயும் கர்ப்பவதியாய் "சோதனை, சாலை''க்கு வர முடியாமலிருந்தாய். இரண்டு மாதத்திற்கு முன் தன் கணவருடன் நம் 'ஆஸ்பத்திரிககு விஜயம் செய்த இவர்; இவரும ஒரு டாக்டர் தான்; காது செவிடுக்காக நான் செய்துவரும் சோதனைகளில் அதிக ஆர்வம் காட்டினுர். எனக்கும் உதவியாக இருந்து கொண்டு தானும் சோதனைகளில் கலந்துகொள்ள விரும்பினுர் இவர் கணவர் அதற்கு அனுமதி கொடுத்தார். இராப்பகலாக, எனக்கு உதவி செய்து வந்ததால் அந்த சோதனை ஒரு வாரத்திற்கு முன் தான் முடிவடைந்தது. இன்று தான் கடைசியாக செய்ய வேண்டிய சோதனையை செய்து முடித்தோம். இரண்டு மாதமாக இவரை நம் வீட்டிற்கு அழைத்து வந்து, உன்னுடன் சிநேகம் செய்து வைக்க வேண்டுமென்று நினைத்தேன். உன் கோபமும், அகங்காரமும் என்னை இவரை அழைத்து வரமுடியாமல் செய்துவிட்டன. ஒவ்வொரு நாளும் நமக்குள் சமாதானம் ஏற்பட்டுவிடும், முன் போல சௌஜன்யமாக இருப்போம், இவரைக் கூட்டிவந்து உனக்கு அறிமுகம் செய்து வைக்கலாம் என்று எண்ணினேன். அதற்கு நீ இடம் கொடுக்கவே யில்லை.

அதே 'செவிடு' நீக்கும் மருந்து கண்களில் பட்டால் 'பார்வை' போய்விடுகிறது! ஐந்து நிமிஷங்களுக்குமேல் கண்களில் மருந்து இருந்தால் நிரந்தரமாகப் பார்வை சூன்யமாகிவிடுகிறது என்று சோதனைகளில் தெரிய வந்தது. அந்த மருந்தை நீ கண்களில் கவிழ்த்துக்கொண்டு இருக்கிருய்' என்று விளக்கினுன் சந்திரநாதன்.

"நான் செய்த பாக்கியம் அவ்வளவு தான். கண்களால் காண்பது பொய். தீர விசாரிப்பது மெய்! என்பது என் விஷயத்தில்உண்மையாயிற்று. "பெண் புத்தி பின் புத்தி' அல்லவா! என் கண்களே எனக்கு என் சுக வாழ்விற்கு சத்துருக்களாயின'

"ஐந்து நிமிஷங்களுக்கு மேல் சென்ருல் இம்மருந்துக்கு மாற்றே யில்லை விமல். நான் என்ன செய்வேன்''



முதல் பால்கார்:-"குழாத் தண்ணிப்பஞ்சத்திலே அவர் கொஞ்சம்கூட கவலைப்படறதா தெரியலே!''

2-வது பால்கார்:—அவர் வூட்லேதான் "பஸ்ட் கிளாஸ்'' கிணறு இருக்குதே அண்ணே! என்னாத்துக்கு கவலைப்படணும்''

''மருந்துக்கு மாற்று இருந்தது. ஆனுல் விதிக்கு மாற்று ஏது? என் விதி 'குருடியாக வேண்டுமென்று இருக்கும்போது உங்களால் அதைத் தடுத்துவிட முடியுமா?''

நடந்தது ஒன்றும் புரியாமல் நின்றுகொண்டிருந்த பெட்டி ஹென்றிக்கு ஆங்கிலத்தில் நிகழ்ந்ததை எல்லாம் விளக்கிக்கூறினுன் சந்திரநாதன். பெட்டி. விமல் கண்களை இழக்க, தான் காரணமானதற்காக வருந்தினுன்.

''நீங்கள் ஏன் வருந்துகிறீர்கள்? என்னுலேயே நாள் கெட்டேன். என் கண்கள் போனுல் என்ன? என் பதியின் கண்களிருக்கின்றன நான் உலகைக் காண!''

மிஸஸ் ஹென்றி சொன்னுள்: "பாரத தேசம மாபெரும் புண்ணிய தேசம் எனபதை நான் நேரில் இப்பொழுதுபார்க்கிறேன். பாருங்கள் நாதன்! உங்கள் பத்னியை! உலகில் கண்கள் பெரிதல்ல. கணவன்தான் பிரதானம்' என்று விளக்கிவிட்டார். எங்கள் தேசத்திலும் சரி, வேறு எந்த மேல் நாடானுலும சரி ஒரு பெண்ணும் இப்படி நடந்துகொள்ள மாட்டாள். தியாகம் செய்ய முன் வரமாட்டாள் கோர்ட்டில் "விவாகரத்து'' பெற்றுக்கொண்டு விடுவாள். 'புத்தன்' 'மகான் காந்தி' முதலியவர்கள் உங்கள் புண்ய பூமியில் ஸ்திரீ ரத்தினங்கள், நாட்டிற்கு திலகங்களாய் திகழ்வதில் வியப்பொன்றுமில்லை. நீங்கள் நிரம்பவும் பாக்கிய சாலி. இப்பெண்ணரசியை இல்லாளாகப் பெற்றிருப்பதில்'' என்ருள் உருக்கமாக.

சந்திரநாதன் தோள்களில் தலையை சாய்த்துக் கொண்டு இருந்த விமலாவின் இதழ்களில் இலேசான புன்னகை தவழ்ந்தது.

குற்றவாளி

தில்லைவாசி



தை மாதம் அறுவடைக் காலம் வயற்புறத்தில் வேலை செய்துகொண்டிருந்தவர்கள் மத்தியான சாப்பாட்டிற்காக வேலை நிறுத்தியிருந்த நேரம்.

ரங்கசாமி களத்து மேட்டிலிருந்த மரத்தடியில் உட்கார்ந்து வழியைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

மத்தியானம் ஒரு மணியாகியும் அவன் மகள் அஞ்சலை இன்னும் கஞ்சி கொண்டு வராமலிருந்தாள். பசியோ அவன் வயிற்றைக் கிள்ளிற்று. வேலை விட்டுப் போனவர்கள் கூட கஞ்சி குடித்து விட்டுத் திரும்பியிருந்தார்கள்.

அப்பொழுதுதான் அஞ்சலை அவனுக்குக் கஞ்சி கொண்டு வந்தாள். ரங்கசாமியும் அஞ்சலையைப் பார்த்து "ஏனம்மா! இன்னிக்கி இவ்வளவு நாழி?" என்று மிகவும் செல்லமாய்க் கேட்டான்

"விறகு ஒரே ஈரம். அடுப்பை ஊதி ஊதி கண் எரிச்சல் கண்டு விட்டது இப்போதான் சமையல் ஆச்சு. அரக்கப்பரக்க எடுத்துகிட்டு ஓடியாறேன்" என்று அஞ்சலை கூறி தகப்பனுக்குக் கொண்டு வந்த கஞ்சியை எடுத்துக் கொடுத்தாள்.

ரங்கசாமியும் அவசரம் அவசரமாய்க் கஞ்சியைக் குடித்து விட்டு வேலையைப் பார்க்க வயற்புறத்தில் இறங்கினான். அஞ்சலையும் வீட்டுக்குத் திரும்பினாள்.

* * * * *

அஞ்சலைத் தாயற்றப் பெண். அவள் பத்து வயது சிறுமியாயிருக்கும்போது அவள் தாய் வைசூரி கண்டு இறந்து போனாள். அவளுக்குப் பிறகு ரங்கசாமி வேறு கல்யாணமே செய்து கொள்ளவில்லை. அவன் மறு கல்யாணம் செய்து கொள்ளாமல் இருந்துவிட்டதற்கு, அவன் அஞ்சலைமீது வைத்திருந்த அபாரமான வாஞ்சைதான் காரணம். தனக்கு வரும் இரண்டாவது பெண்சாதி அஞ்சலையை இல்லாத கொடுமையெல்லாம் படுத்தி விடுவாள் என்ற எண்ணந்தான் அவனை மறு விவாகம் செய்து கொள்ளாமல் தடுத்துவிட்டது.

ரங்கசாமிக்கு ஒரு காணி நன்செய் நிலமும், வசிப்பதற்கு சொந்தமாக இருந்த மனையுந்தான் ஆஸ்தி தனக்கிருந்த சொத்திலேயே அவன் திருப்தியடைந்தான். நிலத்தில் தானே நன்றாக உழைத்து, அதை நன்றாகச் சீர்படுத்தியிருந்தான் வருஷத்தில் அந்த நிலத்திலிருந்து நாற்பது ஐம்பது கலம் நெல் தன்னாலேயே விளைந்துவிடும்.

தன் மகளுக்கு நல்ல கணவனைப் பார்த்து கல்யாணம் செய்து கொடுத்து. மகளையும், மருமகனையும். தன் வீட்டோடேயே வைத்துக் கொள்ள வேண்டுமென்று ரங்கசாமிக்கு நீண்ட நாளைய ஆசை.

இந்த ஆசையைத் தூண்டுவதற்கேற்ப, அஞ்சலையும் பெரியவளாகி நாலைந்து வருஷங்களாகியிருந்தன. அவள் பருவ மங்கையாகி வீட்டில் காட்சியளித்துக்கொண்டிருந்தது, அவன் கவலையைக் கிளப்பிவிடும். தன் மனதிற்குப் பிடித்த மருமகன் வந்து வாய்க்க வேண்டுமே என்ற யோசனையில் ரங்கசாமி சிற்சில சமயத்தில் அப்படியே ஆழ்ந்து விடுவான்.

ரங்கசாமியைப்போல் அஞ்சலைக்கும். தகப்பனை விட்டு வெளியூரில் போய் புருஷனுடன் குடித்தனம் செய்வதில் இஷ்டமில்லை "தகப்பன் ஆயுட்காலம் பூராவும் அவனுடன் கூடவே இருந்துவிட வேண்டும். அதற்குத் தகுந்தாற்போல் தனக்குக் கணவன் கிடைத்து தன் வீட்டோடேயே இருந்துவிட்டால் நல்லது" என்று அவளும்தான் நினைத்துக் கொண்டிருந்தாள்.

* * * *

அன்று இராத்திரி அஞ்சலை அடுப்பங்கரையில் சமையல் செய்து கொண்டிருந்தாள் வெளியில் தன் தகப்பனுடன் யாரோ ஒரு ஆண்

பேசிக்கொண்டிருப்பது அவள் காதில் விழுந்தது. அந்த ஆணின் குரல் இதுவரையில் கேட்டுப் பழக்கமில்லாதது.

அஞ்சலை வெளியே வந்து பார்த்தாள். அவள் தகப்பனுடன் ஒரு வாலிபன் பேசிக்கொண்டிருந்தான். அவனுக்கு வயது இருபத்தேழு இருபத்தெட்டிருக்கும் நல்ல கட்டான தேகம். மாநிறம். உழைத்து உரமேறிய உடல். அவனைப்பார்த்ததுமே அஞ்சலைக்கு ஆச்சரியமாகிவிட்டது "யார் இந்தப் புது ஆசாமி? தன் தகப்பனுடன் பேசிக்கொண்டிருக்க காரணம் என்ன?" என்று நினைத்தவளாய் மீண்டும் சமையல் வேலையைப் பார்க்க உள்ளே போனாள்.

வெளித் திண்ணையில் அவர்களிருவரும் ஏதேதோ பேசிக்கொண்டது அவள் காதில் வந்து விழுந்துகொண்டேயிருந்தது. தகப்பன் தனியாக வந்ததும், அவனைப்பற்றி விசாரித்து தெரிந்துகொள்ளவேண்டும் என்று ஆவலோடு காத்துக்கொண்டிருந்தாள்.

கொஞ்ச நாழி கழித்ததும், ரங்கசாமியே அடுப்பங்கரைக்கு வந்துவிட்டான்

அவள் அவனைக் கேட்பதற்கு முன் அவனே பேச ஆரம்பித்தான்

"அஞ்சலை! நம்ம வீட்டிற்கு ஒரு விருந்தாளி வந்திருக்கிறது. சாப்பாடு தயார் ஆகிவிட்டதா? அவன் யாரோ வெளியூராம் பெயர் கந்தன் என்று சொல்லுகிறான் தாய் தகப்பன் வேறு யாரும் சொந்த ஜனங்கள் இல்லையாம். கல்யாணம்கூட இன்னும் அவனுக்கு ஆகவில்லையாம் சாதியும் நம்ம சாதி என்றுதான் சொல்லுகிறான் வேலை செய்து பிழைக்கலாம் என்று இந்த ஊருக்கு வந்திருக்கிறான் இன்று சாயந்திரம் என் கண்ணில் பட்டான் ஆள் நல்லவனாகக் காணப்படுகிறான் எனக்கும் வயசு தள்ளாமையாய்ப் போய் விட்டது. இவனை வைத்துக் கொண்டால் கூடமாட இருந்து வேலை செய்வான். அவனுக்கு சாப்பாடு போட்டு நம்ம வீட்டோடேயேவைத்துக் கொள்ளலாம் என்று பார்க்கிறேன்" என்று ரங்கசாமி பேசிக் கொண்டேபோனான்

கந்தனின் விருத்தாந்தத்தைப் பற்றியறிந்ததும், ரங்கசாமி, தன் மகளுக்கு ஏற்ற புருஷன் கந்தன் தான் என்று நினைக்க ஆரம்பித்து விட்டான் கந்தன் இழுத்த இழுப்பிற்கு வருவான் என்றும் அவனுக்குப் பட்டது கந்தன் சம்மதித்தால், அஞ்சலையை அவனுக்குக் கட்டிக் கொடுத்து தன் வீட்டோடேயே வைத்து. தன் ஒரு காணி நிலத்தையும், வீட்டையும், மகளுக்கும் மருமகனுக்கும் உரிமை செய்து கொடுத்துவிடலாம் என்று அவன் மனம் எண்ணிற்று அந்த எண்ணத்தோடுதான் அவன் கந்தனைத் தன்னிடம் வேலையில் வைத்துக் கொள்வதற்கும், தன் வீட்டிலேயே அவனுக்குச் சாப்பாடு போடுவதற்கும் சம்மதித்தான்

ஒரு வருஷ காலம் கந்தன் தன்னுடனேயே யிருந்ததால், அவனுடைய யோக்கியதாம்சங்களைத் தெரிந்து அதற்குப் பிறகு அஞ்சலை கல்யாண விஷயமாக யோசனை செய்து கொள்ளலாம் என்று ரங்கசாமி எண்ணினான்

அஞ்சலைக்கும், கந்தனை முதன் முதலில் பாாத்ததுமே, மனதில் ஏதோ ஒருவிதக் கிளர்ச்சி உண்டாயிற்று அவன் தன் ஜாதிக்காரன் என்றும், யாருமற்ற அநாதையென்றும் கேள்விப்பட்டதே, கந்தன் தனக்கேற்றக் கணவன்தான் என்று அவளும் முடிவு கட்டிவிட்டான்.

அவனைக் கல்யாணம் செய்து கொண்டால், தன் வீட்டோடேயேயிருந்து விடுவான் என்றும் தள்ளாமை மிகுந்த தகப்பனைத்தான் பிரியும்படி நேரிடாது என்றும் எண்ணி மகிழ்ச்சியடைந்தாள். "மாரியாத்தாளைத்தான் தினந்தோறும் பிரார்த்தனை செய்தது வீணாகவில்லை. கந்தனைத் தனக்கு மணாளனாக மாரியாத்தாளே அனுப்பியிருக்கிறாள்" என்று எண்ணி, தினமும் மாரியாத்தாள் கோயிலுக்குப் போய் அதிக நேரமிருந்து பிரார்த்தனை செய்துவிட்டு திரும்பி வந்துகொண்டிருந்தாள்.

அஞ்சலை நிறத்தில் கறுப்பாயிருந்தாலும், அழகில் குறைந்தவளில்லை

பருவ காலத்தின் எழில் அவள் முகத்திற்கு வசீகரத்தைக் கொடுத்திருந்தது. அவளைக் கண்ணுறும் எந்த வாலிபனும், அவள் காதலைப் பெற ஏங்குவான் என்பது திண்ணம். வெளியூரிலிருந்து எத்தனையோ பேர்கள், ரங்கசாமியின் தூரத்து உறவினர்கள் அஞ்சலையைப் பெண் கேட்டுவிட்டுப் போயிருந்தார்கள் அவர்கள் எல்லோரும் கொஞ்சம் ஆஸ்தியுள்ளவர்கள். அவர்களில் யாருக்காவது ஒருவருக்கு அஞ்சலையைக் கொடுத்துவிட்டால், ரங்கசாமி, மகளையும், மருமகனையும் தன் வீட்டோடேயே வைத்துக்கொள்ள முடியாது. எனவே ரங்கசாமி ஒன்றும் பிடிகொடுத்துப் பதில் சொல்லாமல். யோசித்து சொல்லுகிறேன் என்று அந்தக் கல்யாணப் பேச்சைத் தள்ளிப் போட்டுக்கொண்டே வந்தான்.

* * * * *

கந்தன் ரங்கசாமியிடம் வேலைக்கமர்ந்து ஆறுமாதங்களேயாகியிருந்தன இந்தக் காலத்திற்குள் கந்தனுக்கு அஞ்சலை எத்தனையோ தடவைகளில், தனிமையில் சாதம் பரிமாறியிருக்கிறாள் அப்பொழுதெல்லாம் இருவர் கண்களும், மகிழ்ச்சியுடன் சந்தித்துக்கொண்டிருக்கின்றன

கந்தனும் எத்தனையோ தடவைகளில் அவளைப் பார்த்து "அஞ்சலை! என் அதிர்ஷ்டம்தான் உன் அப்பாவிடம் கொண்டுவந்துவேலைக்கமர்த்திவிட்டது வயிற்றுப்பாடைத் தீர்த்துக்கொண்டதுடன் கண் நிறைந்த உன்னையும் கண்டுவிட்டேன். உன்னை முதலில் பார்த்ததுமே, தேன் குடித்த வண்டு போல் மயங்கிவிட்டேன் என்னை இன்னும் யார் யாரோ நிறையச் சம்பளம் தருகிறேன் என்று கூப்பிடுகிறார்கள் உன்னை விட்டுவிட்டு நான் ஏன் போகப்போகிறேன்? என்னைக் கல்யாணம் செய்துகொள்ள உனக்குப் பிரியமிருக்கிறதா" என்று பேசியிருக்கிறான்

அவன் அப்படிக் கூறும்போதெல்லாம் அஞ்சலையும், மகுடியைக் கண்டு மயங்கும் நாகம்போல் சொக்கிப்போய்விடுவாள் அவளும் அவள் அப்பனும், எண்ணியிருந்தபடி, கண் நிறைந்த கணவனாக கந்தன் வந்திருக்கிறான் என்று எண்ணும்போது அவள் ஏன் மயங்கிவிடமாட்டாள்?

"என் அப்பன் என்மேல் உசிராயிருக்காரு எனக்கு விவரம்தெரிந்த நாள் முதற்கொண்டு என்னை யாருக்காவது கட்டிக்கொடுத்து வீட்டோடேயே வைத்துக்கொள்ளனும் என்று நினைச்சிருக்காரு. உன்னை என் அப்பனுக்குப் பிடித்துப்போச்சு, இல்லாவிட்டா உன்னை வீட்டில் சேர்த்திருக்கமாட்டார். சாப்பாடும் இங்கேயே போடச்சொல்லியிருக்கமாட்டார் நம்ம மனசும் பொருந்திப் போச்சு" என்று அஞ்சலையும் உள்ளம் உருக. அன்புடன் குழைந்து குழைந்து கந்தனிடம் பேசுவாள்

ரங்கசாமியும் கொஞ்சம் கொஞ்சமாக கந்தனிடம் தன் எண்ணத்தைச் சொல்லியிருந்தான் அதற்கு கந்தன் "சரி" என்றோ "வேண்டாம்" என்றோ ஒன்றும் பதில் சொல்லாமல் சும்மாயிருந்துவிடுவான்

. ரங்கசாமி ஒரு நாள் அஞ்சலையிடம் "கந்தன் நல்லவனாகயிருக்கிறான் அவனுக்கு உன்னைக் கட்டிக் கொடுத்து வைத்துக்கொள்ளலாம் என்று பார்க்கிறேன் உன் இஷ்டம் எப்படி?" என்று கேட்டான் அதற்கு அஞ்சலை "என் இஷ்டத்தில் என்ன அப்பா இருக்கு? நீங்கள் பார்த்து எந்த முடிவு செய்யறீங்களோ, எனக்கு அதில் இஷ்டம்தான். நீங்கள் எனக்குக் கெடுதலா தேடுவீங்க?" என்று தன் சம்மதத்தை சுற்றி வளைத்துத் தெரிவித்துவிட்டாள்.

இன்னும் மூன்று மாதங்களுக்குப் பிறகு, அஞ்சலைக்குக் கல்யாணத்தை முடித்து ஏற்பாடு செய்துவிடலாம் என்று ரங்கசாமி நாட்களை எண்ணிக் கொண்டிருந்தான்.

அபிற்குள்ளாகவே கந்தனின் மனப்பான்மை அஞ்சலைக்கு நன்கு தெரிந்துவிட்டது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★

களத்துமேட்டிலிருந்த தகப்பனுக்கு இரவுச்சாப்பாடு கொண்டு போய்க் கொடுத்துவிட்டு மாந்தோப்பு வழியாகத் திரும்பி வந்து கொண்டிருந்தாள் அஞ்சலை இரவு மணி எட்டிருக்கும்.

தோப்பில் யாரோ ஒரு பெண்ணும் ஆணும் பேசிக்கொண்டது காதில் விழுந்தது அஞ்சலை கூர்ந்து கவனித்தாள். குரலிலிருந்து அவர்



கள் கந்தனும், ஊர் நாட்டாண்மைக்காரர் மகள் வீராயியும் தான் என்பது அவனுக்கு விளங்கி விட்டது அப்படியே மறைவாயிருந்து, அவர்கள் என்ன தான் பேசுகிறார்கள் என்று கவனிக்கத் தொடங்கினான்.

கந்தனைப் பார்த்து வீராயி 'நீ என்னிடத்தில் பிரியமாயிருக்கிறாய் என்று எப்படி நான் நம்புவது? ஊர் பூராவும் நீ அஞ்சலையைக் கண்ணாலம் கட்டிக்கப் போறதாகப் பேசிக்கிறது. என்னிடத்தில் உனக்குப் பிரியமாயிருந்து, என்னையே கட்டிக்கிறதாயிருந்தால் பேசு, இல்லாட்டா கொஞ்சம் தள்ளியே இரு'' என்று மிகவும் கண்டிப்பாய்ப் பேசினாள்.

அதற்குக் கந்தனும் ''வீராயி! நீ என்ன அப்படி பேசிவிட்டாய்? உன்னை முதலில் பார்த்தது முதற்கொண்டு நீ தான் எனக்குப் பெண் சாதியாக ஆகவேண்டும் என்று கனவு கண்டு கொண்டிருக்கிறேன் நான் ஏன் அஞ்சலையைக் கட்டிக்கப் போகிறேன்? அவளும் அவள் மூஞ்சியும். அவளை உன் காலில்தான் கட்டியடிக்கவேண்டும். நான் எப்படியும் வெளியூர்க்காரன். ஏதோ ஊரில் காலை ஊன்ற அஞ்சலை அப்பனிடம் வேலைக்கமர்ந்தேன். உழைக்கிறேன். சாப்பாடு போடுகிறார்கள் அவ்வளவுதான் அஞ்சலையைக் கண்ணாலம் கட்டிக்கிறேன் என்று நான் ஒன்றும் சீட்டு எழுதிக்கொடுத்துவிடவில்லை. எல்லாம் என் இஷ்டத்தில் தான் இருக்கிறது'' என்று சொல்லி வந்ததை கேட்டுக்கொண்டுவந்த அஞ்சலைக்கு அப்படியே தலை வெடித்து விடும் போலிருந்தது. "நற நற'' வென்று பற்களைக்கடித்துக்கொண்டாள் அதற்குமேல் அவளால் அங்கேயிருக்கப்பிடிக்கவில்லை.

அன்றிரவு வழக்கம்போல் கந்தன் சாப்பிட வந்தான் இத்தனை நாட்களாக அன்போடும், ஆவலோடும் சாதம்போட்ட அஞ்சலைக்கு, அன்று அவனுக்கு சாப்பாடு போட ஒரே வெறுப்பாயிருந்தது. இவ்வளவு நாளாக கபட நாடகக்காரனிடம் அன்பு வைத்துக்கொண்டு இருந்து விட்டோம். என்பதை நினைக்க நினைக்க அவளுக்கே வெட்கமாயிருந்தது கந்தன் எப்படியாவது தன் வீட்டை விட்டுத் தொலைந்து போய்விட்டால் நல்லது என்று நினைத்தாள் நல்ல வேளை! அவன் வலையில் சிக்கி, மானத்தை இழக்காமல் இருந்தோமே என்பதை நினைக்கும்பொழுது அவள் உள்ளத்தில் மகிழ்ச்சி உண்டாயிற்று.

இரண்டு, மூன்று நாட்களுக்குப் பிறகு ஒரு நாளிரவு கந்தனே ரங்கசாமியிடம் தன் எண்ணத்தை வெளியிட்டான். "அண்ணே! நான் கண்ணாலம் செய்து கொள்ளப் போகிறேன்'' என்று கந்தன் சொன்னான். கந்தனின் உள் கருத்தை யறியாத ரங்கசாமி மிகவும் ஆவலுடன் "பெண் பார்த்துவிட்டாயா? யார் அது?'' என்று மிகவும் ஆவலோடு கேட்டான்.

"நாட்டாண்மைகாரர் மகள் வீராயி தான் நாட்டாமைக்காரரே பார்த்து தன் மகளை கண்ணாலம் செய்து கொள்ளணும் என்று சொல்லும் போது, ஊருக்குப் பெரிய மனிதர் அவர் வார்த்தையை நான் எப்படித் தட்டிப் பேசுவது? இன்னும் ஒரு மாசத்தில் முகூர்த்தம் நடந்துவிடும். இன்று முதல் என்னை அவர்கள் வீட்டில் சாபபிடச் சொல்கிறார்கள் நீங்கள் ஒன்றும் வித்தியாசமாக நினைக்கக் கூடாது நீங்கள் செய்த உதவியை மறக்கமாட்டேன்'' என்று கந்தன் கூறிக்கொண்டே போனான்.

ரங்கசாமி இதைக் கேட்டதும் இடிவிழுந்த நாகம்போலாகிவிட்டான் ''அட நன்றி கெட்டவனே! உன்னை இந்த ஊரில் சீர்படுத்தி வைத்த எனக்குத் துரோகம் நினைக்கிறாயே! நீ வாழ்வாயா?'' என்று அவன் மனதிற்குள்ளேயே சொல்லிக் கொண்டான்.

"சரி தம்பி! எல்லாம் தலை எழுத்துப்படி நடக்கும் நாட்டாமைக்காரர் வீட்டுக்கு நீ மருமகப்பிள்ளையாகப்போவது எங்களுக்கும் சந்தோஷம்தான்.'' என்று ரங்கசாமி மேலுக்குச் சொல்லி சும்மா இருந்து விட்டான். கந்தனும் ரங்கசாமியிடம் தன் கணக்கு வழக்குகளைத் தீர்த்துக் கொண்டு நாட்டாண்மைக்காரர் வீட்டுக்கே போய்ச் சேர்ந்தான்.

கந்தனை விட்டால் வேறு ஒருவன் அஞ்சலைக்குக் கிடைக்காமலா இருந்துவிடப் போகிறது என்று ரங்கசாமி தன் வேலையில் கவனத்தைச் செலுத்தினான் அஞ்சலையும் கபடக்காரனாகிய கந்தனின் மனைவி

இந்தியாவின் உதவிப் பிரதம மந்திரி ஸர்தார் படேலை சென்ற மாதம் 22-ந் தேதி ராஜாஜீ ஹாலில் நடந்த கூட்டத்துக்கு சென்னை கவர்னரும், சென்னைப் பிரதம மந்திரியும் அழைத்துச் சென்றபோது எடுத்த படம்.

யாகாமல், தன்னைக் கடவுள் காப்பாற்றி விட்டார் என்று எண்ணி கந்தனை மறந்தேவிட்டாள்.

ஒரு மாதத்திற்குப் பிறகு, நிச்சயம் செய்திருந்தபடி வீராயிக்கும் கந்தனுக்கும் கல்யாணம் நடந்தது. அதைத் தொடர்ந்து நடந்த நிகழ்ச்சிகள்தான் ஊராரை அதிசயத்தில் ஆழ்த்திவிட்டன.

கந்தனுக்கு முன்பே விவாகமாகி ஒரு மனைவியும், இரண்டு வயதில் ஒரு ஆண் குழந்தையும் இருப்பதாகத் தெரியவந்தது. அதை ஊர்ஜிதம் செய்வதற்கு, அவன் முதல் மனைவி, தன் குழந்தையுடன், அவனைத்தேடிக் கொண்டு நாட்டாண்மைக்காரர் வீட்டுக்கே வந்துவிட்டாள். அவளுக்குத் துணையாக அவருடைய அண்ணனும்கூட வந்திருந்தான்.

"போயும் போயும் நாட்டாண்மைக்காரர் இப்படியா ஒரு மருமகனைத் தேடிக்கொள்வார்?'' என்று ஊர் ஜனங்கள் பேசி ஆச்சரியப்பட்டுக்கொண்டிருக்கும்போது, மற்றுமொரு எதிர்பாராத நிகழ்ச்சி. அவர்கள் எல்லோரையும் தூக்கியடித்துவிட்டது.

கந்தனைக் கைதி செய்துகொண்டு போக ஒரு போலீஸ் லாரியே ஊருக்குள் வந்திருந்தது. "கொழும்பு சீமையில் தோட்டத்து கங்காணியுடன் ஏற்பட்ட சண்டையில் கங்காணியைக் கொலை செய்துவிட்டு வந்திருந்த கந்தனை, இப்பொழுதுதான் உளவு தெரிந்து கைது செய்து கொண்டு போக போலீசார் வந்திருக்கிறார்கள்'' என்ற விவரம் காட்டுத் தீபோல் ஊரெல்லாம் பரவிற்று.

ஜாமீனில் விடுவிக்க முடியாதபடி குற்றம் செய்திருந்த கந்தனை யாராலும் விடுவிக்க முடியவில்லை. முதல் மனைவி ஒருபுறம் அழ, நாட்டாண்மைக்காரர் மகள் வீராயி (கந்தனது இரண்டாம் மனைவி) ஒருபுறம் அழ, நாட்டாண்மைக்காரர் அவமானத்தால் குன்றிப்போக மற்ற ஊர் ஜனங்கள் எல்லோரும் திகைத்து நிற்க, கந்தனைப் போலீஸ் லாரியில் அழைத்துச் சென்றனர்.

இனிக்கந்தன் எப்படித் திரும்பி வரப்போகிறான்? அவன் செய்த குற்றத்திற்கு மரண தண்டனையோ, ஆயுடகால சிறைவாசமோ அவனுக்குக் கிடைத்துவிடும்.

இந்தக்கூத்தையெல்லாம், ஒன்றுவிடாமல் கவனித்து வந்த ரங்கசாமியும், அஞ்சலையும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். நல்லகாலம்! நாம் இந்த சூழ்ச்சிவலையில் சிக்காமல் தப்பித்துக்கொண்டோம்'' என்றுதான் அதற்கு அர்த்தமிருக்க முடியும்.

அன்று சாயந்திரம் அஞ்சலை மாரியாத்தாள் கோயிலுக்குப் போய் "தாயே! எனக்குக் கல்யாணமும் வேண்டாம், கணவனும் வேண்டாம். கன்னியாகவே இருந்து காலத்தைத் தள்ளிவிடுகிறேன். என்னை என் அப்பனிடத்திலிருந்துமட்டும் பிரித்துவிடாதே'' என்று உள்ளம் உருக வாய்விட்டுப் பிரார்த்தனை செய்ததை கோயில் சுவர்களும் எதிரொலி செய்தன.



19

மழையே, மழையே வா வா!

★

'கால மழை பெய்யவில்லை. எப்படிப் பெய்யும் என்றார் சாஸ்திரியார்' என்றுசொல்லிக்கொண்டே வந்தாள் ஸரோஜா

'சாஸ்திரியார் ஏன் இப்படி அனுதாபம் இல்லாமல் போய்விட்டார்?' என்று கேட்டுக்கொண்டே, ஸரோஜா வுக்குச் சமீபத்தில் உட்கார்ந்தாள் கமலா.

'சாஸ்திரியார் அனுதாபம் இல்லாமல் போய்விடவில்லையம்மா! அனுதாபமும் அவரைவிட்டுப் போய்விடவில்லை' என்றாள் ஸரோஜா.

அப்படியானால் மழை பெய்யாமலிருப்பது குறித்துச் சாஸ்திரியார் ஏன் திருப்தி அடையவேணும்?' என்று கேட்டாள் கமலா.

'திருப்தி அடையவில்லை; உலகம் போகிறபோக்கைக் குறித்துத் தான் தம் அதிருப்தியை அப்படி வெளியிடுகிறார்' என்றாள் ஸரோஜா

அதற்கும் மழைக்கும் என்ன சம்பந்தம்? உலகப்போக்கிற்கும் மழையின் வருகைக்கும் ஏதோ சம்பந்தம் உண்டென்று நினைக்கிறாயா?' என்று கேட்டாள் கமலா.

'இது கூட உனக்குத் தெரியாதா. என்ன? நமது ஜம்புலிங்க சாஸ்திரியார் மட்டுமா இப்படி நினைக்கிறார்? நம்முடைய சாஸ்திரங்கள் மனிதனுடைய ஒழுக்கத்திற்கும் மழை முதலான இயற்கை நிகழ்ச்சிகளுக்கும் தொடர்பு கற்பிக்கவில்லையா?' என்றாள் ஸரோஜா.

'எனக்கு இதெல்லாம் தெரியும் அம்மா. மகாத்மாகாந்திகூடத்தான் பீஹார் பூகம்பத்திற்கு மக்களுடைய பாவச் செயல்களை ஒரு காரணமாகக் காட்டினாரென்று எனக்கு ஞாபகம் வருகிறது. ஆனால் மண்ணிலுள்ள பாவிகளைக் கண்டு மழை கூட இறங்கிவரப் பயப்படுகிறதென்று மகாத்மாகூடச் சொல்லியிருப்பதாகத் தெரியவில்லை ஆனால் சாஸ்திரங்களையெல்லாம் படித்தவரா மகாத்மா?

ஜம்புலிங்க சாஸ்திரிதான் எத்தனை சாஸ்திரங்களைக் கரைத்துக் குடித்துவிட்டார்? "சாஸ்திரி மகன் சாஸ்திரி" என்ற பெருமைதானே? அவர் தகப்பனார் ஆகாசலிங்க சாஸ்திரியார்தான் சாஸ்திர ஞானி என்கிறார்கள் அவருக்கு சாஸ்திர வாசிப்பேதான் உண்டு சாஸ்திர வாழ்வு வாழ்ந்தவர் காந்திஜிதானே?

'போகட்டும், மகாத்மா சொன்னாலுங்கூடப் பாவச் செயல்களுக்கும் இயற்கை நிகழ்ச்சிகளுக்கும் தொடர்பு இருக்கமுடியுமென்று என்றால் நம்பமுடியவில்லை எந்த விஞ்ஞானி நம்புவார்? விஞ்ஞான மனப்பான்மையுள்ள எவர்தான் நம்பமுடியும்? உலகம் பொய்த்தது ஆகவே வானமும் பொய்த்தது என்று சொல்வதில் கவிதை இருக்கலாம், மனோ பாவம் இருக்கலாம், பக்தி இருக்கலாம், பகுத்தறிவு இருக்கமுடியுமோ?' என்றாள் கமலா.

'மண்ணும் பொய்த்தது. விண்ணும் பொயத்தது என்று சொல்வது அழகாயில்லையா?' என்று கேட்டாள் ஸரோஜா.

பிராஸம் இருக்கிறது. ரீஸன் (Reason) இருக்கிறதா?' எதிர்க் கேள்வி போட்டாள் கமலா.

'பிராஸம் அழகு இல்லையா? அழகு உண்மை இல்லையா?'

நம்முடைய தமிழ்நாட்டுப் பகுத்தறிவு ஒருபோதும் இந்த அழகை யாவது. உண்மையையாவது நம்பப் போவதில்லை; பிராஸத்தை நம்பி மோசம் போகாது"

'அப்படியா சொல்லுகிறாய்? நம்முடைய முதல் மந்திரியார் என்ன சொல்கிறார் தெரியாதா உனக்கு? என்றாள் ஸரோஜா.

'பிராஸத்தை நம்பி மோசம் போகச் சொல்கிறாரா. என்ன?' என்று கேட்டேன் நான்

ஸரோஜா சிரித்துக்கொண்டே, பிரதமருக்குப் பிராஸம் பிடிக்காது, 'ரீஸன்' பிடிக்கும் எனினும் இந்த மாகாண வாசிகள் செய்த பாவம் தான் வானம் பொய்த்ததற்குக் காரணம் என்று பொருள்படக் கொஞ்ச காலத்திறகுமுன் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்' என்றாள்.

'பகுத்தறிவாளராயினும் நல்ல பக்தர் நமது முதல் மந்திரியார்' என்றேன் நான்

'நல்ல காந்தி பக்தரும்கூட' என்று கமலாவும் ஒப்புக்கொண்டாள்.

'அதனால்தான் காந்தியடிகளைப் போல் நமது பிரதமரும் இயற்கை நிகழ்ச்சிகளுக்கும் மனிதனுடைய பாவபுண்ணியங்களுக்கும் ஏதோ தொடர்பு இருக்கலாமென்று நம்புகிறார்' என்றேன் நான்.

'ஆனால் மழை பெய்வதற்காகக் கோயில்களில் விசேஷமான பிரார்த்தனைகள் நடத்த வேணுமென்று பிரதமர் கட்டளையிட்டிருக்கிறாராமே?' என்றாள் கமலா.

'நல்ல பக்தர். காந்தி பக்தர் பிரார்த்தனையில் நம்பிக்கையுள்ளவர் தானே' என்றேன் நான்.

கமலாவோ, 'இது போன்ற பிரார்த்தனைக்குக் கடவுள் இரங்குவாரா? வானம் இரங்குமா? மழை இறங்குமா?'' என்று கேள்விகளை அடுக்கினாள்.

'பாவிகளுக்குப் பிரார்த்தனை மிகவும் அவசியமானதல்லவா? உள்ளுருகிப் பச்சாத்தாபத்துடன் கண்ணீர் சொரியப் பிரார்த்தனை செய்வது நல்லதுதானே' என்றேன்.

'வேறு மழை இல்லாவிட்டாலும் கண்ணீர்...மழை நிச்சயம் தான்' என்றாள் கமலா.

'அதுதான் என்ன நிச்சயம்? கண்ணீர் மழைக்கும் கால்பலம் மிளகு தேவை இன்றைய பக்தருலகத்திலே! அப்படி வறண்டிருக்கிறது மனித இதயம், ஸஹாரா வனம்போலே!' என்றாள் ஸரோஜா.

'நீ நினைக்கிறபடி அவ்வளவு மோசமாகிவிடவில்லை மனித இதயம் இன்றைய நிலையிலும் நல்லவர்கள் வேறு இல்லையென்றா சொல்லுகிறாய்? எத்தனையோபேர் அங்கும் இங்கும் இருக்கத்தான் செய்கிறார்கள்' என்றேன் நான்

'நல்லார் ஒருவர் இருந்தாலும் போதுமே: ''நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை!'' என்றாள் கமலா.

இப்படிக் கவிகளையும் பரிகசிப்பதுதானா பகுத்தறிவு?' என்றேன் நான்.

'இதில் என்ன பரிகாசம் இருக்கிறது? விஷயத்தைத் தெளிவுபடுத்திக் கொள்ளப் பார்க்கிறோம் தாம் ஒருவர் நல்லவராயிருப்பதால் மழை பெய்யுமென்று யாரும் நம்பிவிடவில்லை எல்லாரும் கோவில்களில பிரார்த்தனை செய்தால் அந்தப பிரார்த்தனைகள் பாவங்களையும் வெட்டி வீழ்த்தி. மேகங்களையும் வெட்டி மழையாக வீழ்த்திவிடும் என்று பக்தர்கள் நம்பக்கூடாதா? பக்திக்கும் நம்பிக்கைக்கும்தான் எல்லையில்லையே!' என்றாள் ஸரோஜா.

'இவ்வளவு நம்பிக்கையும் நம்முடைய குலதனம்தானே. மழைக் கடவுளுக்குப் பிரார்த்தனை செலுத்துவதால் மழை வரும் என்று தமிழ் நாட்டுப் பெரும் பக்தமணிகளான மாணிக்கவாசகரும் ஆண்டாளும் நம்பவில்லையா? ஆண்டாளின் திருப்பாவையிலும் மணிவாசகப் பெருமானின் திருவெம்பாவையிலும் 'மழைப் பாட்டு'' இல்லையா?' என்றாள் கமலா.

அதற்கு ஸரோஜா 'அந்தப் பக்தமணிகளுக்கு வானம் இரங்கும், மழையாக இறங்கிவரும் என்பதை நமது ஜம்புலிங்க சாஸ்திரியாரும் ஒப்புக்கொள்கிறார்'' என்றாள்.

'அந்தக் காலத்துப் பக்தமணிகளுக்கு வானம் இரங்கி மழை சுரக்கும் என்றால், இந்தக் காலத்துப் பக்தமணியாயிருப்பவருக்கும் வானம் மழை சுரக்க வேண்டியதுதான் பட்சபாதம் இல்லாத மேகத்திற்கும் 'அந்தப் பக்தமணி இந்தப் பக்தமணி'' என்ற பட்சபாதம் கற்பிக்க முடியுமா? சாஸ்திரியார் அன்றைய பக்தியால் மழை பெய்ததென்று நம்பினால் இன்றைய பக்தியால் மழை பெய்யுமென்றும் நம்பித்தானாகவேண்டும்' என்றாள் கமலா

தெய்வம் தொழாஅள்,
கொழுநற் றொழுதெழுவாள்,
பெய்யெனப் பெய்யும் மழை

என்று குறள் சொல்லுகிறதே என்றால் அப்படி மழை பெய்யும் என்பதைத்தான் பகுத்தறிவாளர்கள் ஒப்புக்கொள்வார்களா—? என்று கேட்கப்போகிறாய்' என்றேன் நான்

'இதுவும் மூட நம்பிக்கைதான் என்றே பகுத்தறிவாளர்கள் சொல்லுகிறார்கள். மூட நம்பிக்கைகளை ஒழிப்பதற்காகப் பெரிய பெரிய இலக்கியங்களையும் தியாகம் செய்ய வேண்டியதுதான், தீயில் போட வேண்டியதுதான்!— என்கிறார்கள்' என்றாள் ஸரோஜா

அதிசயமான தியாகபுத்திதான் அது! இருககட்டும். ஒரு வேளை பிரார்த்தனை- முயற்சிகளுக்கும் இந்து மத பரிபாலன சபையினரின் பிரார்த்தனை-உத்தரவுகளுக்கும் பயந்து-மழைக்கடவுள்......' என்று கமலா சொல்லிக்கொண்டிருக்கும் போதே ஸரோஜா குறுக்கிட்டு 'பயந்தன் வருவானா. ஓடிப்போவானா?' என்று கேட்டாள்.

அதற்குநான் 'அதிக பயமிருந்தால் அப்படியே இறங்கி விழுந்துவிடுவான் என்றேன்

ஒரு வேளை இந்தப் பிரார்த்தனைகளுக்குப் பயந்து மழை ''கொட்டு கொட்டு'' என்று கொட்டிக் கொண்டே இருந்தால்''? என்று கேட்டாள் கமலா.

'அப்போது மழையை நிறுத்தும் பிரார்த்தனைகளுக்கு உத்தரவு கிடைக்கும் ''மழையே மழையே! வா வா'' என்று பிரார்த்தித்த வாயால் ''மழையே, மழையே! போ போ'' என்று கூட மந்திர உச்சாடனங்கள் செய்யவேண்டி வந்தாலும் வரும்' என்றேன் நான்.



''ஏம்ப்பா! பாட்டுக் கச்சேரி இருக்குன்னு சாக்கு சொல்லி கிரிக்கெட்டுக்கு கூட்டிண்டு போக மாட்டேங்கிறயே! இந்த மாமா கச்சேரிக்கு கூட்டாயமா போகப்போறதுல்லேன்னு சொன்னயே. இன்னிக்கு கிரிக்கெட்டுக்குப் போகலாமாப்பா...!''

நாமொன்று நினைக்க..!

ய. மகாலிங்க சாஸ்திரிகள் எம். ஏ., பி.எல்.

அன்று வேங்கிட சுப்பையர் ஆபீஸிலிருந்து வீடுவரும்போது ராமநாதனும் அவருடன்கூடவே காரில் வந்தான். கோர்ட்டு விவகாரம் ராஜிப்பேச்சுக்களில் முடிந்தது. அழகிரி உஷாவுக்கு ரூ 5000மும் ராமநாதனுக்கு ரூ 1000மும் கொடுத்துவிட்டால் கேஸை வாபஸ் வாங்கிக்கொள்வதாய் ராமநாதனின் வக்கீல் அழகிரியின் வக்கீலுக்கு உறுதிகூறினார். இந்தச் சம்மதத்தின் பேரில் கேஸ் பைஸல் செய்யப்படுவதற்காக மறுநாளைக்கு ஒத்திப் போடப்பட்டது.

இரண்டு குற்றவாளிகளும் தக்க ஜாமீன்களின்பேரில் விடப்பட்டனர்.

இரவு பொன்னுசாமிபிள்ளை வேங்கிட சுப்பையரைக் காணவந்தார். அழகிரிதானே நேரில் வரமுடியாததற்கு பல காரணங்களைச் சொல்லியனுப்பியிருந்தான். பொன்னுசாமி பிள்ளையிடமிருந்து ஐயர் அனுமதியின்பேரில் சிவராமன் ரூபாய் ஐயாயிரத்துக்கு ஒரு செக்கையும் ராமநாதன் ரூபாய்ஆயிரத்துக்கு ஒரு செக்கையும் பெற்றுக்கொண்டார்கள். பின்பு, உஷாவின் விவாகத்திற்குவெகுமதியாக அனுப்பப்பட்டிருந்த பட்டுப் புடவை முதலியவற்றை உஷாவிடம் கொடுத்துவிட்டு பொன்னுசாமி பிள்ளை எல்லாரிடமும் விடைபெற்றுக்கொண்டு வீடு சென்றார்.

இதன் மத்தியில் ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர் வந்திருந்தார். அவரிடம் ஐயர் கி முத்துசாமியின் ஜாதகத்தைப்பற்றி பிரஸ்தாபித்தார். "நான் அவள் ஜாதகத்தை வரவழைத்து வைத்திருக்கிறேன். நாளை அதற்கு ஒருகாபி எடுத்துத் தங்களுக்கு அனுப்புகிறேன்." என்று ஹெட்மாஸ்டர் ஐயரிடம தெரிவித்துக்கொண்டார். ஐயர் தன் மைத்துனன் பெண் செல்லத்திற்காக அந்த வரனை உத்தேசித்திருப்பதாயும், ஜாதகப் பொருத்தமாயிருந்தால் சிவராமனை நேரில் முத்துசாமியின் உறவினர்களிடம் அனுப்பி விவாஹ நிச்சயம் செய்ய முயற்சி எடுத்துக் கொள்ளப் போவதாயும் ஹெட்மாஸ்டரிடம் சொன்னார். ஹெட்மாஸ்டர் முத்துசாமியின் குணங்களையும் யோக்யதையையும் வாயாறப் புகழ்ந்தார். பல கன்னிகைகளுக்குப் பிதாவும் கார்டியனுமான அவருக்குத்தான் குறிவைத்திருந்த வரனை வெகு லேசாக வேறொருவர் அடித்துக்கொண்டு போவதில் ஏமாற்றமிருந்தாலும் அதை அவர் வெளிப்படையாகக் காண்பித்துக் கொள்ளாமல் உத்சாகத்தையே அபினயித்துக்கொண்டு தன்னால் இயன்றமட்டும் மேல் ஆகவேண்டியதற்கு உதவியாயிருப்பதாய் வாக்கு தத்தம் செய்தார்.

மறுநாள் பொழுது கார்யஸித்திக்கென்றே விடிந்ததுபோலிருந்தது. முதலில் பாக்யலக்ஷ்மியின் வீட்டு வேலைக்காரி வீட்டுத் திறவுகோலை உஷாவிடம் கொடுக்க வந்தாள். அழகிரி முதலியவர்கள் பம்பாய்க்குப் புறப்பட்டுப் போய்விட்டார்கள். பொன்னுசாமி பிள்ளையும் தன் ஊருக்குப் பிரயாணமானார். உஷா வசிப்பதற்காக வீடு அவள் வசம் விடப்பட்டது. உஷா அங்கு வந்து எப்போதும்போல் வசிப்பதானால் வேலைக்காரி தானும் துணைக்கு இருப்பதாய் தெரிவித்துக்கொண்டாள். இந்த விருத்தாந்தம் எல்லோருக்கும் மிகுந்த திருப்தியை அளித்தது. பாக்யலக்ஷ்மி மதிப்புக்குரியவள் என்று எல்லோரும் ஏகமனதாய் ஒப்புக்கொண்டார்கள். சிவராமன் உஷாவை ஜாகைகொண்டுபோய் வைக்க நியமிக்கப்பட்டார்.

முத்துசாமியின் ஜாதகம் கைக்கு வந்ததும் செல்லத்தின் ஜாதகத்துடன் அது ஜோஸ்யரிடம் அனுப்பப்பட்டது. ஜோஸ்யரின் தீர்ப்பு மங்களகரமாகவே இருந்தது. முத்துசாமியின் தாயாரையும் உறவினரையும் கண்டு கல்யாணப்பிரஸ்தாபங்களைச் செய்யச் சிவராமன் அன்று இரவே புறப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

ராமநாதன் அழகிரியின் பேரில் தான் கொடுத்திருந்த கிரிமினல் கம்ப்ளெயிண்டை வாபஸ் பெற்றுக் கொண்டான்.

ரூ. 5000-க்கு அழகிரி கொடுத்திருந்த செக் உஷாவுக்காக கார்டியன் முறைமையில் சிவராமன் பேரில் பாங்கில் கட்டப்பட்டது. ராமநாதனுக்கு அழகிரி கொடுத்திருந்த ஆயிர ரூபாய் செக் பாங்கில் வேங்கிட சுப்பைய்யர் கணக்கில் கட்டப்பட்டது.

வேங்கிட சுப்பைய்யர் சியாமளாம்பாபுரம் மணி சாஸ்திரிகளுக்கு அவருடைய டிராப்டு பணத்தை மறுபடி ஒரு டிராப்டு மூலமாகவே திருப்பி அனுப்பி சமாதானமாக ஒரு கடிதமும் எழுதினார்.

சேஷசாஸ்திரிகளுக்கு ஐயர் அவர்கள் அன்றெழுதிய கடிதத்தில் ஸீதாராமனை உடனே புறப்பட்டுவரச் செயயும்படி வற்புறுத்தினார்.

காரியங்களின் சுறுசுறுப்பினால் காலம் விரைந்து செல்வதுபோல் காணப்பட்டது.

ராமநாதனுக்காக உத்தேசிக்கப்பட்டிருந்த அச்சாபீஸ் வீடு முதலியவற்றின் கிரயசாஸனம் இரண்டொரு தினங்களில் முடிவுபெற்றது. அவனுடைய ரிஜிஸ்டர் விவாஹத்தை முன்னிட்டு அவனுக்கு ஒதுக்கப்பட வேண்டிய ரொக்கத்தொகையையும் ஐயர் அவர்கள் திரட்டி ஒன்று சேர்த்துபாங்கில்தயாராகவைத்தார்.

ஸீதாராமனும் ஐயர் லெட்டர் பார்த்ததும் புறப்பட்டு மதராஸ் வந்து சேர்ந்தான். அவன் எப்போதும்போல் அவ்வீட்டிற்கு உரியவனாகவே எல்லோராலும் வரவேற்கப்பட்டான். ஸீதாராமன் தன் படிப்பைத் தொடர்ந்துகொண்டான். ராமநாதன் படிப்பைபற்றி யாரும் கவலைப்படவில்லை. அவன் வாழ்க்

கைப்பொறுப்புள்ளவனாக ஆகிவிட்டான். உஷா தனி ஜாகை போனதிலிருந்து அவன் விவாகப் பதிவுக்கு நாட்களைக் கணக்குப் பண்ணிக்கொண்டிருந்தான். ராமநாதன் தன் சிக்கல்களிலிருந்து அனாயாசமாய் வெளியேறினதுமல்லாமல் ஸகல மனோரத பலிதத்துடன் வெற்றிகரமாய் விளங்குவதைக் கண்டு ஸீதாராமன் அவனை, 'ராமனாதா! நீ எப்படியும் அதிர்ஷ்டசாலிதான்'' என்று கூறிப் பெருமைப்படுத்தினான். அவர்களிடையே பழைய சிநேகம் ஊற்று ஜலம் போல் இயல்பிலேயே பெருகியது.

காந்திபதிக்குச் சித்திரை முதலில் முகூர்த்த தினம் குறிப்பிடப்பட்டது. சம்பந்திகளும் சம்மதிக்கவே கல்யாணக் காரியங்கள் மும்முரமாய் நடக்கத் துவங்கின. செல்லத்தின் விவாகப் பிரயத்தனமும் ஸபலமாயிற்று. சிவராமன் நிச்சயப் பாக்கு வெற்றிலையைச் சம்பந்திகளிடம் வாங்கிக்கொண்டு தன் சம்சாரத்துடன் பட்டணம் வந்து சேர்ந்தார். முத்துசாமி ஹெட்மாஸ்டர் வீட்டிலேயே இருந்து மீதமுள்ள ஒரு மாதத்தைத் தள்ளிவிடப் பிரியப்பட்டதால் சிவராமன் அவனை அடிக்கடி போய் விசாரித்து வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுத்துக்கொண்டிருந்தார்.

முதல் முதல் உஷாவுக்கும் ராமனாதனுக்கும் பதிவு விவாஹம் பங்குனி மாதத்திலேயே நடந்தேறியது. சிவராமன் உஷாவுக்கு கார்டியனாகக் கையொப்பமிட்டார். கோபினாத் ஒரு சாட்சி. மற்றொரு சாட்சி வக்கீல் விசுவனாதையர். சீதாராமன் மாப்பிள்ளைத் தோழனாகப் பிரஸன்னமாயிருந்தான். ஆடம்பரமற்ற விவாகச் சடங்கு! கொண்டாட்டம் மிதமானது! அதில் கலந்துகொண்டவர்களுக்குப் பரிசாரகர்களைக் கொண்டு அன்றிரவு உஷாவின் கிருகத்தில் ஒரு விருந்து ஏற்பாடு செய்யப்பட்டது.

ராமனாதன் உயரிய தோரணையில் தன் தனி வாழ்க்கையைத் துவக்கினான்.

அடுத்தபடியாக **பத்மா-சக்ரபாணி** விவாகம் பம்பாயில் நடந்தது. அதைப்பற்றிய அறிக்கை தபால் மூலம் வந்ததும் **மிஸ்ஸஸ் உஷா ராமனாதன்** பத்மாவுக்குத் தன் மனப்பூர்வமான ஆசீர்வாதத்தைத் தந்தி மூலம் தெரிவித்துக்கொண்டாள்.

* * * * *

காலேஜ் லெக்சரர் சர்மா ஹாஸ்டலுக்குக் குடி போய்விட்டாலும் கமலியை மறக்கவில்லை. கமலி, சூர்யநாராயண அய்யரின் மூத்த சம்சாரத்தின் பெண். குழந்தைப் பருவத்திலேயே தாயை இழந்தவள். சூர்யநாராயணய்யரின் இரண்டாவது சம்சாரம் கீழ்ப்பட்ட நிலைமையிலிருந்து சம்பத்துள்ள குடும்பத்திற்கு எஜமானியானதும் தன்னுடைய அற்ப புத்தியையும் கொடூரங்களையும் கமலியின் விஷயத்தில் வெளிக்காட்டி ஒரு துர்தேவதைபோல் அந்தக் குழந்தையை ஆட்டிவைத்தாள். சூர்யநாராயண அய்யர் தான் மறுவிவாகம் செய்துகொண்டது பற்றி மிகவும் வருந்தினார். ஆனால் இளையவளுக்குப் பிள்ளைகளும் பெண்களும் வரிசையாக உண்டாகவே ஐயர் அவளை அடக்கியாள முடியாதவரானார். கமலிக்கு விவாகத்தைப்பண்ணிப் புக்ககம் அனுப்பிவிட்டால் கவலை தீரும் என்று அவர் நம்பியிருந்தார். நல்ல வரனைத்தேடி நன்றாகச் செலவு செய்து அவளை விவாகம் செய்து கொடுத்தார். ஆனால் கமலியின் விஷயத்தில் தெய்வ ஸங்கல்பம் மாற்றாந்தாயினுடையதைவிடக் கோரமாயிருந்தது. அவள் மணாளன் விவாகமான இரண்டு வருஷங்களுக்குள் பரலோகம் சென்றான். கமலி வீட்டிற்கு வந்தது முதல் சூர்யநாராயண அய்யருக்கு சுகமில்லை. கல்லும் கரையும் பரிதாபத்திற்குள்ளான கமலியிடம் மாற்றாந்தாய் நிர்தாக்ஷண்யமான சத்ரு பாவனையையே காட்டி வந்தாள். அவள் குழந்தைகள்கூட கமலியை உதாசீனம் செய்தன. சூர்யநாராயண அய்யரை மனோவியாதி பிடித்துக்கொண்டது. அது முதலே அவர் வியாதிகளினால் பீடிக்கப்பட்டு வைத்தியத்திற்கு ஊர் ஊராகப் புறப்பட்டார். அவர் வீட்டிலிருப்பதற்கு அருவிருப்பு பட்டுக்கொண்டே அவ்விதம் வைத்தியத்தைச் சாக்கிட்டு வெளிக்கிளம்பினார் என்று சொல்லலாம். அவருடன்கூடவே கமலி போய்க்கொண்டிருந்தாள். இளையவளும் அவளுடைய சந்தானங்களும் கமலிக்காகவும் சூர்யநாராயண அய்யருக்காகவும் அதிகம் கவலைப்படவில்லை. ஐச்வரியமும் சிப்பந்திகளும், வீடு மனைகளும், மாடு கன்றுகளும் யதேஷ்டமாயிருந்ததால் சுகபோகங்களுக்கும் நாட்டாண்மைக்கும் குறைவில்லை. ஐயரும் தனக்குவேண்டிய பணத்தை எடுத்துக்கொண்டு தன் பந்துக்கள் மித்ரர்கள் இருக்கும் ஊர்களுக்கு வைத்தியத்தைச் சாக்கிட்டுக் கமலியுடன் அடிக்கடி பிரயாணம் போய்க்கொண்டிருந்தார். ஐந்தாறு வருஷங்கள் இப்படிக் கழிந்தன. பின்பும் அய்யருக்கு தேக நிலை ஒழுங்குபடவில்லை. வியாதியின் அசௌகரியங்கள் அதிகரித்தன. மதராஸில் இருந்து வைத்தியம் செய்துகொள்வதற்காக அவர் அங்கு ஒரு வீட்டை அமர்த்திக்கொண்டு கமலியுடனும் ஒரு வேலையாளுடனும் ஜாகை வந்தார். டாக்டர்களும் மருந்துக் கடைக்காரர்களும் ஏராளமாக ஐயரின் பணத்தைச் சாப்பிட்டார்கள். ஆனால் ஐயருக்கு உடல்நிலை வரவர மோசமாகிக்கொண்டு வந்தது. ஐயர் பட்டணத்தில் எப்படி இருக்கிறார் என்று அறிந்துகொள்ள அவர் இளைய சம்சாரம் தன் உடன் பிறந்தானை ஒருமுறை இரண்டுமுறை அனுப்பினாள். அவர் செய்துகொண்டிருக்கும் செலவை அவள் சகிக்கவில்லை. ''ஊரில் இருந்து வைத்தியம் செய்துகொண்டால் போதாதா? இப்படிப்பணத்தை வாரியிறைக்க வேண்டுமா'' என்று குற்றம் சொல்லிக்கொண்டிருந்தாள். தன்னை அவருக்கு ஆகவிடாமல் கமலி செய்துவிட்டாள் என்று பறை அறைந்து கொண்டு கமலியை 'வாழாவெட்டி'' என்றும் 'தொடைகாலி'' என்றும் கண்டவர்களிடம் எல்லாம் தூற்றிக்கொண்டிருந்தாள். சூரியநாராயண அய்யர் தன் ஜீவன் பிரியும்வரை தன் இளைய சம்சாரமும் அவள் குழந்தைகளும் தன் அருகில் வரக்கூடாதென்று சபதம் கூறியிருந்தார். அவருக்கு உடம்பு நிலை மோசமாக மோசமாக தன் குடும்பத்தில் வெறுப்பு அதிகரித்துக் கொண்டே வந்தது.

அவர் குடியிருந்த தெருவில் இன்ஷ்யூரன்ஸ் நாராயணசாமி அய்யர் என்று பெயர் வழங்கப்பெற்ற அவருடைய பந்து ஒருவர் வசித்துவந்தார். அவர் சூரியநாராயண அய்யரை அடிக்கடி கவனித்துக்கொண்டதுமல்லாமல் அவருடைய வீட்டுப் பெண்டுகள் கமலியை அதைரியப்படாமல் அடிக்கடி கவனித்துக் கொண்டு சமாதானம் செய்து வந்தார்கள்.

சர்மாவிற்கு தண்டனை அளித்த தினத்திற்குப் பின் சில நாட்களில் சூரியநாராயண அய்யர் அடிக்கடி பிரக்ஞாபங்கம் அடைவது ஒரு பயங்கரமான அறிகுறியாயிற்று. ஐயரின் பந்துவான இன்ஷ்யூரன்ஸ் நாராயணசாமி அய்யர் ஊருக்குத் தந்தியடிக்க அவசியம் ஏற்பட்டதாக நினைத்தார். டாக்டரும் அதை ஆக்ஷேபிக்கவில்லை. ஆனால் அய்யர் தன் நினைவு வந்தபோதெல்லாம், தன் சபதத்தையே வற்புறுத்தினார். இப்படி சில தினங்கள் கழிந்தன. ஐயர் அறியாமலே ஊருக்கு ஒரு அபாய எச்சரிக்கை அந்த பந்துவால் ரகசியமாய் அனுப்பப்பட்டது. கமலி அதைச் சந்தேகித்தாள். ஐயர் தெளிவுடன் இருக்கும் சமயத்தில் கமலி தன் பிற்காலத்தைப்பற்றிப் பிரஸ்தாபித்து விம்மி விம்மி அழுதாள்.

''தாங்கள் இந்த நிலைமையில் என்னைவிட்டு விட்டால் எனக்கு

ரட்சகன் யார்?'' என்று அவள் கதறினாள். 'உயில் எழுதி வைத்திருக்கிறீர்கள்—எனக்கு ஸமிர்த்தியாய் ஐச்வர்யத்தைக் கொடுத்திருக்கிறீர்கள் எல்லாம் இருந்தும் ஒரு ரட்சகன் இல்லாவிட்டால் என் பணமே எனக்குச் சத்ருவாகும். என்னை மோசம்செய்து என் பணத்தை அபகரிக்கவே பலர் வந்து ஹிதம் போல் சுற்றிக்கொள்வார்கள். சிறுதாயாரும் அவள் வர்க்கமும் எப்போதும் எனக்குத் தீங்கிழைக்கவும் என்னைத் தூற்றவும் கங்கணம் கட்டிக்கொண்டிருப்பார்கள். நான் பணமிழந்து, மானமிழந்து, ஈனமடைந்து, தெருவில் நிர்கதியாய் நிற்கும் வரை அவர்களுடைய துவேஷம் என்னைப் பின் தொடரும். என்னை இந்த ஸ்திதியிலா விட்டுவிட்டுப் போகப்போகிறீர்கள்—அப்பா!'' என்று பிரலபித்தாள்

அவள் பரிதாபத்தைக்கண்டு, ஐயர் மனம் உருகி "கமலி! உனக்கு என்ன நான் செய்யவேண்டும்? சொல். இவ்வளவு காலம் நீ கிலேசப்பட்டாலும் துக்கசாகரத்தில் மூழ்கிக்கிடந்தாலும் அன்பும் ஆதரவும் உதவியும் உனக்கு என்னிடமிருந்து தவறாமல் கிடைத்துக்கொண்டிருந்ததால் ஒரு பக்கத்தில் ஆச்வாசத்திற்கு இடமிருந்தது. இனி அதுவும் அரிதென்றால் நீ எப்படித்தான் ஜீவிப்பாய்? எனக்கும் புரியவில்லை'' என்று சொல்லி அழுதார்.



கமலி—"என்னை யாரிடமாவது நீங்களே ஒப்புவித்துவிடுங்கள்'' என்றாள் உறுதியுடன்.

"நீ உன் புக்ககத்தில் போய் வாழ விரும்புகிறாயா'' என்று கேட்டார் ஐயர்.

"அது சாத்யமில்லை. அங்கு பெரியவர்கள் கிடையாது. மைத்துனர்கள் மூலைக்கு ஒருவராக இருக்கிறார்கள். அவர்கள்பாடே கடினமாயிருக்கிறது என்னை யார்வைத்து ரட்சிப்பார்கள்? மேலும் ஒருவரிடம் ஒண்டிக்கொள்வதானால் அதற்குத் தகுந்தபடி அடிமைத்தனத்திற்கும் உள்பட்டுத்தானிருக்கவேண்டும்''

"உன் தாய்வழி பந்துக்கள் யாராவது உன்னை ரட்சிப்பார்களா?''

"அப்படி ரட்சிக்கக்கூடியவர்களிருந்தால உங்களுக்குத் தெரியாதா. எல்லாம்தான் காலியும் கழிவடையுமாயிருக்கிறதே-அதுகளின் குடும்ப சச்சரவும், ஒழுங்கீனமும் நினைக்கக்கூட வெறுப்பாயிருக்கிறதே''

"பின்னே என்ன செய்யலாம். யார் இருக்கிறார்கள்-நீதான் சொல்லவேண்டும் எனக்கு ஒன்றும் புரியவில்லை'' என்றார் ஐயர் இந்த சம்பாஷணைக்குப் பிறகு ஐயர் ஒரு நாள் தன் பந்துவான இன்ஷ்யூரன்ஸ் நாராயணசாமி அய்யரிடம் தன்னுடைய கவலையெல்லாம் கமலியைப் பற்றித்தான் என்றும் தனக்கு வியாதியே வேறு இல்லை என்றும் கூறினார்

நாராயணசாமி அய்யர் சில பூர்வ பீடிகைகளுடன் கமலி மறுவிவாகம் செய்துகொள்வதுதான் அவளுடைய பிற்கால வாழ்க்கைக்கு சாதகமானது என்று எடுத்துக்காட்டினார். ஐயர் இந்த உபதேசத்தை வெறுத்தார். ஆனால் மெல்ல, மெல்ல கமலிக்கும் மறு விவாகத்தில் அபிப்ராயமிருக்கிறதென்று அவரிடம் அறிவிக்கப்பட்டது.

ஐயருக்கு ஜீவதசை நீடிப்பதில் தைரியம் தளரத் தளர மேற்படி அபிப்பிராயத்திற்கு அவருடைய எதிர்ப்பும் தளர்ந்துகொண்டுவந்தது. கடைசியாக அவருடைய வாழ்நாள் குறுகி டாக்டரும் மணிக் கணக்கில் கெடுவைத்துவிடவே தந்தி தபால்கள் பறந்தன. ஐயரும் தன் அந்திய காலத்தை உணர்ந்து, பக்கத்தில் தனக்கு முன் உயிரை விட்டுவிடுபவள்போல் சோக மூர்ச்சையில் ஆழ்ந்து கண்ணீர் பெருகப் பெருமூச்சுவிட்டுக்கொண்டு தலையணையின்

பேரில் கவிழ்ந்து கிடந்த கமலியைத் தடவிக்கொடுத்து எழுப்பி "கமலி'! உன்னை ஒருவனிடம் ஒப்புவித்து விட்டுப் போனால்தான் என் மனது நிம்மதியடையும்போலிருக்கிறது உன் ரட்சகனை நீயே குறிப்பிடு. நான் இந்த ஜன்மத்தில் கடைசி காரியமாக உன்னை அவனிடம் அடைக்கலம் வைத்துவிட்டுச் செல்லுகிறேன்'' என்று மிக்க ஆயாசத்துடன் வார்த்தைகளைப் புரிந்ததும் புரியாததுமாக உச்சரித்துக்கொண்டு சொன்னார்.

சர்மா, இன்ஷ்யூரன்ஸ் நாராயணசாமி அய்யரிடம் சில காலமாக நட்பு வைத்துக்கொண்டிருந்தான். தன் ஆயுளை இன்ஷ்யூர் பண்ணிக் கொள்வதில் தானே சிரத்தை எடுத்துக்கொணடான் அவரிடம் அடிக்கடி பழகுவதும் அவரோடு கூடவே ஊர் சுற்றுவதும் அவனுக்கு முக்கிய அலுவலாகவிருந்தது. மெல்ல மெல்ல அவரிடம் தன் சரித்திரத்தை உள்ளபடியே சொல்லிவைத்தான் தான் அடிக்கு இரண்டடி வாங்கினதையும் ஒளிக்கவில்லை.

நாராயணசாமி அய்யர் தன்வீட்டுப் பெண்டுகள் மூலம் கமலிக்கு சர்மாவிடம் ஒரு நோக்கம் இருப்பதாக அறிந்துகொண்டிருந்தார்.

சூரிய நாராயண அய்யர் தன் கடைசி மனோபீஷ்டத்தைக் கமலியிடம் சொல்லும்போது நாராயணசாமி அய்யர் அங்கேதான் இருந்தார். சர்மா அவருடன் அடிக்கடி அந்த வீட்டிற்கே வந்துகொண்டிருந்தாலும் சூரிய நாராயண அய்யர் படுத்திருந்த அறைக்குவர அவன் துணிந்ததில்லை அன்றும் அவன் வாசலில் தான் இருந்தான் நாராயணசாமி அய்யர் அவனை உடனே உள்ளே அழைத்துவந்தார் சர்மா வியாதிஸ்தரின் சமீபம் சென்று சோகத்துடன் அவர் முகத்தைப் பார்த்தான். மற்றொரு பக்கத்தில் உட்கார்ந்துகொண்டிருந்த கமலி தலைநிமிரவேயில்லை

ஐயர் இரண்டொரு நிமிஷம் கழித்துச் சிறிது கண்ணைத்திறந்தார் நாராயணசாமி அய்யா சர்மா வந்திருபபதை ஐயருக்குத் தெரிவித்தார் ஐயர் சர்மா முகத்தைப் பார்த்தார் சர்மா அழுதுகொண்டிருந்தான். ஐயர் கமலியைப் பார்த்தார்.

"அப்பா? என்ன வேண்டும்?'' என்று கேட்டுவிட்டுக் கமலி கோவென்று அலறினாள்.

அப்போது ஊரிலிருந்து வரும் ஐயரின் ஜனங்கள் வண்டியிலிருந்து இறங்கும் சப்தம் வெளியே கேட்டது.

ஐயர் தன் வலதுகையில் கமலியின் ஒரு கரத்தைப் பற்றிக்கொண்டார் அவர் தன் இடது கையால் சர்மாவின் ஒரு கரத்தைப் பிடித்தார். தன் இரு கைகளையும் தன் மார்பின் மேல் ஒன்று சேர்க்க அவர் இழுக்கப் போகிறவர்போல் காணப்படடார் ஆனால் அந்த நிமிஷம் கண்களைப் பளிச்சென்று திறந்து கடைசியாக மூடிவிட்டார்.

பக்கத்திலிருந்தவர்கள் "தீர்ந்து போய்விட்டது'' என்று சொன்னார்கள். உடனே அழுகைக் குரல்கள் ஒன்றின்பின் ஒன்றாய் விகாரமாக எழுந்தன.

வாசற்படி ஏறிய ஐயரின் இளைய சம்சாரம். அவள் குழந்தைகள், சகோதரன், எல்லோரும் அதில் கலந்து கொண்டு இடி முழக்கம்போல் ஒப்பாரி வைத்துத் தெருவை இரண்டு செய்துவிட்டார்கள்.

மேலே நடத்த வேண்டிய காரியங்களைப் பொறுப்பாளிகள் நடத்திக் கொண்டார்கள். அன்றைக்கு மூன்றுவது நாள் வந்த ஜனங்கள் கமலியுடன் ஊர் போய்ச் சேர்ந்தார்கள்.

சர்மா அந்த வீட்டைத் தானே வாடகைக்கு ஒப்புக்கொண்டான் ஒரு மாதத்திற்கெல்லாம் கமலியுடன் அவன் அங்கே குடித்தனம் செய்யத் துவக்கினான்.

இவர்களின் ரிஜிஸ்டர் விவாகம் இன்ஷ்யூரன்ஸ் நாராயணசாமி அய்யரின் ஆதரவில் நடந்தது.

(தொடரும்)

சிறு விளம்பரங்கள்

சக்தி ஆருடம்!

தபால், தந்தி இலாகா ஆபீசர் Sri K. S. சுப்பய்யா B. A., 23—5—48ல் எழுதுகிருர்:—"தாங்கள் கூறியபடியே நான் பிரமோஷனுடன் கெஜட் பதவி உத்தியோகம் பெற்றேன்."

3 எதிர்கால கேள்விகளுக்கு ரூ 1. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணு 8. 1 வருட பலன் ரூ. 5 ஜாதகம கணிக்க ரூ 2. சக்தி கவசம ரூ. 7—8—0. வி பி. பி. தனி ஜாதகம் அல்லதுகடிதம் எழுதும் நேரம் தேவை. N. B:—வெளி நாட்டிற்கு முன் பணம் தேவை.

சக்தி ஹோம்,
விருத்தாசலம் P. O. (S. I.)

ஆனந்த குஸுமாகர லேகியம்.

இந்த லேகியத்தை முறையே ஒரு மண்டலம் சாப்பிட்டுவருவீர்களாயின் மூத்திர சம்பந்தமான சகல வியாதிகளும் நீரில் சர்க்கரை இருத்தல் உஷ்ண சம்பந்தமான சகல வியாதிகளும், நரம்புத் தளர்ச்சி, பசியில்லா திருத்தல், மலச்சிக்கல், ஞாபகக் குறைவு, பித்தம், காசம் க்ஷயம்போன்ற எல்லா வியாதிகளையும் கண்டித்து சரீர புஷ்டியும் உற்சாகமும் தரக்கூடிய சிறந்த ஔஷதம். பெண்களும் அருந்தக்கூடியது. பத்தியமில்லை.

20 நாட்கள் உபயோகிக்கும் டின் விலை ரூ. 2—8—0

வி. பி. பார்சலில் தேவையுள்ளோர் தபால் செலவு அணு 14 முன் பணம் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். விவரமான காட்லாக் இனம்.

மலையாள மெடிகல் ஹால் (Regd.)
189, வக்கீல் புது தெரு
Post Box No. 27. — மதுரை.

உயர்ந்த ஜவுளிகள் கிடைக்குமிடம்

V. N. சுப்ரமணிய அய்யர் ஜவுளிக்கடை

ராஜ வீதி : கோயமுத்தூர்

H. O. பெரிய தெரு,
கும்பகோணம்.

ஸ்பெஷல் தயாரிப்பு

45''X6 yds. லுங்கி கட்டம் சில்கு சாரி 1-க்கு	ரூ.	10 8
45''X6 yds. தனி. வெள்ளை சாரி 1-க்கு	ரூ.	10 0
45''X6 yds. மூன்று கலர் பிரிண்டட் சில்குசாரி 1க்கு	ரூ.	12 0
36''X3 yds. சிறுமிகளுககு பாவாடை பீஸ 1-க்கு	ரூ.	4 8

குறைந்த விலையில் சொறப நாட்கள் மாத்திரம் வினியோகம் செய்யப்படும்.

வி. பி பி. தனி.

SRI RAM SILK FACTORY,
KOTTAR, S. TRAVANCORE.
ஆபீஸ் ஸ்தாபிதம் : 1924.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்கமெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு வருஷ பலன் எழுத ரூபா 5. ஆருடம் மூன்று கேள்விகளுக்கு ரூபா 2. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

பண்டித காழியூர்
ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
தபோ நிதி, தியாகராய நகர்,
மதராஸ் 17.

ஜீவான்ஜன்



ரசாயனக் களிம்பு
மிருகக் கொழுப்பு சேராதது
ஜலதோஷம், மார்சளி உடம்பு வலி முதலிய சகல வேதனைகளுக்கும் நிவாரணமளிக்கிறது.

சோல் ஏஜண்டுகள்:
K.K. பிள்ளை & கோ
ராயப்பேட்டை, மதராஸ் 14.

பிரபல ஸ்தாபனங்களிடமிருந்து வினியோகஸ்தர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

அறிக்கை

கீழ்க்கண்ட இடங்களில் 1-3-49 முதல் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள எமது ஏஜெண்டுகளின் விலாசங்களைக்கொடுத்துள்ளோம். அவர்களிடம் எமது பத்திரிகைக்குரிய சந்தாத் தொகையைச் செலுத்தி சந்தாதாரர்களாகப் பதிவு செய்துகொள்ளுமாறு நேயர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

பெங்களூர் ஸிடி:

ஸ்ரீ. K. S. கோபாலசாமி ஐயங்கார்,
177, ஸர் புத்தண்ணசெட்டி ரோடு.
சாம்ராஜபேட்டை, பெங்களூர் ஸிடி.

பெங்களூர் கண்டோன்மெண்ட்

ஸ்ரீ. K. R. ஸ்ரீனிவாச ராவ்.
தேவி நியூஸ் ஏஜன்சி,
57, இப்ராஹீம் சாயபு தெரு,
பெங்களூர் கண்டோன்மெண்டு.

சர்க்குலேஷன் மானேஜர்,
சுதேசமித்திரன், விக்டரி ஹவுஸ்,
மவுண்ட்ரோடு, சென்னை.



★

கன்னியப்பன் அவன் பெற்றோர்களுக்கு ஒரே பிள்ளை அவன் தந்தை முருகேசமுதலியார் அவனை மிகவும் செல்லமாக வளர்த்து வந்தார். அவன் கேட்பதை எல்லாம் மறுபேச்சில்லாமல் உடனே வாங்கிக் கொடுத்துவிடுவார். கன்னியப்பனின் தாய் பாகீரதி அவனை மிகவும் அன்போடு வளர்த்து வந்தாள். அவன் கேட்ட தின்பண்டங்களை எல்லாம செய்து தருவாள் இவர்கள் செல்லத்தினால் கன்னியப்பன் மிகவும் பிடிவாதக்காரப் பையனாகவே வளர்ந்து வந்தான் எல்லோரையும் தூக்கி எறிந்து பேசுவான் பெரியோர்கள் என்ற மரியாதை துளியும் இல்லாமல் எவரையும் கண்டபடி திட்டுவான். தன்னையொத்த பிள்ளைகளை சதா துன்புறுத்தி வேடிக்கை பார்ப்பான் வீட்டிலோ அவன் வைத்ததே சட்டம் அவன் பேச்சிற்கு எதிராக ஒருவரும் பேசக்கூடாது முதலியாரோ தன் மகன் இப்படி முரடனாக இருக்கிறானே என்று மிகவும் கவலைகொண்டார்.

அவர்கள் வீட்டிற்கு அடுத்த வீட்டில் இருந்த ராமேசன் என்ற பையன் மிகவும் சாது அவனும் அவனது பெற்றோர்களுக்கு ஒரே பிள்ளை. அதனால் அவனது பெற்றோர்கள் அவனுக்கு அதிக செல்லம்கொடுத்து வீணாக்கிவிடாமல் அவனை நன்றாகவே வளர்த்து வந்தார்கள். ராமேசன் அவன் பெற்றோர்களுக்கு மிகவும் அடங்கின பிள்ளை பெரியோர்கள் சொல் பேச்சைக் கேட்டுக்கொண்டு அவர்களிடம் மிக்க மரியாதையாக நடந்துகொள்வான்.

ஒரு நாள் ராமேசனும் கன்னியப்பனும் தெருத் திண்ணையில் விளையாடிக்கொண்டிருந்தார்



கள். அப்பொழுது காஷாய உடை தரித்த ஒரு பெரியவர் அங்கு வந்தா . அவர் கன்னியப்பனைப்பார்த்து "பையா, உன் பெயர் என்ன ?" என்றார்.

கன்னியப்பன் அவரை ஒரு தடவை ஏற இறங்க பார்த்துவிட்டு, "என் பெயர் ஊமத்தங்காய்" என்று சொல்லிவிட்டு பெரியதாக சத்தம்போட்டு சிரித்தான்.

அதனால் சிறிதும் கோபமடையாத பெரியவர் "மகனே, உன் வீடு இதுதானா?" என்று வினவினார்.

"என் வீட்டைப்பற்றி உனக்கென்ன"? என்று அலட்சியமாகப் பதிலளித்தான் கன்னி.

"பையா, எனக்கு மிகவும் பசியாக இருக்கின்றது உள்ளே சென்று ஒரு கவளம் அன்னம் கொண்டுவந்து போடு" என்றார் பெரியவர்.

'அன்னமாவது, கன்னமாவது, அதெல்லாம் இங்கு ஒன்றுமில்லை போ. நான் விளையாடும் பொழுது என்னை ஒருவரும் தொந்தரவு செய்யக்கூடாது. எனக்கு ரொம்பவும் கோபம் வந்து விடும். இங்கிருந்துபோய் விடு'' என்று அவரை அதட்டினான் கன்னி.

இதை எல்லாம் அருகில் நின்று பார்த்துக்கொண்டிருந்த ராமேசன் அந்தப் பெரியவரைப் பார்த்து "ஸ்வாமி, என்னுடன் வாருங்கள் அடுத்த வீடு எங்கள் வீடுதான். என் பெயர் ராமேசன் தாங்கள் எங்கள் வீட்டிற்கு வந்தால் சாப்பாடு போடுகிறேன்'' என்றான் பெரியவர் மிக்க சந்தோஷம் கொண்டு அவனை வாழ்த்திக் கொண்டே அவன் வீட்டிற்குச் சென்றார். ராமேசன் அவருக்கு வயிறு நிறைய சாப்பாடு போட்டான். பெரியவர் சாப்பிட்டு விட்டு சிறிது நேரம் இளைப்பாறினார். அவர் போகும் பொழுது ராமேசனிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்து, 'தம்பீ, இதை நாளைக் காலையில் பிரித்து படித்துவிட்டு அதன்படி செய்,'' என்று சொல்லிவிட்டுப் போனார்.

மறுநாள் ராமேசன் அக்கடிதத்தைப் பிரித்து படித்தான். அதில் பின்கண்டபடி எழுதியிருந்தது:—தம்பீ, நான் ஒரு பணக்கார வியாபாரி என் மனைவி இறந்துவிட்டாள். எனக்குப் புத்திரபாக்யம் கிடைக்கவில்லை அதனால் நான் என் பணத்தை எல்லாம் ஒரு அண்டாவில் போட்டு இங்கிருந்து 20 மைல் தூரத்தில் இருக்கும் பேயூர் என்ற கிராமத்தில் மாடித்தெருவில் 50-ம் நெம்பர் வீட்டிற்குப் பின்புறம் இருக்கும் ஒரு பெரிய வேப்பமரத்திற்கு அருகில் புதைத்து வைத்திருக்கிறேன் நான் காஷாயம் தரிக்க முடிவும் செய்துவிட்டேன். நான் காஷாயம் உடுத்த மறுநாளே அன்பே வடிவான எந்த ஒரு பையனை காண்கிறேனோ, அவனுக்கே இந்த ஐசுவரியத்தைக் கொடுத்து விடுவது என்றும் தீர்மானித்தேன் ஆதலால், பையா, நீதான் அதற்கு உகந்த பையன் நீ உடனே சென்று அந்த ஐசுவரியத்தை எடுத்துக் கொள் நீ இக்கடிதத்தை அந்த வீட்டு காவலாளியிடம் காட்டினால் அவன் அந்த வீட்டை உன்னிடம் ஒப்படைத்து விடுவான். நீ நீடூழி வாழ்க,'' என்று கண்டிருந்தது.

ராமேசம் மிக்க சந்தோஷம் அடைந்து அக்கடிதத்தைத் தன் தகப்பனாரிடம் காட்டினான். அவர் தன் மகனை அழைத்துக் கொண்டு மேற் குறிப்பிட்ட இடத்திற்குச் சென்றார். மரத்திற்கு சமீபம் தோண்டிப்பார்த்ததில் தங்கம், வெள்ளி நாணயங்களால் நிரப்பப்பட்ட ஒரு அண்டா காணப்பட்டது இவர்கள் கடிதத்தைப் பார்த்ததுமே காவலாளி இவர்களிடம் அந்த வீட்டையும் ஒப்படைத்துவிட்டான். ராமேசனுக்கும் அவன் தகப்பனாருக்கும் ஆனந்தம் தாங்க முடியவில்லை. மறுநாளே அவ் வீட்டிற்குக் குடியேறினார்கள் பணக்காரனாகிவிட்டதால் ராமேசன் துளியும் கர்வம் அடையாமல் முன்போல் அன்பின் வடிவாகவே இருந்தான் இதை எல்லாம் கேள்வியுற்ற கன்னியப்பன் தன் செய்கையினால் வருத்தமுற்றான் மறு தினத்திலிருந்து கன்னியப்பன் தன் மூர்க்கத்தனத்தை விட்டுவிட்டு அன்பின் உருவாக மாறினான்.

தந்தி விலாசம்: "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57.

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்ச்: மன்னார்குடி.)

சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்

பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு

முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

ஸோல் ஏஜெண்டுகள்:—

புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)

B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

Estd: 1920

சேலம் மூன்று தாமரை

பீடிகளை உபயோகித்து,, சந்தோஷமடையுங்கள்

S.A.H

Rgd. No. 2221.

Prop: S அஹமத் உசேன்,
கோட்டை, சேலம். S.I.R.

"விஜய ரக்ஷணி"

(மூலிகா யந்திர தாயத்து)



இந்த கவசத்தை அணிவதால் கிரஹ சாராதி தோஷம் நீங்கும். ஆரோக்யம், குடும்ப க்ஷேமம், கலியாணம், வியாபார லாபம், பகை சமாதானம், உத்யோக உயர்வு, அதிகாரி விஸ்வாஸம், வியாஜ்ய வெற்றி, பண நிலைமையில் சௌகரியம், மற்றும் ஸகல வழியிலும் மேன்மையுண்டாகும். மாணவர்களுக்குப் பரீக்ஷை பாஸாகும். குழந்தைகளுக்கு பாலகிரஹ தோஷம் நீங்கி, ஆயுராரோக்யமுண்டாகும். ஜனன விவரம் அல்லது பெயர், சுமார் வயது, விலாஸம் குறிப்பிட்டு எழுதினால் கவசம் தயார் செய்தனுப்பப்படும்.

விஜய ரக்ஷணி கவசம் 1-க்கு ரூ. 1—8—0
விஜய ரக்ஷணி பிரத்யேக ரக்ஷை 1-க்கு ரூ. 72-8-0
தபால் செலவு தனி.

ஆரூடம் - ஜாதக பலன்

பண நிலைமை, தொழில் மாறுதல், லாப நஷ்டம், காதல், கலியாணம், குடும்பம், ஆரோக்யம், படிப்பு அதிருஷ்ட நாள், எண், நிறம், மற்றும் முக்யவிஷயங்களும் எழுதியனுப்பப்படும். ஜனன கால விவரம் அல்லது முழுப்பெயர், சுமார் வயது, செய்யும் தொழில், கடிதம் எழுதும் நேரம் தேவை. ஒன்று முதல் 5 எதிர்கால கேள்விகளுக்குப் பதில் எழுத ரூ. 2 மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் ரூ. 6. குழந்தைக்கு ஜாதகம் கணித்து ஆயுள், படிப்பு, முக்ய யோகாம்சம் சுருக்கமாக எழுத ரூ. 5. நடக்கும் ஒரு தசைக்கு புக்திவாரி பலன் ரூ. 10. வி. பி. செலவு தனி.

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,
ஹனுமதுபாஸி, திருவல்லிக்கேணி. மதராஸ் 5.

Regd. No. 2514. The Swadesamitran Illustrated Weekly.

இந்த பெயர் . . .

ஸுராஜ்மல்ஸ்
வைர நகை வியாபாரிகள்

உங்கள்

நகைகளுக்கு
கௌரவம்
அளிப்பவை

313, நேதாஜி ரோட்,
மதராஸ்.